ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ௵ பங்குனி ௴ 17௳ (30—3—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 44

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

### மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

### சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தைமுற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது. 2

ஒரு சேர் டப்பி விலை ரூ. —8—0

### மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசி தீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இக்க லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் ச்சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

# வைக்கம்வீரர் வாசகசாலை ஆண்டு விழா

(தலைவர் எஸ் ராமநாதன் அவர்கள் முகவுரை)

தலைவர் முகவுரையாகப் பேசிய தன் சுருக்கம் வருமாறு:—

முன் காலத்தில் ஏதோ நான் ஆற்றிய ஒரு சிறு தொண்டை மிகைபடுத்திக் கூறியிருக்கின்றீர்கள். முன் செய்த ஒரு சிறு தொண்டின்பேரைக் கொண்டு பெருமை சம்பாதிப்பது நம் நாட்டில் வழக்கமாய் விட்டது. சிறந்த தேசத் தொண்டெனக்கருதிய ஒன்றில் பலர் சேர்ந்து கஷ்டநஷ்டங்கள் உற்றனர். அதனால் எப்பயனும் விளையவில்லை. தொண்டில் ஈடுபடுவோர் எவ்வளவு தியாகஞ் செய்யத் தயாராயிருக்கின்றனரோ அவ்வளவுக்கே பலன் கிடைக்கும். பழைய காலங்களில் செய்த தொண்டைப் பற்றி இப்பொழுது பேசுவதில்பயனில்லை. நாங்கள்உங்களுக்குவழிகாட்டியாக வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நம் நாடு இருக்கும் நிலைமையில் தலைவரென வழி காட்டியென ஒருவரைக் கொள்ளுமுன் நீங்கள் நன்கு யோசனை செய்யவேண்டும், புகழைக்கண்டு, வெற்றாரவாரத்தைக்கண்டு ஒருவரைப் பின் பற்றுகிறீர்கள். தற்சமயம் அவர் சொல்வது நல்லதா தீயதா என்று நன்கு பரிசீலனை செய்யுங்கள். நல்லதாகத் தோன்றினால் அதைச் செயலிற்காட்டுங்கள்.

சாதாரணமாக வாசகசாலைகள் ஏற்படுத்தினால் ஒரு மனிதருடைய பெயரையே இடுவது வழக்கமாக இருக்கிறது. அது அவ்வளவு நல்ல முறையல்ல வென்பது எனது கருத்து. உங்களுடைய வாசகசாலைக்கு 'வைக்கம் வீரர் வாசகசாலை' யெனப் பெயரிட்டிருக்கிறீர்கள். இது ஒருவருவருடைய பெயரைக் குறிக்காது. ஒரு கொள்கையையே குறித்து நிற்பது. ஆகவே இம்மாதிரி பெயரிடுவது மகிழ்ச்சிக் குரியதாகும். மக்கட் பிறவியில் உயர்வு தாழ்வில்லை யென்ற பெருங்கொள்கையை இது குறித்து நிற்கின்றது. இது சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கையாகும். வைக்கம் வீரர் என்பவர்ஒருமனிதரல்ல. அவர் ஒரு எனக்கு மனிதராகத் தோற்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோற்றுகிறார். (கேளுங்கள் கேளுங்கள்) உலகத்தில் எந்தெந்த தேசங்கள் முன்னேறியிருக்கின்றனவோ அந்தந்த தேசங்களில் இவரது கொள்கைநிலவக் காணலாம். மற்றும்தீவிரமாகஎந்த மக்கள்சுதந்திரப்போராட்டமாடுகின்றனரோ அந்த மக்கள் இக்கொள்கையையே கொண்டிருப்பதையும் காணலாம். பல ஊர்களில் ஏற்பட்டிருக்கும்வாசகசாலைகளைவிட இவ்வூர் வாசகசாலைபலவிதங்களில் சிறந்து நிற்கின்றது. ஒரு தேசத்தின்புனருத்தாரண வேலையை இது தனதுமுக்கியகொள்கையாகக்கொண்டு நிற்கின்றது. சுதந்திரமடையப் போராடி வரும் நாடுகள் எந்தக் கொள்கைகளைக்கொண்டு நிற்கின்றனவோ அந்தக் கொள்கைகளே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைளாகவும் இருக்கின்றன. ருஷியா தேசம் மதத்தால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தது. ருஷிய அரசர் மதத்தின் பேரால் அரசு செலுத்தி வந்தார். எனவே மதத்தை தொலைக்கிறதுவரை நாட்டுக்கு விடுதலையில்லையென அரசரையும் மதத்தையும் தொலைத்துவிட்டுக் குடியரசை ஸ்தாபித்து விட்டார்கள். துருக்கியிலும் இதேமாதிரிதான்மதத்தின் பேரால் செய்யப்படும் தீங்குகளை நீக்க வேண்டுமென்று முயற்சித்து வெற்றி பெற்றார்கள். முஸ்லிம்கள் தங்கள் பெண்களைத் திரையிட்டு மூடி வெளியில் வாராதவாறு பூட்டி வைத்திருக்கின்றனர். இதை வட நாட்டிலுள்ள இந்துக்களும் பின்பற்றினர். தென்னிந்தியாவிலுங் கூட இம்முறை சிறிது கையாளப்படுகின்றது. முஸ்தபா கமால்பாட்சா இதை அறவே ஒழித்தார். இவ்விதமாகப்பல சீர்திருத்தங்களைச் செய்ததனால்தான் அந்நாட்டு மக்கள் முன்னேற்றமடைந்து சுதந்திர வாழ்வுபெற்றிருக்கின்றனர். நம் நாட்டில் நம்மை அடிமைப்படுத்தியிருப்பதும் மதமே. பழக்க வழக்கங்கள் நம்மை அமுக்கி வைத்திருக்கின்றன. இவற்றை ஒழிப்பது வரை நாம் விடுதலையடையப் போவதில்லை. இதைத்தான் சுயமரியாதை இயக்கம் கூறி வருகின்றது. இத்துறையில் இத் தென்மாப்பட்டு இளைஞர்கள் செய்து வரும் தொண்டு இந்நாடு முற்றும் பரவி நலன் பயக்குமென நம்புகின்றேன். என்று பேசி மகாநாட்டு நடவடிக்கைகளை துவக்கினார்.

## தலைவர் முடிவுரை.

தலைவர் நிகழ்த்திய முடிவுரையின் சுருக்கம் வருமாறு:—

இந்த ஊரில் இவ்வளவு தீவிரமாக இவ்வாசக சாலையார் உழைத்து வருவதுபோற்றற்குரியதாகும். எந்தப்புது இயக்கத்துக்கும் எதிர்ப்புகள் இருந்தே தீரும். பழைய நிர்மாணங்களை மாற்ற ஆரம்பிக்கும் எந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பில்லாதிருக்காது. இதிற் கலந்துழைப்போருடைய வீடுகளில் பெற்றோர்களுடைய எதிர்ப்பு கூட இருக்கத்தான் செய்யும். ஒரு சில தாய் தந்தையரே இதற்காதரவளிப்பவராக இருப்பர் இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே, சுயமரியாதை இயக்கத்தின் தந்தையாக மகாத்மா காந்தியையே நான் கருதுகிறேன். அவர் வேறு வழியில் திரும்பின்போதிலும் தாழ்த்தப்பட்டார் முன்னேற்றத்துக்காகவும், மதுவிலக்குக்காகவும் அவர் உழைத்தே வந்தார். அவர் எந்த ஸ்தாபனத்தின் மூலம் உழைத்து வந்தாரோ, அது சுயநலக்காரர் கையில் சிக்கினவுடன் அவரும் மாறுபட்டுப் போய் விட்டார். (கரகோஷம்) மகாத்மா காந்தி ஆதியில் தொடங்கிய இயக்கம் நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையே தழுவி நின்றது. அதைத் தமிழ் நாட்டில் தொடர்ந்து நடத்தி வருபவர் நமது வைக்கம் வீரராவர். வட நாட்டில் மகாத்மா காந்தி வரிகொடா இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது. தமிழ்நாடு அதில் சேரவில்லை. ஏன் சேரவில்லை என்று பார்ப்போம்.

மனிதனுக்கு அடிப்படையாகவேண்டியது சுயமரியாதை தான். கல்கத்தா காங்கிரசில் இது பிரஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் இதனால் பல கஷ்டங்கள் நேர்ந்ததால் காங்கிரஸ் இயக்கம் வேறியக்கமாக மாறிவிட்டது.

மனிதனுக்கு எப்படி உணவு தேவையோ அப்படியேஉப்பும்தேவை அவ்வளவுக்கு அவசியமான உப்பு நமக்குக்கிடைக்காதபடி வரிபோட்டுத்தடுப்பதையும் எதிர்ப்பது கடமை தான். ஆனால், உப்புக்கு முன் நீர் மிக அவசியமானதல்லவா? உப்பில்லாதிருந்தாலும் இருக்கலாம்; தண்ணீரில்லாது ஒரு நாளும் வாழமுடியாதல்லவா? இவ்வளவு அவசியமான தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை யெனப் பலர் தவித்துக் கொண்டிருக்கையில் உப்புவரி மறுப்பு முக்கியமா; அல்லது அனைவருக்கும் தண்ணீர்கிடைக்கும்படி செய்தல் அவசியமா? இவ்வித நிலையில் கஷ்டப்படும் மக்களை நம்மிடையே வைத்துக் கொண்டு வெளி தேசத்தார் முன் எவ்வாறு சத்தியாக்கிரகஞ் செய்ய முடியும்? எல்லாமக்களும்சரிநிகர்சமானமாகஒன்று சேராது எவ்வாறு சத்தியாக்கிரகஞ் செய்ய முடியும்? எவ்வாறு வெற்றி பெற முடியும்? சிறிது முன் இவ்வூர் ஆதித்திராவிடர்கள் இங்கு படித்த உபசாரப்பத்திரங்களில் தங்கள்குறைகளை எடுத்துக் கூறினார்கள் தாழ்த்தப்பட்ட மக்களது பரிதாப நிலை அதுநாடக மூலமாக நடிக்கப்பட்டது. வெறும் நாடகமா? உண்மைக்காட்சியல்லவா? ஒவ்வொரு ஊரிலும், சேரியிலும் தற்காலமிருக்கும் நிலைமையைத்தான் அது விளக்குகிறது. மக்கள் வாழும் ஊரில் ஒரு சில மனிதர் போகக்கூடாது என்ற அக்கிரமத்தைச் செய்யும் நாம், நமக்குக் கடுகளவேனும் சுயமரியாதை இருக்குமானால் பிறரிடம் சென்று சத்தியாக்கிரகம் செய்யலாமா? எல்லா மக்களும் மனிதராக வாழ வசதி ஏற்படுத்தி, சகல மக்களுடையவும் ஒத்துழைப்புக்கிட்டிய பிறகு இந்த உப்பு சத்தியாக்கிரகஞ் செய்யப்படுமானால் சுயராஜியம் வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அது வரை எத்தனை நூற்றாண்டுகளானாலும் சுயராஜியம் வரப்போவதில்லை. [கரகோஷம்]

'தமிழ்நாடு இன்றிருக்கும் நிலையில் வட நாட்டுப் பேச்சுக்கள் இங்கு எருவென்பதில் சந்தேகயில்லை. சுதந்திரந் தேவையில்லை சுயமரியாதையே வேண்டும் என்ற நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. ஆகவே சுயமரியாதை இயக்கத்துக்காக நீங்கள் தியாகஞ் செய்யவுந் தயாராயிருந்தால் தான் சுயராஜியம் வரும் வடநாட்டிலிருக்கிறவர்கள் உப்புகாச்சுவதற்காகஜெயிலுக்குப்போகவும்உயிரைவிடவும்தயாராயிருந்தால் சுயமரியாதை இயக்கத்துக்காக இளைஞர்கள் ஜெயிலுக்குப் போகவும், உயிரைவிடவும் பின்வாங்க மாட்டார்களென்று நம்புகிறேன். இந்த இயக்கத்தின் மூலமாகத்தான் நம் நாடு எத்துறையிலும் முன்னேற மடைய முடியும். என்றுபேசினார்.

## மேயோவுக்கு ஆதரவு.

ஆதி இந்து தாழ்த்தப்பட்ட ஜாதி சபாவின் ஆதரவில் பெரோஸ்பூர், மொச்சியன் தர்மசாலாவில் கூட்டப்பட்ட விசேஷ கூட்டத்தின் தீர்மானமாவது.

தாழ்ந்த ஜாதியான நமக்கு ஆயிரக் கணக்கான வருஷங்களாக மனுஸ்மிருதியும் வேதங்களும் நம்முடைய நன்மைக்காக ஒன்றும் செய்து விடவில்லை. இந்தக்காரணத்தைக் கொண்டு மேற்கண்ட புண்ணியஸ்மிருதி வேதங்களை பின்பற்றுபவர்களான உயர்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுபவர்கள் நாம் குறைந்த கூலிக்கு மிகவும் கடுமையானதும் தாழ்மையானதுமான வேலைகள் செய்தும் நம்மிடம் இரக்கமாவது அநுதாபமாவதுகாட்டாதிருக்கின்றனர். மற்றும் உயர்ந்த ஜாதியார் தங்கள் குழந்தைகளுக்கு உயர்தரப்படிப்பு சொல்லிக் கொடுப்பதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்து கொண்டும் சிலவு செய்து கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் நமது ஏழைக்குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுப்பதற்காகவேனும் கொஞ்சமும் சிரத்தையாவது காட்டுகிறார்களில்லை. ஆகையால்:—இந்த சபை ஏழை மக்களாகிய நமக்குள் தன்னம்பிக்கையும் சுயமரியாதையையும் உண்டாக்கும் வண்ணம், மிஸ் மேயோவால் எழுதப்பட்ட "இந்தியமாதா" "சாமிகளின் அடிமைகள்" என்ற இரண்டு புஸ்தகங்களின், இந்தி, இந்துஸ்தானி மொழிபெயர்ப்புகள் குறைந்த விலைக்குக் கிடைப்பதால் அவைகளை வாங்கி ஒவ்வொரு குடும்பத்தாரும் வேலை இல்லாத நேரங்களில் தங்கள் குடும்பத்திலுள்ளவர்க

# சுயமரியாதைத் தலைவருக்கு நான் எழுதும் இரண்டாவது கடிதம்

கைவல்யம்.

தாங்கள் பிர்ம ஸ்ரீ சங்கராச்சாரி சுவாமிகளிடம் போவதாயிருந்தால் முன் கடிதத்தைப் போலவே இந்தக் கடிதத்திலுள்ள விஷயத்தையும் சுவாமிகளிடம் தெரியப்படுத்தி அவரால் அளிக்கப்படும் பதிலை சனங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

"மகான்மாவாகிய பிராமண சந்நியாசி ஒருவர் அன்ன பிச்சைக்கு வந்தபோது மேன்மையை விரும்பும் இல்லறத்தான் தன் குடும்பத்தை வருத்தியேனும் அவருக்கு அன்னதானம் செய்யவேண்டும்" என்னும் விதி சனாதன தருமத்திலுள்ள முக்கிய கொள்கையாகும். ஆனால் தவத்தால் தேகம் மெலிந்து இந்திரியம் க்ஷீணித்துப் பசியின் கொடுமையால் இல்லறத்தானிடம் அன்னபிச்சைக்கு வரும் சந்நியாசிகளைப் போன்ற சந்நியாசியல்லாமது சங்கராச்சாரிய சுவாமிகள்

பிர்ம ஸ்ரீ சங்கராச்சாரியாரைச் சுற்றியும் ராஜ வைபவங்கள் நிறைந்து கிடக்கின்றன. சுவாமிகள் தவசுக்குப் போவதாயிருந்தால் போகையிலும், தவசைவிட்டு எழுந்திருக்கையிலும் ராஜ போஷணைக்குவேண்டிய சாதனங்கள் சுவாமிகளின் பக்கமே பதிந்து கிடக்கின்றன. அதை அனுபவித்துக்கொள்ள இடம், பொருள், ஏவல் முன்னமேயே அமைக்கப்பட்டிருக்கிறது. தேகமும், மனமும் தவசால் மெலிவடையாமலிருப்பதற்கு வேண்டிய முன்னமே பலரால் கொடுக்கப்பட்டப் பொருளும் அவர் பக்கமே யிருக்கின்றன. இந்நிலையையுடைய ஒரு சந்நியாசி அன்ன பிச்சைக்கு வருவதும் அந்தப் பிச்சைக்காக அவரால் குறிக்கப்பட்ட தொகையைக்கொடுப்பதும் 'சந்நியாசிக்கு இல்லறத்தான் போடும பிச்சையாகுமா? ஆகாதே! சனாதன தருமமான எந்தச் சமயப்பகுதிகளிலும் இவ்வாறு சந்நியாசப் பிச்சை சொல்லப்படவுமில்லை அவ்விதம் வாங்குவதற்கும். பணத்தால் பிச்சை போடுவதற்கு ஒரே சமயத்தில் தவசிலிருந்து தவசால் மெலிந்து பசியின் கொடுமையால் வாடி பிச்சைக்கு வரும் ஒரு கூட்டமான பிராமண சந்நியாசிகளுமில்லை. ஒரு கூட்டமான பிராமண சந்நியாசிகள் ஒரே சமயத்தில் தவசிலிருந்தும், தவசைவிட்டு எழுந்தும், ஒரே சமயம் தேகம் மெலிந்தும், ஒரே சமயம் பசிக் கொடுமை வந்தும், ஒரே சமயம் அவர்களெல்லாம் ஒன்று கூடிப் பிச்சைக்கு வருவதும், அப்படியே ஒவ்வோர ஊர்களுக்கு வருவதும் நடக்கக்கூடிய சம்பவங்களல்ல. சந்நியாசமும் தவசும் பிச்சைக்காக கட்டுப்பட்டதுமல்ல ஆச்சாரி சுவாமிகளின் பேரால் தினமும் பிச்சை நடந்தால் தவசில் மெலிந்தவர்களில் சிலரேனும் வந்து பிச்சையை உண்டால் அதுவே புண்ணியத்திற்கு ஹேதுவாகுமென்று சொல்லுவதானால் தவசால் மெலிந்த சந்நியாசிக்கும் உழைக்கச் சக்தியற்று ஆதரவற்று பசியால் இளைத்த ஏழைகளுக்கும் அன்னதானம் செய்வது புண்ணியமெனப்படும். இப்பேர்ப்பட்டவர்கள் அக்கிராரத்திலில்லையே? அன்னத்தை விற்பவன், சேவகாபிர்த்தியே ஜீவனமாகக் கொண்டவன் செட்டு செய்கிறவன், தரகன், கூலிக்கு வித்தை சொல்லுகிறவன், கூலிக்கு மந்திரகிரிகை தேவ பூசை செய்கிறவன், கொக்குப்பார்வையையுடையவனென்னும் தன் பயனைத் தேடிக் கொள்ளுவதிலேயே கருத்துடைய பகவிருத்தியுடைய பாவி இவர்களுக்கு அன்ன தானம் செய்வது சனாதன தருமத்திற்கு விரோதமானதும் தரும சாஸ்திர விதியைக் கடந்ததுமாகும். அப்படி இருந்தாலும் அதிலிரண்டு புண்ணிய புருடர் பிச்சை எடுத்துக்கொண்டால் எல்லாப் பாவமும் பரிகரித்து விடுமென்று நினைப்பதானால் சந்நியாசிக்குச் சாதி சமயமில்லை உயர்வு தாழ்வில்லை. எப்பந்தியிலும் அப்புண்ணிய புருடர்கள் உண்ணலாம். அக்கிராரப பார்ப்பார்கள் பந்தியில் மட்டுந்தான் அவர்கள் உண்டால் உண்ட புண்ணியம் பலிக்குமென்று சொல்லுவதற்கு அறிவின் நியாயத்திலிடமில்லையே? எந்தக் கூட்டத்தில் அவர்கள் உண்டாலும் அப் புண்ணியம் பலிக்கவேண்டும். புண்ணியம் தவசைப் பொருத்ததே யல்லாமல் ஒருவருடைய அதிகாரத்தில் —கட்டுப் பாட்டில்—வழக்கத்தில் பொருந்திக் கொள்ளுவதல்லவே? இந்து தரும சாஸ்திரத்தில் பார்ப்பானுக்கு விதித்த விதியைத் தள்ளி அதற்கு விரோதமாக நடக்கும் பார்ப்பான் கூட்டத்திலிருந்துதான் புண்ணியம் பலிக்க வேண்டுமென்பதற்கு பார்ப்பான் பணக்காரனிடம் நியாயம் சொல்லலாம். ஆனால் அதை இந்து தரும சாஸ்திரங்கள் ஒத்துக்கொள்ளாது. தரும சாஸ்திர விதிக்கு விரோதமாக நடக்கப்பட்ட பார்ப்பார்களைச் சண்டாளர்களென்றல்லவோ தர்ம சாஸ்திரம் தள்ளி விட்டது. இதை ஆச்சாரி சுவாமிகள் நன்றாய் அறிவார்,

உலோக குருவென்னப்பட்டவரும் எல்லாம் பிர்ம சொரூபமென்னும் மடத்திற்கு அதிபதியும் உலகக்ஷேமத்திற்காகத் தவசு செய்துகொண்டிருப்பவருமான சங்கராச்சாரிகள் பார்ப்பார்களுக்கு மட்டும் பிச்சை செய்து வைப்பது அவர் ஸ்தானத்திற்குப் பொருத்தமற்றதல்லவா? அன்னதானம் என்பது தவசால் மெலிந்த சந்நியாசிகளுக்கும் பசியால் பீடிக்கப்படுகிற ஏழைகளுக்கும் செய்யும் படியாக சனாதன தருமம் சொல்லுகிறது அக்கிராரத்தில் பசியால் வாடப்பட்டவர்கள் தவசால் மெலிந்தவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்பதை ஞானமூர்த்திகளும் தெரிந்து கொள்ளவில்லையே? தவசால் மெலிந்தவர்கள் அக்கிராரத்திலில்லை. ஒரு சமயம் பசியால் வாடுகிற பார்ப்பார்களிருந்தாலும் அவர்களுக்குச் சத்திரம் கோவில் சோறு, சிரார்த்தம், கலியாணம், தனிச் சமாராதனை பலகிரிகைகள் சோறு இத்தனைக்குமேல் பெருமையான யாசகம் இன்னும் பலவுமிருக்கின்றன. அவர்களுக்குப் பசி வந்தாலும் முன் சாப்பிட்ட ஏராளமான ஆகாரத்தின் கொழுப்புகள் பசியைத் தாங்கி பல நாள் தேகத்திற்குப் போஷணையாக விருக்கிறது. தேகத்திலுள்ள கேடுகளையும் செம்மைப்படுத்தி விடும். அதற்குள் மறுபடியும் கலியாணம், சிரார்த்தம், புண்ணிய லோகத்திற்கு அனுப்பும் ஆயுசு ஓமம் முதலிய பல கிரிகைகளினால் அவர்களுக்கு சாப்பாடு வந்து விடும்.

வயர் ஒட்டி, வாடி, வதங்கி, தேகத்தைத் தினமும் உழைப்பிற்குத்தயார் செய்யப் போதுமான கொழுப்பில்லாமல் தினம் ஒரு வேளை சோற்றைக் கரைத்துக் குடிக்கும்தொழிலாளிகளுக்கும் பிச்சை என்று வாங்கும் அன்னத்தைப் போடாமல் வக்கில், குமஸ்தா உத்தியோகம், வியாபாரி, கோவில் தரகு, சங்கீதம், நாடகம்பரிசாரகம், வட்டிக்கடை, கள்ளு, கஞ்சா, ஏலம் முதலியவைகளால் பணம் சம்பாதித்து தரித்திர மில்லாது ஜீவிக்கும் பார்ப்பார்களுக்கும், பார்ப்பார பணக்காரர்களுக்கும் அன்னதானம் செய்வதும் அவர்கள் சுவாமிகள் பிச்சை என்று சாப்பிட்டு சந்தனம் பூசிக்கொள்ளுவதற்கும்தானா சனாதன தருமம் காப்பாற்றப் படவேண்டுமென்பது? வக்கீல் உத்தியோகஸ்தன் புண்ணியம் என்னும் ஆதிக்கத்தை முன்னால் நிருத்தி சாஸ்திரமென்பதினால் அதற்கு மூலாம் பூசி எந்த விதத்திலும் பிச்சை என்றும் பாத காணிக்கை என்றும் தெட்சணை என்றும் பணத்தை வாங்கி புத்தியின் தந்திரத்தாலும் உத்தியோகத்தினாலும் அவர்கள் முன்னோர்கள் செய்து வைத்து விட்டுப் போயிருக்கும் சாஸ்திர ஏற்பாட்டினாலும் ஆலோசனையற்ற பணக்காரர்களின் மௌடீகத்தினாலும் நம்மவர்களின் அறியாமை யாலும் தரித்திரமில்லாது காலம் நடத்தும் தாங்கள் இனத்துப் பார்ப்பார்களுக்கே விருந்தளிப்பது கொள்ளைக்கூட்டத்துத் தலைவர்களைப்போன்றவர்களுக்குப் பொருந்தினாலும் எல்லா உயிர்களும் ஆத்மசைதன்னியமான கடவுளுடைய தென்றும் கற்பிக்கப்பட்ட பீடத்திற்குப் பொருந்துமா? என்பதை சுவாமிகளிடம் தெரியப்படுத்துங்கள்.

எல்லோருடைய க்ஷேமத்திற்கும் தவசிருக்க ஊர் ஊராய் போகும் ஆச்சாரிய சுவாமிகள் எல்லாரையும் ஒரே கண்ணினால் பார்க்காமல் பல பேர்களின் உழைப்பின் பணத்தை வாங்கி ஆங்காங்கே இருக்கப்பட்ட பார்ப்பார்களின் வயிற்றையும் மடத்தின் சர்வாதிகாரிகளின் குடும்ப அடம்பரங்களையும் நிரப்புதல் ஆச்சாரிய பீடத்திற்கும் இந்து தர்ம சாஸ்திரத்திற்கும் பொருந்தாதென்பதையும் சுவாமிகளிடம் தெரியப்படுத்துங்கள்.

ஆத்மாவேபிர்மமென்றும் நிமிர்ந்து உட்கார்ந்து கண்களைமூடி அந்தர்முகமாய் சச்சிதானந்த ப்ரமத்தைத் தரிசித்து ஆசாபாசமென்னும் ஜகத்தை இந்திர ஜாலமென்று நினைத்து மாயையை நீக்கித் தன்னில் தான் சிரித்துக்கொண்டு சகல துக்கங்களும் சரீரத்திற்குண்டே ஒழிய சரீரமில்லாத எனக்கு எந்த துக்கங்களுமில்லை. நான் சதா பிரம்மானந்தமென்னும் சமுத்திரத்தில்மூழ்கி நிற்பயமாய் நிற்பவனைத் தெளிந்து ஜாக்ராவஸ்தையில் தூங்கிக்கொண்டிருப்பவனைப் போல சகல காரியங்களையும் செய்து கொண்டு குரோதாதிகள் இல்லாதவனாய் தான் சாட்சி மாத்திரமாய் நின்று சுகித்துக்கொண்டு வெளிக்கு உலகத்தாரைப்போல ,யதாவிதியாய் சகல காரிங்களையும் செய்து கொண்டிருப்பான் சந்நியாசத்தில் பூரணப்பட்ட சந்நியாசி என்று சொல்லும் சாஸ்திரங்களிலுள்ளது போலவே ஆச்சாரிய சுவாமிகளுமிருக்கலாம். அந்த சாஸ்திரங்களின் ஆதாரவால் பல தனிச்சந்நியாசிகளும் பல மடத்துக்கு அதிகாரியான சந்நியாசிகளும் ஞாய விரோதங்களைச் சொன்னார்கள் செய்தார்கள் பற்றில்லாத சந்நியாசிகளின் செய்கை என்று நினைத்துக் கொள்ள நடித்தார்கள். அதற்கெல்லாம் சாஸ்திரங்கள் ஆதாரமாக்கப்பட்டன சனங்களுக்கு [illegible] முண்டான விடத்திலெல்லாம் மடத்திலிருந்த பண்டிதர்கள் சாஸ்திரிகள் மடத்தில் பக்தி காரியாலயம் முதலி

தொடர்ச்சி 18 ம் பக்கம் பார்க்க

---

ளுக்கு படித்து காட்ட வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறது. இந்த புஸ்தகங்கள் நம் மீது சிறந்த அபிமானம் கொண்டதாய் இருப்பதோடு நமது உண்மை நிலையையறிய உதவியாயுமிருக்கிறது. உண்மையில் நமக்கு இவைகள் தான் வேதங்களாயிருக்கின்றன. ஸ்மிருதி வேதங்கள் போலல்லாமல் கஷ்டப்படுகின்ற ஜனசமூகத்திற்கு தனனுள் அன்பும் அபிமானமும் கொண்டுள்ளது. எந்த உண்மையான சமூக சீர்திருத்தக் காரரும் இப்புத்தகங்களை புறக்கணிக்க முடியாதென்றும் நம்புகிறோம்.

# இதிகாசங்கள்.

## இராமாயாணம்—உயுத்த காண்டம்

கட்டுரை—4

திரு. சந்திரசேகரப்பாவலர்)

சருக்கங்கள் 19 முதல் 21 முடிய

இராமன் கடற்கரைக்கு வந்ததை சார்த்தூலன் என்ற தூதனால் அறிந்த இராவணன் பேசும் திறமையை உடைய சுகன் என்பவனை அழைத்து, "நீ சுக்கிரீவனைக்கண்டு அவன் நான்முகனுடைய பேரனாகையால் எனக்கு உறவினன் என்றும், வாலி என் நண்பனானதால் சுக்கிரீவன் எனக்குத் தம்பி என்றும், அதனால் இராமனுக்கு உதவி செய்யக்கூடாது என்றும் நான்சொன்னதாகச்சொல்" என்று சொல்லியனுப்பினான். உடனே சுகன் பறவை உருவெடுத்து சுக்கிரீவனைக் கண்டு விண்ணில் இருந்து கொண்டே ஒன்று விடாமல் சொன்னான். அவனை வானரர் பிடித்து சிறகுகளை ஒடித்தார்கள். சுக்கிரீவன், அடே! இராவணனுக்கும் எனக்கும் நட்பு இல்லை. இராமன் அவனைக்கொல்வான்." என்றான். அப்போது அங்கதன், "இவன் நமது காரியங்களை அறிந்து கொண்டான். ஆதலின் இவனை இலங்கைக்குப் போகவிடலாகாது." என்றனன். உடனே வானரர் அவனைப் பிடித்து அடித்துக் கட்டினர். அவன் இராமனை நோக்கி, "நான் செய்த பாவமெல்லாம் உன்னைச்சேரட்டும்." என்று சபித்தான். இராமன் அவனை விட்டு விடச் சொல்ல அவர்கள் தெற்குக் கரையில் கொண்டு போய் விட்டார்கள்.

பலவித நகைகளும் பூண்ட உத்தமப் பெண்களின் கைகளால் பல விதமாய் குளிக்கும் போதும் அலங்காரம் செய்யும் போதும் பல மணப் பொருள்கள் நன்றாகப் பூசப்பட்ட தனது தோளைத் தலைக்கு வைத்து கீழே படுத்து இராமன் கடலரசனை நோக்கி தவம் செய்தான். மூன்று நாள் ஆகியும் கடலரசன் வரவில்லை. இராமனுக்கு சினம் மூண்டது. அவன், "கெட்டவர்களுக்கே இது காலம். இப்போதே கடலிலுள்ள மீன்கள் பாம்புகள் முதலிய எல்லாவற்றையும் கொன்று குவிப்பேன். அவைகள் வாழும் கடலுக்குக் காவற்காரனாகிய வருணனை இதோ தொலைத்து விடுகிறேன். தம்பி! வில்லைக்கொண்டு வா. கடலை வற்றச் செய்து வானரர்களை நடக்கச் செய்கிறேன்." என்று சொல்லி அம்புகளை எய்தான். அதனால் கடல் கொதித்தது. மீன்கள் முதலிய உயிர்கள் மடிந்தன. அதிலும் வருணன் வராததைக்கண்டு இராமன் அவன்மேல் நான்முகன் அம்பை விட்டான். அதனால் கடலரசன் இராமன் முன்வந்து பணிந்து "வேண்டிய, உதவி செய்வேன். கடலை ஆழமில்லாமல் செய்யவாவது கட்டியாக்கவாவது என்றால் முடியாது. ஏனெனில் அதிலுள்ள உயிர்கள் மடியுமல்லவா? ஆனால் நீ கட்டும் அணையை அசையாமல் இருக்கும்படி செய்வேன்." என்றான்.

இராமன் தான் விடுத்த அம்புக்கு போக்குக் கேட்டான். வருணன், "வடக்கே ஓர் தீவில் என் பகைவராகிய ஆபிர (மகா குத்திர) சாதியினரான திருடர் உளர். அவர்கள் என் தண்ணீரைத் தொட்டுக் குடிப்பது எனக்குப் பொறுக்க முடியவில்லை. அவர்களை அது அழிக்கட்டும்" என்றான். இராமன் அதை அவ்வாறே எவி அவர்களை அழித்தான். பின் வருணன், "விசுவகர்மாவின் மகனாகிய நளன் என்பவன் உன் சேனையில் இருக்கிறான். அவனை அணை கட்டச் சொல்" என்று சொல்லி தன்னிடம் சென்றான். நளன் தான் அணை கட்டுவதாகச் சொன்னான். இராமனும் அவனுக்கு ஆணை தந்தான் இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சுகன் என்பவன் பேசும் திறமை உடைய தூதன் என்றும், அவனைத் தேர்ந்து இராவணன் சுக்கிரீவனிடம் அனுப்பினான் என்றும், சுகன் வானரர் சூழ இருந்த சுக்கிரீவனை அடைந்து விண்ணில் நின்று கொண்டே இராவணன் சொன்னதைச் சொன்னான் என்றும், உடனே வானரர் அவனைப் பற்றித் துன்புறுத்தினார்கள் என்றும் காணப்படுகிறது. இச்செய்தி இராவணனை மிகக் குறைவாகக் காண்பிக்கிறதற்காகவே எழுதப்பெற்றதாகத் தெரிகிறது. ஏனெனில் இராவணன் வல்லவனாகக் கருதி அனுப்பிய சுகன் சுக்கிரீவனைத் தனியே கண்டு செய்திகளைத் தெரிவித்திருப்பான். பலரும் கேட்கக் கூறத்தகுந்த செய்தியா இராவணன் கூறியது? ஆதலின் ஒரு மடையனைப் பிடித்தனுப்பிய இராவணனும் ஒரு மடயனே என சுகனை ஒரு கோமாளியைப்போல இங்கே காட்டப்படுகிறது. இவ்வரலாறு மதம் பிடித்த சில ஆரியப் பேதையராலே பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றிருத்தல் வேண்டும். இதனாலேயே போலும் கம்பர் இவ்வரலாற்றைக் கூறாது மறைத்தார். கம்பர் இதை வேண்டுமென்று சிறுமை கருதி மறைத்தவராதல் வேண்டும், இல்லையானால் இது அவர்காலத்திற்கும் பின்னர் தான் சேர்க்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

சுகனை வருத்தியதை இராமன் கல்நெஞ்சுடன் பார்த்திருந்து சுகன் சபித்தபின்னரே அவனை விடுவிக்கச் சொல்கிறான். இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 85ல் "அதுவரையில் வானரர்கள் சுகனை இம்சை செய்யும்படி விட்டதே இராமனுக்கு அழகல்ல: அவருடைய உத்தரவின்றி சைனியத்தில் யாதொன்றும் நடக்கலாமா? என்று எழுதுகிறார். கல்நெஞ்சப் பாவியாகிய இராமனுக்கு இரக்கமும் ஒரு கேடா? அவன் உலகத்தை ஏமாற்றுகிறதற்காக சில சமயங்களில் இரக்கம் உடையவனைப்போல பாசாங்கு செய்வானே ஒழிய உண்மையில் அவனுக்கு இரக்கம் எது? ஒரு பாவமும் அறியாமல் கடலிலே வாழ்ந்து கொண்டிருந்த மீன்களையும், பாம்புகள் முதலியவைகளையும் கடலரசன் மேல் சினம் கொண்டு கொன்று குவித்தான் இராமன் என்ற வரலாறு இக்கட்டுரையிலேயே காணப்படுகிறதல்லவா?

தனக்கு வேண்டியவர்களை மார்போடு தழுவிக்கொள்ளவோ இராமன் பழகினான் அதுவோ அவனுக்கு அழகாகும்! பிற உயிர்களைத் துன்புறுத்துவதைத் தடுப்பது அவனுக்கு அழகாகுமா? அதை அவன் ஒரு அழகென்றே கருதவில்லை! "அவருடைய உத்தரவின்றி சைனியத்தில் யாதொன்றும் நடக்கலாமா?" பரிதாபப்படுகிறார் மொழிபெயர்ப்பாளர் இராமன் சேனைக்கு உடையவனா? அன்றி அவன் தலைவனா? இரண்டும் கெட்டவனே. அதனால் அவன் ஆணை எதற்கு? சுக்கிரீவனுடைய அனுமதியினாலேயே அவர்கள் சுகனைத் துன்புறுத்தியவராவர் இராமன் சுகனை விட்டுவிடச் சொல்லி ஆணை தந்ததாகவும் அவர்கள் அவனை விட்டு விட்டதாகவும் சொல்லப்பெறும் செய்தி பொய். ஆனால் இந்த இடத்தில் தெற்குக் கரையில் போய் விட்டார்கள் என்று காணப்படுகிறது. இது இவ்விடத்தில் சொல்லப்பட வேண்டிய அவசியமில்லாத செய்தி இராமன் இலங்கையை அடைந்த பின்னரே சுகன் விடுதலை பெறுகிறான் என்று பின்னால் செய்தி வருகிறது.

"பலவித நகைகளும் பூண்ட உத்தமப் பெண்களின் கைகளால் பல விதமாய்க்குளிக்கும் போதும் அலங்காரம் செய்யும் போதும் பல மணப் பொருள்கள் நன்றாகப் பூசப்பட்ட தனது தோளைத் தலைக்கு வைத்து கீழே படுத்து இராமன் கடலரசனை நோக்கித் தவம் செய்தான்." என்ற செய்தி காணப்படுகிறது. இதனால் இராமனுக்குப பல மனைவியர் இருந்தனரென்பதை நான்முன் பல இடங்களில் எடுத்துக்காட்டிய உண்மை வலியுறுகிறது. ஆனால் திரு. சீனிவாசய்யங்கார் பக்கம் 86ல் "உத்தம ஸ்திரீகளின் கைகளால் என்றதால் இராமனுக்கு அநேக பார்யைகள் இருந்தார்களென்று சொல்லக்கூடாது. பல உத்தமஸ்திரீகள் அந்தந்தத் தொழிலுக்காக மாத்திரம் அமர்த்தப்பட்டிருக்கலாம்" என்று எழுதுகிறார். மொழி பெயர்ப்பாளர் திரு. நரசிம்மாச்சாரியார் 2585, 2586, 2587-ம் பக்கங்களில் முன் அயோத்தியா காண்டம் முதலிய பல இடங்களில் இவ்விதமான செய்திகள் காணப்பட்டாலும் மனைவியர் என்று கூறுவது சரியில்லை. ஏனெனில் இராமன் பலரை மணந்த செய்தி பாலகாண்டத்தில் காணப்படவில்லை. ஆதலின் பல பெண்கள் என்பது அலங்காரப் பெண்களையே." என்று விரிவாகக் குறித்திருக்கிறார். இவர்களுடைய அபிமானக் கூற்றுப்படியே அலங்காரம் செய்வதற்காக ஏற்பட்ட பெண்களென்றே வைத்துக் கொண்டாலும் பல பெண்களால் தன்னைக் குளிப்பாட்டவும் சந்தனம் முதலிய மணப் பொருள்களைப் பூசவும் இராமன் ஏற்பாடு செய்திருந்தானென்பது அவனுடைய பெருமைக்கு அடுக்குமா? அரசர்களுக்கு அது இயல்பென்றால் மிகப் பெரியவனாகவும் தெய்வத்தின் தோற்றமாகவும் இவர்கள் கூறும் இராமன் நல்லொழுக்க முறையை நிலை நாட்டாமல் பல பெண்களை இவ்வாறு கெடுத்தான் என்பது அடுக்குமா? மேலும் அவ்வாறு கெட்ட பெண்கள் வால்மீகி கூறுகிறபடி உத்தமப் பெண்கள் ஆவது எங்ஙனம்? ஆதலின் இராமனுக்குப பலமனைவியர் இருந்தார் என்பதை ஒப்புக் கொண்டே தீர வேண்டும், அபிமானம் பற்றிக் கூறும்கூற்றுக்கள் ஆதாரம் அற்றவைகளாகின்றன. அறுபதினாயிரம பெண்டாட்டிகளை வைத்திருந்த தசரதனுடைய மகனாகச் சொல்லப்பெறும் இராமனுக்கு அறுபதினாயிரம் இல்லையென்றாலும் ஒரு ஆராயிரமாவது வேண்டாமா? இல்லையென்றால் தந்தையின் மகன் என்று பேர் எடுப்பது எப்படி? நிற்க,

ஒரு பாவமும் அறியாத மீன் முதலிய கடல் வாழ் பிராணிகளையெல்லாம் அம்பு விட்டுக் கொன்ற பாதகச் செயலை உடையவனாகிய இராமனுக்கு முன் அத்தனை கொலைக்கும் காரணனாகிய வருணன் தோன்றினான் வருணனே கடலரசன் அவன் கடலுக்குள்ளே இருந்து தோன்றினானாம்! கடலுக்குள்ளே ஒருவன் எத்தனை நேரத்திற்கு வாழ்தல் முடியும்? வருணன் கடலுக்குக் காவற்காரனாம்! கடலுக்கு என்ன காவற்காரன் வேண்டியதிருக்கிறது? கடல் யாருக்குச் சொந்தம்? வருணனை கடலுக்கு அரசனாக நியமித்தது யார்? திருமாலின் தோற்றமாகிய இராமன் சரணமடைந்து வேண்டியும் அவன் வராமல் பின் சினந்து அம்பு விட்டவுடன் அஞ்சி ஓடி வந்தான் என்று கூறுவதின் நோக்கம் என்ன? இராமன் வேண்டி வணங்கியவுடன் அவன் வந்து இராமனுக்கு வேண்டியதைச் செய்தான் என்றால் இராமனுடைய பெருமை

[தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க]

# புராண ஆபாசம்

## தீர்த்த விசேஷம்

### பொற்றாமரை

[லா. சி. சு. எழுதுவது.]

சோமசுந்தரக் கடவுள் கங்கை, காவிரி முதலிய எல்லா நதிகளுக்கும் முதல் காரணமாயிருக்கின்ற ஆற்று நீர், ஊற்றுநீர், மேகநீர், கூடிய கடலும், மற்றய தீர்த்தங்களும், மேகங்களும் உண்டாதற்கு முன்னமே தம்மை அபிடேகம் பண்ணுவித்ததற்கு தாமே உண்டு பண்ணிய தீர்த்தமே பொற்றாமரைத் தீர்த்த மெனப்படும் அது எப்படி என்றால் சோம சுந்தரக் கடவுள் ஆதிகாலத்தில் பல சின்னங்களோடு மூன்று லோகமும், தமது லோகமும் சென்று விளையாடித்திரும்பும் போது அவரை இந்திரனும், பிரமனும், விட்ணுவும், முதலிய தேவா பலரும் துதித்துக் கேட்டுக் கொண்டார்வது. தாங்கள் இத்தலத்தின் கண் இருக்கும் லிங்கத்தில் எழுந்தருளிய பின் அந்த லிங்கத்திற்கு அபிடேகம் பண்ணவும் அடியேங்கள் ஸ்நானம் பண்ணி சுத்தராகவும் உலகத்தில் தீர்த்தங்களும், நதிகளும் இல்லையாதலால் இம்மை மருமைப் பலன்களைத் தருவதாக ஒரு தீர்த்தம் இம்மதுரையில் உண்டு பண்ண வேண்டுமென்று கேட்ட போது அச் சோம சுந்தரக் கடவுள் தமது முத்தலைச் சூலத்தைப் பூமியின் கண் ஊன்றினார் ஊன்று மளவில் மூன்றுலகங்களையும் கிழித்துக் கொண்டு பெரிய சமுத்திரம் போல நீர் பெருக அப்பெருக்கை அதிகப்படாமல் தமது திருக்கரத்தால் அமைத்துப் பின்பு தமது கடையிலிருந்த தெய்வீகமான சுத்த கங்கையினது ஜலத்தைத்தூவிக் கலந்து மகா தீர்த்தமாகச் செய்து நந்தி தேவர் முதலானவர்களைப்பார்த்து இந்த மகாதீர்த்தத்தை எல்லா தீர்த்தங்கட்கும் முன்னே நாம் உங்கள் பொருட்டு உண்டாக்கினதால் ஆதி தீர்த்த மென்றும், ஞானதீர்த்த மென்றும் இன்னும் அநேக பெயர்கள் பொருந்தும் என்றும், இதில் மூழ்கித்தருப்பணம் செய்து தானம் கொடுத்து முதலியசடங்குகள் செய்து விட்டு நம்மை வந்து வணங்கி அபிடேகம் செய்து எம்மை சந்தோஷிப்பித்தோர்கள் தேகத்தினாலாய பலன் எதுவோ அதனை அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தத்தீர்த்தத்தினால் எம்மை அபிடேகம் செய்யில் பதினாலு உலகத்திலுமுள்ள மிகுந்தபெருமையையுடைய எல்லா தீர்த்தங்களினாலும் அபிடேகம் செய்த பலனுண்டாகும் இந்தத் தீர்த்தத்தில் வந்து மூழ்கி இங்கே விளங்குகிற நமது ரூபமாகிய லிங்கத்தை உங்கள் மனதில் அன்பு பெருக பூஜை செய்யுங்களென்று தேவதேவனாகிய சிவ பெருமான் தாமும் அதில் மூழ்கிக் கணங்களையும் மூழ்குவித்து அநாதியாகிய அந்தப் பரிசுத்த லிங்கத்தில் பிரவேசித்தார். என்று இன்னும் பல பல பெருமைகளையும் "திருவிளையாடல்" தீர்த்த விசேடப் படலத்தால் சொல்லப்படுகிறது.

இனி இதில் உள்ள உண்மையை ஆராய்வோம்.

எடுத்தவுடனே கங்கை காவிரி முதலிய நதிகளும் அவைகட்குக் காரணமாகிய ஊற்று நீர் ........மேக நீர் இல்லாத காலத்திலேயே முத்தேவர்களும் இன்னுமற்றய கணங்களும் கேட்டுக்கொண்டபடி அந்தப் பொற்றாமரைத் தீர்த்தத்தை யுண்டு பண்ணியதாகவும், உண்டு பண்ண தனது முத்தலைச் சூலத்தை யூன்றியதாகவும், பிறகு அச்சூலம் மூன்று லோகங்களையும் கிழித்துக்கொண்டு போனதால் பெரிய கடல் நீர் போல நீர் பெருகுதலைக் கண்டு சோமசுந்தரக் கடவுள் தமது கையமர்த்தி தமது சென்னியில் இருக்கும் கங்கையைத் தெளித்துப் பரிசுத்தமாக்கியதாகக் காணப்படுகிறது.

சோமசுந்தரக் கடவுள் கங்கை முதலிய நதிகளும் மேகங்களும் இல்லாத காலத்திலேயே பொற்றாமரைத் தீர்த்தம்உண்டாக்கியதென்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனால் உண்டான பிறகு தமது சென்னியில் உள்ள கங்கையை எடுத்துச் சிறிது தெளித்தார் என்றதினால் பெறப்படும் புரட்டு என்னே? என்று பாருங்கள். முதலில் கங்கை முதலிய நதிகள் இல்லாத காலத்தில் என்று சொல்லி விட்டுக் கங்கை நீரை அதனோடு தெளித்தார். என்றால் குருட்டு நம்பிக்கையுடைய ஜனங்கள் எத்தனை நாள்தான் இந்தப்புரட்டுகளைத்தெரிந்து கொள்ளாதிருப்பார்கள். முதல் எந்த நீரும் இல்லை யென்று பிறகு தலையில் இருந்த நீரை எடுத்துத்தெளித்தார் என்றால் இது எவ்வளவு தூரம் உண்மை என்று புலப்படுகிறது. மேலும் இந்தப் பொற்றாமரைத் தீர்த்தம் உண்டாக்குவதற்குத் தமது கையில் உள்ள முத்தலைச் சூலத்தை யூன்றியதாக கூறப்படுகிறது. சரி, எங்கு ஊன்றினார் என்றால் பூமியில் தான் ஊன்றினார் என்று சொல்லப்படுகிறது. பூமியில் ஊன்றிய முத்தலைச் சூலத்தால் பாதாள லோகமும், சுவர்க்க லோகமும், விட்ணு லோகமும் கிழிந்து போய்விட்டது. என்று சொல்வதை யாராய்ந்தால் பாதாள லோகத்தை ஒரு சமயம் கிழித்து விட்டது என்று சொன்னாலும் பொருந்தும். பூலோகத்திற்கு மேல் இருக்கிறதென்னும் சுவர்க்கலோகத்தையும், விட்ணு லோகத்தையும் கிழித்துக்கொண்டு வந்து விட்டது என்று சொல்லுவதெல்லாம் "சூத்தாம்பட்டை மேல் அடித்துப் பல் எல்லாம் விழுந்தது" என்பது போல் கீழே ஊன்றியதனால் மேலே கிழிந்து போனது என்றது மிகக ஆச்சரியம் விளைவிக்கக் கூடியதாயிருக்கிறதா? இல்லையா? சற்று யோசித்துப் பாருங்கள். "உண்மை எடுத்துச் சொன்னால் உலகத்துக்கு விரோதம்" என்ற படி "குடி அரசு" உண்மை விளக்கப்போக பார்ப்பனர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பகை போகட்டும் இன்னும் பாருங்கள். இந்தத் தீர்த்தத்தில் மூழ்கித் தருப்பணம் செய்து எம்மை வணங்கித் துதிப்பின் அபிடேகம் செய்தால் இந்த உலகத்தில் அடையவேண்டிய பயனை எல்லாம் அடையலாம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குருட்டு நம்பிக்கை வைத்துக்கொண்டு எத்தனைப் பேர் பணம் செலவழித்து மதுரைக்குச் சென்று, பிள்ளையில்லாத மலடிகளும், பேய் பிசாசு பிடித்த பெண்டுகள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களும், இன்னும் முதலிய துன்பங்களிடையே அகப்பட்ட பல அறியாமையையுடைய ஜனங்கள் சென்று அந்தப் பொற்றாமரையில் குளிக்கும்போது தருப்பணம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் நினைத்தது கைகூடும் என்று எத்தனை பாப்பாரப் பிசாசுகள் வந்து சூழ்ந்து கொள்ளுகின்றன பாருங்கள். தட்சணைக்கு எத்தனை சூழ்ந்து கத்துகின்றன பாருங்கள்; ஒருவருக்கு நினைத்ததைக் கொடுக்கும் இந்தப் பார்ப்பனப் புரட்டர்கள் இவர்களுக்கு இல்லாதிருக்கும் தட்சணையைத் தானே சம்பாதித்துக் கொள்ளக் கூடாதா? ஏன் பிறரைக் கெஞ்சவேண்டும். போகட்டும் பிறகு தருப்பணம் செய்து மூழ்கிவிட்டுக் கோயில் வலம் வந்து அந்த நீரால் அபிடேகம்பண்ண வேண்டுமென்று கூறுகிறது. பாருங்கள் பார்ப்பனர்கள் எந்த எந்த வேலையிலும் பணம் பெறக் கூடுமோ அந்தந்தச் சமயம்பார்த்துக் கொள்ளையடிக்கவே இந்தபொய்ப் புராணங்கள் கட்டி வைத்துவிட்டு மூலஸ்தானத்தில் அபிஷேகம்செய் அர்ச்சனைசெய் என்றுபலப்படப்பேசி ஜனங்களிடம் காசைப் பறிக்கிறார்கள். அந்தோ! இப் புராணத்தில் சொன்னபடியே ஜனங்கள் கோயில் வலம் வந்ததும் அர்ச்சனை செய்து கொள்ளுங்கள். கொண்டு நாளைக்கு அபிஷேகம் எடுத்துச் செய்து விடுங்கள் உங்களுக்கு அவ்வளவுபுண்ணியம் இவ்வளவு புண்ணியம் செல்வம் பெருகி சிறந்து வாழ்வீர் என்று கூறுகிறார்கள். இவர்களும் அவர்கள் நயவஞ்சக வார்த்தைக்குக் கட்டுப்பட்டுப் பாழாகப் பணத்தைப் பாப்பார் வயிற்றுக்கு இறைக்கிறார்கள். அப்படி ஒரு நாள் அபிடேகமோ அர்ச்சனையோ செய்து விட்டால் செல்வச் சீமானாய்ச் சிறந்துவாழலாம் என்ற கொள்ளைக்காரர்கள் இவர்கள் நாடோறும் தான் அபிடேக ஆராதனை செய்கிறார்கள். இவர்கள் ஏன் செல்லச் சீமான்கள் ஆகாது. தீண்டப்படாது தொடப்படாது கோவில் நுழையப்படாது. என்ற மக்களிடத்திலேயே நாடோறும் பசப்பு வார்த்தைகள் கடவுள் மேல் சொல்லி பணம்பறித்துத் தின்கிறார்கள். மேலும் அந்தப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் முழுகியவுடனே எல்லாப் பாவங்களும் போவதுமல்லாமல் மோட்சமும் சித்திக்கும் என்று கத்துகிறார்கள். இவர்கள் சொல்லுகிறபடிபுராணங்களால் சொல்லப்படுகிறபடியும் ஒரு சிறிதும் பலன் கிடைக்காது என்று நான் கூறுவேன் எப்படி என்றால் இப்போது அந்தக் குளத்தில் மூழ்கினவுடன் சொரிசிரங்கு காய்ச்சல் உண்டாகிறதே யொழிய வேறு யாதொரு மோட்சமும்காணப்படவில்லை சென்ற மாதம் நடந்த கிரகண சம்பந்தமாய் புண்ணிய தீர்த்தமென்று சொல்லப்படுகிற தீர்த்தத்தில் மூழ்கி உயிரிழந்தவர் பாடேயல்லாது வேறு ஒன்றுமில்லை. இருக்கிறதென்று யாவர் வாது கூறினும் சரியே, புராணப் பித்தர்களும் மதப் பித்தர்களும் பண்டிதப் பித்தர்களும் யாவராயினும் சரி முன் வருவீராக.

# 5 ரூபாய் இனாம்

"சித்திர புத்திரன்"

திரு காந்தியின் கடைசிப் போர் என்னும் உப்புசத்தியாக்கிரகக்கிளர்ச்சியில் தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் பெரிதும் பார்ப்பனர்களே கலந்து அவர்களே முழுவதும் தலைவர்களாக வேண்டிய காரணமென்ன?

திரு காந்தி இந்த சத்தியாக்கிரகப் போருக்கு பணமே வேண்டியதில்லையென்று சொல்லியிருந்தும், திரு. ராஜகோபாலாச்சாரியார் பணம் வேண்டுமென்று கேட்பதின் இரகசியம் என்ன?

அப்படி கேட்கப்படும் பணத்தையும் திருவாளர்கள் மைலாப்பூர் வக்கில் பாஷ்யம் அய்யங்கார் திருச்சி டாக்டர் ராஜன் மதுரை வக்கீல் வைத்தியநாதய்யர் ஆகிய பார்ப்பனர்களுக்கே அனுப்பும்படி சொல்வதின் சூட்சியென்ன?

இந்த சத்தியாக்கிரகப் போருக்கு பிரசாரகர்களாக மாத்திரம் சம்பளம் கொடுத்து பார்ப்பனரல்லாதார்களையே ஏற்படுத்தி பிரசாரம் செய்யச் செய்திருப்பதின் தந்திரமென்ன?

இக்கேள்விகளுக்கு முதலில் கிடைக்கும்படி தக்க காரணங்களுடன் சரியான விடை அளிப்பவர்களுக்கு 5 ரூபாயும் இரண்டாவது கிடைக்கும்படி விடையனுப்பியவர்களுக்கு குடியரசு பத்திரிகை ஒரு வருஷத்திற்கு இனாமாகவும் அளிக்கப்படும்.

குறிப்பு:—முதலில் அல்லது இரண்டாவதாக எது வந்து சேர்ந்தது என்பதற்கும் சரியான விடை எது என்பதை நிர்ணயிப்பதற்கும் நானே தான் ஜட்ஜு—எனக்குமேல் அப்பீலோ கேள்வியோ கிடையாது.

"சித்திரன்"
C/o குடிஅரசு ஈரோடு

## கொளும்பு.

30-3-30-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலையில் கொளும்பு மாலிபன் வீதி 107 நெம்பர் கட்டிடத்தில் இந்திய முஸ்லீம் சங்க வருஷாந்தர பொதுமீட்டிங் கூடும் என காரியதரிசி எழுதுகிறார்.

## சென்னை மாகாணத்தில் இந்துகோவில்களில் பெண்கள் பொட்டுக் கட்டு வதைத்தடுக்கும் மசோதா

ஹிந்து கோயில் களுக்காக பெண்களை பொட்டுக்கட்டிவிட்டு வைப்பதால் தாசித்தொழிலையும் வியபசாரத்தையும ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் விடுவதால், அத்தகைய செய்கைகள் நடக்காமல் தடுப்பது விரும்பத்தக்கதும் அவசியமானது மாகும். ஆகையால் அதற்காக மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அவர்கள் சபையின் உத்திரவு பெற்று கிழ்'கண்டவாறு ஒருசட்டம் கொண்டு வரப்படுகிறது.

1. இந்தச் சட்டத்திற்கு "1930 வருஷத்திய பெண்களை கோயில்களுக்காக பொட்டுக் கட்டி விடுவதை தடுக்கும் சட்டம்'' என்று பெயர்.

2. ஒரு ஹிந்து கோயிலுக்குள்ளோ, அல்லது ஒரு பிரார்த்தனை ஸ்தலத்திலோ, தாசிகளாக ஒதுக்கி வைப்பதற் கென்று பெண்களுக்குபொட்டுக்கட்டுதல் கஜ்ஜி பூஜை முதலிய சடங்குகள் செய்தால் அவை இனிமேல் இந்த சட்டப்படி குற்றமாகக் கருதப்படும்.

3. பொட்டுக்கட்டுதல் கஜ்ஜி பூஜை செய்தல் முதலிய சடங்குகள் செய்து கோவிலுக்குவிடப்பட்ட பெண்களைபழக்கத்துக்கு விரோதமாயிருந்தாலும், நியாய வரம்புக்குட்பட்ட விவாகம் செய்து கொள்ளலாமென்றும், அது சட்டசம்மதமானதென்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

4. பொட்டுக்கட்டுதல் கஜ்ஜி பூஜை செய்தல் முதலிய சடங்குகளை எந்தக் கோவிலுக்குள்ளாவது அநுமதிப்பவர்களும், அது சம்பந்தமான சடங்குகள் செய்பவர்களும், அச்சடங்குகளில் கலந்து கொள்பவர்களும்மற்றும், அது போன்ற சடங்குகள் செய்பவர்களும், ஒருவருஷத்திற்குட்பட்ட கால சிறைவாசத்தையும் அபராதத்தையும்அடைவார்கள். இந்தியன் பீனல் கோடு 372 வது செக்ஷன்படி தண்டனையடைபவர்களையும் இந்த சட்ட தண்டனை அளவுக்கு மேல்பட்டு தண்டனை அடையக்கூடியவேறு சட்டப்படி தண்டனை அடைபவர்களையும் இது பாதிக்காது ஆனால் இந்தச் சட்டத்தில்குறித்தகாரியங்களுக்காக, வேறு சட்டப்படி தண்டிக்கப்பட்டவர்களின் மேல் இந்தச்சட்டப்படி குற்றம் சாட்ட முடியாது.

## கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களின் தெய்வேந்திர வேளாள மகாநாடு அவனாசி 5-3-30

மகாநாட்டுக்கென்று நிர்மாணிக்கப்பட்டிருந்த பந்தலில் கூடிற்று ஏராளமான பிரதிநிதிகளும், ஆண்களும் பெண்களுமான விசிட்டர்களும் வந்திருந்தார்கள். கோயமுத்தூர் வழக்கறிஞரும் ஜில்லாக் கல்வி கழகத்தவருமான திருவாளர் சி. எம். இராமச்சந்திரம் செட்டியார் பி. ஏ., பி. வல். அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

திரு. ஏ ஜி. ஸ்ரீனிவாசம் பிள்ளை அவர்கள் மகாநாட்டுத் தலைமை வகித்தார். தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. தலைவர் திரு. ஏ. ஜி. ஸ்ரீனிவாசம் பிள்ளை அவர்கள் மிகுந்த கரகோஷத்தினிடையே எழுந்து தன் அக்கிராசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள் சகோதர ஐக்கிய சமபந்தி போஜனம் அளிக்கப்பட்டது. மத்தியானம் 2 மணிக்கு விஷயாலோசனைக்கூட்டம் நடைபெற்றது. 3. மணிக்கு பல தீர்மானங்கள் நிறைவேறரப்பட்டது அவைகளில் முக்கியமானவை;-சக்கரவர்த்தியும் சர்க்கரவர்த்தினியும் நீடூழி வாழவும், இங்கிலீஷ் ராஜாங்கம் நீடூழிகாலம் நிலைத்திருக்கவும், மத விஷயங்களில் மற்ற இந்துக்களுக்குரிய சகல சலாக்கியங்களும் தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் குடிப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு சென்னை மாகாண தெய்வேந்திர வேளாள மகா சங்கதை தங்கள் தாய்ச் சங்கமாக இம்மகாநாடு ஒப்புக்கொள்ளுகிறது. என்றும் கட்டாய ஆரம்பக்கல்வி போதிக்கப்பட வேண்டும் என்றும் ஜனசங்கைக் கணக்குகளில் தெய்வேந்திர வேளாளர் என்பதாகப் பதிவி செய்யவேண்டும் என்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் சட்டசபைப் பிரதிநிதிகளின் தொகையில் தெய்வேந்திர வேளாளரின் ஜனத் தொகைக்குத் தகுந்தவாறு குறைந்தது நாலு ஸ்தானங்களாவது ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்றும் அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பொது ஜன சம்மத முடையதர்களாயிருக்க வேண்டும். என்றும் நமது ஜாதியார் பலவிதப் பட்டப் பெயர்களை உடையவர்களாயிருந்தாலும் மதம், உட்பிரிவு முதலிய வேற்றுமை பாராட்டாமல் சகோதர ஐக்கிய உணர்ச்சியுடன் ஒருவர் வீட்டில் ஒருவர் போஜன பானம் செய்ய வேண்டும் என்றும் எங்கள் மாணுக்கர்களுக்கென்று ஒரு பிரத்தியேகமான ஹாஸ்டல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் நாம் நமக்குத் தாழ்ந்தவர்களாகக் கருதி வரும் சில ஜாதியாரின் முன்னேற்றத்துக்குஎவ்விதத்திலும்இடைஞ்சலாய் நடந்து கொள்ளக் கூடாது என்றும் பல தீர்மானங்களாயின. பிற்பாடு தமிழ் நாடு சென்னை மகாண பொதுக் காரியதரிசி ஸ்ரீமான்களான எல். கிருஷ்ணன், மருதாசலம், ரெவரெண்டு துரைசாமி, கருப்பசாமி பன்னடி, ந. ஒழுகப்பன்னடி சி. எம். கோணப்பன், பி. அருணாசலம் முதலியவர்கள் முறையே சுயமரியாதை இயக்கம், நமது குலப்பெருமை, ஒற்றுமை, தியாகம், தொழிற் கல்வி, ஆசார சீர்திருத்தம் என்ற பொருள்களின் பேரில் உபந்நியாசம் செய்தார்கள். அக்ராசனாதிபதி அவர்கள் முடிவுரை கூறியபின் மாலை 7 30 மணிக்கு கூட்டம் கலைந்தது. தலைவர் முடிவுரையில் சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமிப் பெரியாரையும் குறித்து புகழ்ந்து பேசினார் என்று திரு. ஏ. ஜி. ஸ்ரீனிவாசம் எழுதுகிறார்.

குறிப்பு:—

சென்னை சர்க்காரால் இம் மசோதா நமக்கு அனுப்பபட்டு நமது அபிப்பிராயத்தை எழுதி தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறார் ஆதலால் ஒவ்வொருஊர்களிலும் பொதுக் கூட்டங்கள் கூட்டி இம்மசோதாவை ஆதரித்த தீர்மானங்கள் நிறைவேற்றி அதன் காப்பிகளை சற்காருக்கு உடனே அனுப்பவேணுமாய்க் கேட்கிறோம்.

விலாசம்:—

சட்டசபை காரியதரிசி அவர்கள்

போர்ட் செஜார்ஜ் மதராஸ்

## மதிப்புரை.

### செந்தமிழ் வாசகம்.

உயர் திரு. மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு சென்னை சே. பழனியாண்டி பிள்ளை கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட செந்தமிழ் வாசகம் இரண்டு முதல் ஐந்தாம் புத்தகம் வரை கிடைக்கப் பெற்றோம். இவை சாஸ்திரக் குப்பைகளும் புராணப் பொய்க்கதைகளும் நிறைந்து பார்ப்பனரும் அவரது தாசர்களும் அழுக்கு மூட்டைகளும் எழுதியவற்றைப் போலல்லாது பண்டை மூடக்கட்டினின்றும் மக்கள் விடுதலை பெறுதற்கும் உண்மை உணர்ச்சியை ஊட்டுதற்கும் உகந்த முறையில் அமைக்கப்பட்டு காலமுறைக்குத்தக்கவாறு சரித்திரம் பூத பௌதிக சாஸ்திர உண்மைகள் அரசியல் பொது இயககங்கள் கதைகள் முதலிய அறிவு விளக்கத்திற் கேற்றவைகளும் சிறுவர் பொது அறிவைப் பெறுக்குதற்கு இசைந்தபடி துவக்கப் பட்டிருக்கின்றன. எளிய செந்தமிழ் நடையில் சிறுவர்கள் தத்தம் வகுப்புக் கேற்றவாறு பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்களும் பாடசாலை அதிகாரிகளும் இது போன்ற புத்தகங்களை ஆதரிக்க வேண்டியது கடமையாகும்.


எக்ஸ்ரே—குழாய்
(X-RAY TUBE)




இது மேல் நாட்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவி. மிகவும் உபயோகமானது. இதன் மூலம் கைகளையோ விரல்களையோ பார்த்தால் உள்ளே ஓடும் எலும்புகள் தெரியும். ஒரு பென்சிலைப் பார்த்தால் உள்ளே இருக்கும்லெட்தெரியும்செடிகொடிமுதலானவைகளின் அடிப்பாகத்தைப்பார்த்தால்உள்நரம்புகள்தெரியும் முட்டையினுள்இருக்கும்கரு தெரியவரும். இதனால்முட்டைநல்லதா கெட்டுப்போனதாஎன்றும்உடனே சொல்லிவிடலாம். இன்னும் பலவிதங்களிலும்உபயோகமானது. இவ்வளவும் உண்மையில்லையென்று நிரூபிப்பவர்க்குப பணம்வாபீஸ்செய்யப்படும். ஸ்டாக் கொஞ்சம் இன்றே எழுதுங்கள். விலை டியூப் 1-க்கு ரூ. 1-14-0

ஈஸ்டு வெஸ்டு ஏஜன்சி, தபால் பெட்டி 295, மதராஸ்.



இனும்! முற்றிலும் இனும்!!

காசியில் மூன்று நாள் என்ற

ஓர் இனிமையான புத்தகம்

வெளிவந்து விட்டது

உடனே ஒரு அணு தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசங்களை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி. புத்தகம் தங்களுக்கு இனுமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,

சில்க் ஹவுஸ், மதுரை.

# காந்தியார் சட்ட மறுப்பின் கதி

## கிராம உத்தியோகஸ்தர் ராஜிநாமா வாபீஸ்
## பொது ஜன ஆதரவு குறைகிறதாம்

டெல்லியில் இருந்து ஒரு பத்திரிகை நிருபர் எழுதுவதாவது.

காந்தியார் சட்ட மறுப்புப் பிரயாணம் வர வர மோசமாகிக் கொண்டு வருவதாக இங்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. புரோச்ஜில்லா ஜனங்கள், காந்தி கோஷ்டியார் எதிர் பார்த்தபடி அவர்களை ஆடம்பரமாக வரவேற்கவோ உபசாரம் செய்யவோ முன்வரவில்லை. சட்ட மறுப்புப்போரில் இறங்கி யிருப்பவர்கள் ஆவேசம் தணியத் தொடங்கி விட்டதாகவும் தெரிகிறது.

ராஜிநாமாச் செய்த அநேக கிராம உத்தியோகஸ்தர்களும் தாலதிகளும் தம்மை திரும்பவும் உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்ள 'வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஊரார் கட்டாயப் படுத்தியதினால் உத்தியோகங்களை ராஜிநாமாச் செய்ததாக அவர்கள் கூறுகிறார்கள். முதலில் உத்தியோகங்களை ராஜிநாமாச் செய்து, காந்தி பக்தர்கள் நன்மதிப்பைப் பெற்று, காந்தியார் போன பிறகு ராஜி நாமாக்களை வாபீஸ் வாங்கிக் கொள்வது ஒரு நல்ல உபாயம் என அவர்கள் எண்ணி யிருக்கக் கூடும்.

கிராமாதிகாரிகள் மீண்டும் உத்தியோகத்தில் புக தொடங்கி யிருப்பது கண்டு காந்தி கோஷ்டியாருக்கு வயிற்றுக் கடுப்பு உண்டாயிருக்கிறதாம் அன்றியும் தொண்டர்களுக்கிடையில் நோய்காணத் தொடங்கியிருப்பதினால் அவர்கள் கிலிபிடித்திருக்கிறார்கள் அவர்கள் ஊக்கமும் உற்சாகமும் பறந்துவிட்டன. சுமார் இரண்டு டஜனுக்கு மேற்பட்ட தொண்டர்கள் சத்யாக்கிரகப் போருக்கு லாயக்கற்றவர்களாக ஆய்விட்டார்கள்.

ஆகவே, காந்தியார் அவரது போர்க்களமான தண்டிக்குச் சொல்லுமுன் அவரது படை குறைந்துவிடுமென்று தோற்றுகிறது.

இதனாலும் காந்தியார மனந்தளரமாட்டாரா யிருக்கலாம். அவரது போர் கூச்சலெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்து விட்டதினால் அவர் எதற்கும் துணிந்தவராகக் காணப்படுகிறார்,

பொது ஜனங்கள் மனதில் பீதியையுண்டுபண்ணி ஆதரவுபெறும்பொருட்டு கடைசிக் கூத்தாக அவர் கடுந்த வங்கிடக்கக் கூடுமென்றும் சொல்லப்படுகிறது. இதற்கு முன்னும் அவர் தவங்கிடந்து உலகமதிப்புப் பொற்றிருப்பதை இந்தியர்கள் அறிந்து தானிருக்கிறார்கள். சர்க்கார் உறுதியாகவும் பொறுமையாகவும இன்னும் கொஞ்ச காலம் கூட இருந்தால் காந்தியார் ஆர்பாட்டங்கள் எல்லாம் தன்படியே அடங்கி விடுமென்று பொறுப்புடையார்கள் எல்லாம் அபிப்பிராயப்படுகிறார்கள்.

---

## ஸ்ரீமதி முத்துலட்சுமி மசோதாவுக்கு ஆதரவு.

18—3—30 உ நாகப்பட்டினம் தாலூகா எட்டுக் குடியில் திருக்குவளை திரு. வி. முத்துகுமரசாமி தலைமையில் ஒரு இசைவேளாள் கூட்டம் கூடிற்று. இசைவேளாக சகோதரரும் சகோதரிகளுமாய் ஆயிரம்பேருக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள், கூட்டத்தின் அவசியத்தைப்பற்றியும் பொட்டுக் கட்டுவதின் ஆபாசத்தைப் பற்றியும் சித்தாக்காடு திரு. கே. ராமைய்யாவும் கார்குடி திரு. கே ஆர். நடராஜனும் பேசிய பிறகு பொட்டுக் கட்டும் அநாகரீகமான வழக்கத்தை மிக அழுத்தமாகக் கண்டனம் செய்வதோடும் சென்னை டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் கொண்டுவந்திருக்கும் பொட்டுக் கட்டும் பழக்கத்தை தடுக்கும் மசோதாவிற்கு இப்பொதுக் கூட்டம் மனப் பூர்வமான சம்மதத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அரசாங்கத்தாரையும் சட்டசபை அங்கத்தினர்களையும் இச்சட்டத்தை நிறைவேற்றி சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவரச் செய்யக் கேட்டுக்கொள்கிறார்கள் என்கின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று கே. ராமய்யா எழுதுகிறார்.

## தாக்கனுக்கன்பாளையம் பெரியார், மரணம்

கோபிசெட்டிபாளையம் தாலூக்கா தாக்கனுக்கன் பாளையத்திலிருக்கும் திருவாளர் டி. எம். அட்டியண்ணை கவுண்டன் அவர்கள் தாயார் நாளது சுக்கில வருஷம் பங்குனி ஐந்தாம் நாள் [18-3-30] செவ்வாய்க்கிழமையன்று இரவு 11 மணி சுமாருக்கு பூதவுடலை நீத்தார் அன்று செய்ய வேண்டிய கிரிகைகளுக்கு பார்ப்பனீயம் வேதவாக்கியம் முதலான ஆபாச சடங்குகளின்றி நமது சுயமரியாதை இயக்கத்தின்படி எல்லா ஏழை மக்களுக்கும் சமரசமாக பணம், காசு இவைகள் கொடுத்து முடித்தும் மூன்றும் நாள் இருதிச் சடங்கையும் மேல் சொன்ன ஆபாசமான விஷயங்களை ஒழித்து தன் வீட்டிலேயே பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் நண்பர்களுக்கும் விருந்து நடத்தினார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## பார்ப்பனீயம்.

துப்புசாமி எழுதுவது.

தொன்றுதொட்டு நந்தமிழ் நாட்டின் கண் பாமர மக்களை ஏய்த்து ஏகபோகமாக தின்று கொழுத்து திண்ணைக்குத் திண்ணை எலி தின்ற பாம்புபோல் பெருமூச்சு விட்டுக் கொண்டு சாய்ந்து கிடக்கும் பார்ப்பாராணவம் தற்பொழுது சூரியனைக் கண்ட பனிபோலாய்க்கொண்டுவருகிறது. தங்களது உயர்வை காப்பாற்றிக்கொள்வதற்கென எழுதிவைத்த பொய்யும் புரட்டுமான புராண வேத இதிகாசங்கள் எல்லாம் நம் பார்ப்பனரல்லாத மக்களால் வெறுத்துத் தள்ளப்பட்டு தற்கால வாழ்க்கையானது காலதேச வர்த்தமானத்தை ஒத்தும் அநுபவ தன்மையை அநுசரித்தும் அறிவுக்கு பொருத்தமானவைகளைத் தெரிந்தும் அப்படியல்லாதவைகளைத் தள்ளியும் வரவர கல்வி அபிவிருத்தியானது அதிகரித்தும் தற்கால உலகம் நடைபெற்று வருகின்றது. பார்ப்பனீயம் என்பது பஞ்சாங்கத்தை ஆதாரமாகக்கொண்டு பல வழிகளிலும் பகற்கொள்ளை அடிக்கும் விதமாகவும் கோவில் என்றும், குளம் என்றும், மோட்சம் என்றும், பிதிர் கர்மம் என்றும், சொல்லி கொள்ளையடிக்கும் ஒரு அர்த்தமற்ற கொள்ளையாகவிருக்கின்றது. இம்படிப்பட்ட ஆபாசமான காரியங்களைச் சொல்லி வெட்கத்தை விலக்கு விற்று காசு வாங்குவதும எவ்வளவு கேவலமான ஒரு தொழிலையுடைய ஒரு கூட்டத்தாருக்குப் பொருத்தமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு தொழிலுக்கு பார்ப்பார் என்ற பெயரும் உயர்ந்த ஜாதிப்பட்டமும் எல்லா மக்களையும் அடிமை கொள்ளும் சுதந்திரமும் இதுவரை நம் நாட்டில் இருந்து வந்தது. வருகின்றது. நம்முன்னோர்களும் அதற்கு இசைந்தும் பொருத்துக்கொண்டு மிருந்தனர். மற்ற நம் மக்களுக்கு "சூத்திரன்" என்றஇழி பட்டமும்கொடுத்து விட்டனர். மனிதனை மனிதன் 'தொடக்கூடாதென்றும் தெருக்களில் நடக்க உரிமை இல்லையென்றும் சட்டம் விதித்திருக்கின்றனர். இவர்களது உயர்ந்த ஜாதி கூட்டத்தாருக்கு தற்போதிய உயர்ந்த தொழில்கள் என்னவென்றால் முதலாவதாக புரோகிதப் பார்ப்பான் தாசித் தெருவில் டாப்பர் மாமா தொழிலில் பார்ப்பான். ஜாதகம் சோதிடம் பார்க்கும் பார்ப்பான். இரவல் சோறு அகப்படும் இடங்களில் பார்ப்பான். அமாவாசையன்று முச்சந்தியில் தொந்தியைப் பரப்பிக்கொண்டு தர்ப்பணம் என்று கூப்பாடு போட்டுக்கொண்டு ஒரு பைசாவுக்கு பல்லை யிளித்துஉட்கார்ந்திருப்பவன்உயர்ந்த சாதிப் பார்ப்பான். மக்களை பல பிரிவுகளாக்கி விட்டதும் பார்ப்பான். ஒரு புளியோதரை உண்டைக் கட்டிக்கு கோவிலில் லாட்ரி போட்டுக்கொண்டு பல்லையிளிப்பவனும், அய்யங்கார் பார்ப்பான. கல்லுக்கு அபிஷேகம் செய்து காசுபறிப்பவனும்கோவில்பார்ப்பான். சரண்டி ஆபீசில் சட்டிச் சாரண்டும் வேறனும், காப்பிகிளப் பார்ப்பான். காட்டிக்கொடுத்து உத்தியோகம் வாங்குபவனும்மாமாபார்ப்பான். யாசகம்வாங்கிதட்சணையும்பெற்றுஇரவில்சோறு தின்று தெருத் தெருவாய் அலைபவனும்பார்ப்பான். ஏம்சாட்டை அடிமைப் படுத்தியதற்கு காரணமானதும் பார்ப்பான் ஐகோர்ட்டு ஜட்ஜ் பதவியிலிருப்பதும் பார்ப்பான் இங்கிலீஷ் நாகரீகத்திற்கு ஆளாகி மற்ற மக்களை வைதீகம் மாறாமல் இருக்கவும் சனாதன தர்மமகாநாடு கூட்டுபவர்களும் பார்ப்பான். இவ்விதமான துறைகளிலெல்லாம் இருந்து தங்கள் சுயநலமே பெரிதாக வெண்ணி காசு வாங்கியும் மற்ற மக்களை முன்னேறவொட்டாமல் செய்தும் இந்தியாவை வறுமை நாடாக்கி தங்கள் பெரிய தொப்பை வயிற்றை நிறப்பிக் கொண்டு பஞ்சம் தெரியாமல் அலைவதும் பார்ப்பான் இப்படிப்பட்ட கொடிய செயல்களையுடைய கொடும் பாவிகள் நம் இந்தியாவைப் பார்த்தும் மக்களைப் பார்த்தும் இன்னும் மனமிரங்காமல் கொள்ளையடிப்பதே தொழிலாகக்கொண்டு அலைந்தார்களேயானால் இவர்கள்எவ்வளவு சுயநலக்காரர்களாக இருக்கவேண்டும்'என்பதை யோசித்துப்பாருங்கள்.

ஆகையால் இனிமேலாவது நாம் இம் மோசக்காரப் பார்ப்பனர்களை எல்லாத் துறைகளிலும் அறவே விலக்க வேண்டுமாகக் கேட்டுக்கொள்கிறேன். பார்ப்பனீயம் ஒழியவேண்டும் அநாகரீகம் ஒழியவேண்டும். பார்ப்பனீயத்திற்கு ஆதாரமாக விருக்கும் கோவில்கள் ஒழியவேண்டும், வைதீகம் ஒழியவவண்டும், பஞ்சாங்கம் ஒழியவேண்டும், உச்சிக்குடுமைகள் ஒழிய வேண்டும், பார்ப்பன புராணங்களை தலைமேல் வைத்துக் கொண்டிருக்கும் பண்டித குடுக்கைகள் ஒழியவேண்டும். பார்ப்பன . வால்கள் ஒழியவேண்டும், பார்ப்பன ஆதிக்கம் தொலையவேண்டும். காளியம்மன் அங்காளம்மன், வீரன், பூரான், காட்டேரி பூச்சாண்டி இவைகள் ஒழியவேண்டும், மந்திரங்கள் ஒழியவேண்டும், தேர் ஓட்டம் திருவிழாக்கள் ஒழிய வேண்டும், தீண்டாமை ஒழியவேண்டும், ஆண் பெண் சமத்துவம் பரவ வேண்டும், சமய குறிகள் ஒழியவேண்டும், சாதிப்பட்டங்கள் ஒழியவேண்டும், இவைகள் ஒழிவதால் நம் நாடு முன்னேற்ற மடைந்து நாம் சுதந்தரம் பெறுவது உறுதி.

## நமது அநுதாபம்

கோவை பிராமணரல்லாதாரியக்கத்துக்கு உழைத்துவருபவரும் "குடி அரசு" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" பத்திரிகைகளுக்கு ஏஜண்டாயிருந்து வரும் உண்மைச் சுயமரியாதை வீரருமான திரு. எ. ஆர். சிவானந்தம் அவர்களுடைய 7 வயதுள்ள ஒரே பெண் குழந்தை காலமானதைக் கேட்டு வருந்துகின்றோம். திரு. சிவானந்தம் அவர்களுக்கும் அவருடைய மனைவியாருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# தவலச்சேரி

## தீயர்கள், நாடார்கள், பில்லவர்கள் மகாநாட்டில் தலைவர் திருவாளர்

# W. P. A. சௌந்திரபாண்டியர் M L C அவர்களின் சொற்பொழிவு.

சீமாட்டிகளே! சீமான்களே!

இப்பெரிய மகாநாட்டிற்கு தலைமை வகிக்கும் பெருமையை எனக்குக் கொடுத்ததற்கு அதிக சந்தோஷமடைகிறேன்.

இன்று மாலை நமது குறைகளைப் பற்றி விவாதிக்கவும் முன்னேற்றத்திற்கான முயற்சிகள் செய்யவும் நாமாகிய கிழக்கத்தியாரும் மேற்கத்தியாரும் இங்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். உங்கள் ஜில்லாவிலேயே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்காமல் என்னை தேர்ந்தெடுத்து என்னை இம்மகா நாட்டுக்கு அக்கிராசனம் வகிக்க கேட்டுக்கொண்டதின் காரணம் தமிழ் நாட்டில் நமது சமூக நிலையை சீர் படுத்திக்கொள்ள எத்தகைய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்பதை அறியவும் அதோடு சேர்ந்து இரு நாட்டாரும் ஒன்றுபட்டு உழைக்கலாம் என்கின்ற ஆசையுமே தான் காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நானே உங்களிடமிருந்தும் சில விஷயங்களையறிந்துகொள்ளலாமென்றே ஆசைவைத்து வந்திருக்கிறேன்.

நமது தலைவர்களால் நமது ராஜீய, சமூக முன்னேற்றத்திற்கு இத்தகைய மகாநாடுகள் இன்றியமையாததென வற்புறுத்தப் பட்டு வருகிறது. நமது தேசம் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கும் இது சமயம் ஒவ்வொரு ஜாதியும் ஒன்றுக்கொன்று நம்பிக்கையும் தங்கள் காலில் தாங்களே நிற்கும் சுயவலிமையும் ஏற்படும் படி செய்து கொண்டுதேசிய பொறுப்புகளை ஏற்க தாங்கள் தகுதியை காட்டவேண்டுவது அவசியமல்லவா?

ஆனால் எங்கள் பிராந்திய ஜனங்களுக்கு உங்களோடு அவ்வளவு பழக்கமில்லையென்றே சொல்வேன். உங்களுடைய பழக்க வழக்கங்களும் நான் அறிய முடியாமலேயிருந்தது. ஆனால் மலையாள குடிவார மசோதா சட்டசபையின் முன் இருந்த போது தான் அதைப்பற்றி அதிக கவனம் செலுத்த தொடங்கினேன். அப்பொழுது தான் தீயர்களுடைய சமூக நிலைமையை அறிய முடிந்தது. தெற்கு ஜில்லாக்களில் உள்ள சில நாடார்கள் இன்னும் தென்னை பனை மரங்களில் பாளை சீவுவதையே தொழிலாக உடையது போலவே உங்களிலும் பலர் அத்தொழில் செய்கிறார்கள் என்பதை அறிந்தேன். தென்னை மரங்களில் பாளை சீவுவது என்பது தொழில் என்ற முறையில் தாழ்மையானதல்ல வென்பதையும் பாவமல்ல வென்பதையும் கூற விரும்புகிறேன். ஆனால் கள்ளுக்காக சீவுவதென்பது அந்த விதமாகவே பாராட்டக் கூடியதல்ல. உங்கள் சாதியைப் பற்றிய கதைகளில் நீங்கள் பாளை சீவ வேண்டுவதும், கட்குடிக்க வேண்டுவதும் கடவுள் ஆணை என்று குறிப்பிட்டிருப்பதாகக் கேட்டு ஆச்சரியப் படுகிறேன். இதை விட முட்டாள் தன்மையானது வேறு எதுவும் இருக்க முடியாது. உண்மையில் மதத்தினால் ஏதாவது அனுகூலம் ஏற்படவேண்டுமானால் சனசமூகத்தை அது கண்ணியப்படுத்தக் கூடியதாயிருத்தல் வேண்டும் மதம் குடிக்கத் தூண்டுவதாயிருந்தாலும், அல்லது குடிக்கும் வலதுக்களை உண்டாக்குவதற்கு ஆதரவளிப்பதாயிருந்தாலும் அத்தகைய மதத்தை ஒழித்தாக வேண்டும் தீயர்கள் சக்தி பூஜை செய்வதாயும் அதற்கு சாராயமே உகந்த பூஜை சாமான் என்றும் படித்திருக்கிறேன் இதை விட மிகக் கேவலமானதும் இழிவானதும் வேறு ஏதாவது இருக்க முடியுமா வெனக் கேட்கிறேன். இப்போது நமது நாட்டில் தோன்றி இருக்கும் புரட்சி. இயக்கமாகிய சுயமரியாதை இயக்கமானது இதற்காகவே தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றது. இதில் தான் நான் பெரிதும் பங்கு கொண்டு மனப்பூர்வமாய் உழைத்து வருகிறேன். நாடார்களும் தீயர்களும் அனுபவித்து வரும் சமூக குறைபாடுகளும் தொல்லைகளும் அளவிறந்தன என்பதை நான் நன்றாய் உணர்கிறேன் மலையாளத்தில் தீயர்க்கள் உயர்ந்த ஜாதியாருக்கு பக்கத்தில் வந்து விட்டால் உயர்ந்த ஜாதியார் தீயர்களை வெட்டி வீழ்த்தும் வழக்கம் இருந்ததாகக் கூட ஜெனரல் சி. எம். பார்ட்டன் எழுதியிருக்கிறார் ஆனால் அத்தகைய தீய வழக்கம் தற்காலம் இல்லை என்றே நம்புகிறேன். உங்கள் குருவான நாராயணகுருஸ்வாமி முன்னேற்றத்திற்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். நீங்கள் பெரிதும் அவரது அடிச்சுவட்டையே பின்பற்றி சீர்திருத்த மடைய வேண்டும்.

ஒரு சமயத்தில் சென்னை கவர்னர் கூறிய மொழிகளை இப்பொழுது நினைப்பூட்ட விரும்புகிறேன் "ஒரு சமூகத்தாரை ஒடுக்கப்பட்டவர் என்று புறக்கணிக்க காரணம் என்ன? எந்த தேச பாஷையிலாவது பஞ்சமர் என்ற பதத்துக்கு பிரதி பதம் உண்டா" என்று சென்னை கவர்னர் வெகு ஆத்திரத்துடன் கேட்டார். பிறப்பு காரணமாக ஒரு சமூகத்தை அடிமைக்குழியில் ஆழ்த்தி வைப்பதென்பது உலகத்தில் வேறு எங்குமே இல்லை ஒடுக்கப்பட்டவர்கள் கஷ்டங்களைப் பற்றிப் பேசும் போது உங்களால் செறுமர், நாயாடிகள் முதலியவர்களை நடத்தப்படும் விதம் மிக வருந்தத்தக்கதா யிருக்கிறது. மற்றவர்கள் நம்மை கவுரவமாக நடத்த வேண்டும் என்று நாம் விரும்பினால் நாமும் மற்றவர்களை கௌரவமாக நடத்த முதலில் தயாராயிருக்கவேண்டும். எந்த ஜாதியாருக்கும் நீங்கள் உயர்ந்தவர்களென்றோ எந்தசமூகத்தாருக்கும்நீங்கள் தாழ்ந்தவர்களென்றோ ஒருக்காலமும் கருதாதீர்கள் தீவார் என்பது தீவில் வாழ்பவர்கள் என்று பொருள் ஆதியில் நீங்கள் தீவார் என்று தான் அழைக்கப்பட்டீாகள் தீவார் என்னும் பெயர் காலக்கிரமத்தில் மருவி தீயராயிற்று ஆகவே தீயர் என்னும் பதத்தில் கீழ்மையைக் குறிக்கும்பொருள் எதுவுமில்லை நமது சமூக குறைபாடுகளையொழிக்க கல்வியபிவிருத்தி செய்ய வேண்டும் தென்னாட்டில்நாடார்கள்முன்னேற்றத்திற்காக அனேக பாடசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள் அது போலவே நிதி சேர்த்து பாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டும். நாங்கள் ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறோம. அது போல நீங்களும் செய்யவேண்டுமென விரும்புகிறேன்.

ஆனால் பணமில்லாமல் சங்கமும் கல்வியும் விருத்தியடையாது பள்ளிக்கூடங்களும் தோன்றமாட்டா? இந்த நிலையில் கலியாணத்துக்கும் கருமாதிக்கும் சாமி வழிபாட்டிற்கும் கணக்கற்ற பணத்தை வாரி இறைத்து பாழாக்குவது மூடத் தனமல்லவா?

கணக்கற்ற பொருள் செலவு செய்து தூரதேசங்களுக்கு தீர்த்தயாத்திரை போகிறீர்கள். ஆலய வழிபாடும் காணிக்கையும் மாமூல்வழக்கமென்று நீங்கள் சொல்லுவீர்கள். பஞ்ச காலங்களில் சர்க்காராவது நில வரியை வஜா செய்துவிடுவார்கள். ஆனால் கோவில் வரிக்கோ ஒருநாளும் ஓய்வொழிவு கிடையாது இவ்வண்ணம் பணத்தைப் பாழாக்குவது நியாயமாவென்று கேட்கின்றேன். இந்தப்பணத்தையெல்லாம் உங்கள் பிள்ளைகள் கல்விக்காக செலவு செய்யுங்கள். அதனால் சமூகமும் நாடும் முன்னேற்றமடையும் தீர்த்த யாத்திரை காணிக்கை முதலிய வீண் செலவுகள் செய்யும் மூட பழக்க வழக்கங்களை அரவே யொழிக்க தீவிர முயற்சி செய்யுங்கள். ஆண்கள் சீர்திருத்த விஷயத்தில் அக்கரை உடையவராக யிருந்தும் பெண்கள் கர்னாடகப் பேர்வழிகளாயிருப்பதாலேயே அவர்களைத் திருப்தி படுத்தும் பொருட்டு புருஷர்கள் மூடப் பழக்க வழக்கங்களை அனுஷ்டிக்கக் கட்டாயப் படுத்தப்படுகிறார்களென்றும் சொல்லப் படுகிறது. அப்படியானால் முதலில் பெண் கல்வியை விருத்தி செய்து அவர்கள் நிலையை உயர்த்தப் பாடு படவேண்டும், கல்வி கேள்விகளில் அவர்கள் உயர்ந்தால்தான் மூட பழக்கவழக்கங்களில் உள்ள பற்று ஒழியும். பெண்களுக்கு சமஉரிமையும் சம சுதந்திரமும் சொத்துரிமையும் அளிக்கபடவேண்டும். இவைகள் பெரிதும் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கையாகும். மற்றும் சமூக சீர்திருத்தங்களுக்குச் சட்டம் செய்வது சர்க்கார் கடமை யென ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் இக் காலத்தில் அதிர்ஷ்டவசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். சுயமரியாதை இயக்கத்தில் சமூக சீர்திருத்த விஷயத்தில் பொது ஜனங்கள் மனதில் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

தேசிய முன்னேற்றத்திற்கு சட்டசபை ஒரு முக்கிய சாதனமாகும் ஆகையால் தேர்தல்களில் சீர்திருத்தத்தில்நம்பிக்கை யுள்ளவர்களையே தேர்ந்தெடுத்து சட்ட சபைகளுக்கு அனுப்பவேண்டும். தேர்தல் காலங்களில் ஒற்றுமையாக வேலை செய்து வெற்றி பெற முயற்சி செய்யீர்களாக.

நாடார்கள் 100க்கு ஆறேகால் வீதமே கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் பொருளாதார விஷயத்தில் தென்னாட்டு நாடார்கள் உங்களைவிட மேலானவர்களே. எல்லாத்துறைகளிலும் அவர்களுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மாமூல் ஆசாரங்கள் எல்லாம் ஒடிமறைந்து வருகின்றன. காலத்திற்கொத்தவாறு நீங்களும் புதிய முறைகளை கண்டுபிடிக்க வேண்டும். தற்காலத்தியயந்திரங்களை முயல அதிகமாக கையாள வேண்டும். பதனீரை கருப்பட்டியாக்கும் முறை முறைவிசேஷமானது.எங்கள் ஜில்லாவிலும் அதற்காக அதிக கவனம் செலுத்தி வருகிறோம். அதுபோலவே நீங்களும் உங்கள் கைத் தொழிலையும் விசேஷமாக கவனிக்கப்படவேண்டும். நண்பர்களே! கடைசியாக உங்கள் சமூக குறைபாடுகளை யொழித்து சுயமரியாதையை நிலை நாட்டப்பாடுபட வேண்டுகிறேன்.

## சர் முகமது உஸ்மான்

சென்னை நிர்வாக சபையில் சர் முகமது உஸ்மான் அவர்களுடை ஸ்தானம்,காலியானதை முன்னிட்டு திரு. ராவ் பகதூர் எம். சி. ராஜா அவர்களை மேல்படி ஸ்தானத்துக்கு நியமிக்க முயற்சி யெடுத்துக் கொள்ளப்பட்டது யாவரும் அறிந்ததாகும்.

கனம் வைசிராய் அவர்களும் செக்ரெட்டரிஆப்ஸ்டேட்அவர்களும் அதற்கு அனுகூலமாயிருந்ததும் யாவருக்கும் தெரியும் ஆனால சென்னை கவர்னர் சர் உஸ்மான் அவர்களையே மறுபடியும்ஒருவருஷம்வேலை பார்க்க அனுமதித்துசிபார்சுசெய்ததால் கனம் வைசிராய் அவர்களும்அரசர் பெருமானும் அதை ஒப்புக் கொள்ள வேண்டியதாகி விட்டது. எனினும்அடுத்த காலாவதியில் திரு. எம். சி. ராஜா அவர்கள் நிர்வாக சபையில் அங்கத்தினர் பதவி பெறக்கூடுமென எதிர்பார்க்கிறோம்.

## சுயமரியாதைச் சங்கத் தலைவரவர்களுக்கு

# எனது விண்ணப்பம்

சங்கராச்சாரியார் என்னும் லோக குருவானவர் கடந்த ஒரு வார காலமாக போளூர் பாகங்களில் முகாம் போட்டுக்கொண்டிருந்தார். அவரது முகாமை விபரமாக எழுதுவதற்கு எனக்குநேரமில்லாமையால் சுருக்கமாகஎழுதுவதும் அவசியமாக விருக்கிறபடியால் எழுதுகிறேன். யார் ஒருவர் அல்லது எந்த கிராமத்தார்கள் சங்கராச்சாரியார் சுவாமிகளின் ஆசீர்வாதங்களை விரும்புகிறார்களோ, அவர்கள் எர்களை ஒரு தினத்திற்குறிய ரூ. 476-4-2 கட்டினால் அந்த ஊருக்குப் போய் சுகாக்கள் தங்குகிறார்கள். இதோடு பிரத்தியேகமான பாத பூஜைக்கு ரூ. 100 எவர்கள் கட்டுகிறார்களோ அவர்களுக்கு பாத பூஜையின் சேவை கொடுக்கப்படுகிறது. சங்கராச்சாரியார் சுவாமிகள் பல்லக்கில் அமர ஆட்கள் சுமந்துச்செல்லுகிறார்கள். சுவகமிகள் புறப்படும் சமயமும் இறங்கும் சமயமும் பாங்கா ஊதப்படுகிறது. சுவாமிகளுக்கு முன்னும் பின்னுமாக அவரது படைகள் ஏறக்குறைய 200 பேர்கள் பின் தொடருகிறார்கள். சுவாமிகளை சேவிப்பதில் அவரது ஆட்படையுடன் யானை, ஒட்டை, குதிரைகள், வண்டிகள், வண்டி மாடுகள், பசு மாடுகள், பில்லைகள் தாங்கிய சேவகர்களும், ஈட்டியும், துப்பாக்கியும் தாங்கிய சேவகர்களும், மேளவாத்தியக்காரர்களும், பெண்களான சேவைக்காரர்களும் பின் தொடர்ந்து செல்லுகின்றனர். சுவாமிகளின்சைன்னியங்கள் போளூரில் ஒரு நாள், மாம்பட்டு ஒரு நாள். மூலக்காடு ஒரு நாள், சிறுவள்ளூரில் ஒரு நாள் பெரியகரம் ஒரு நாள், மறுபடியும் போளூரில் ஒரு நாள், ஆக ஆறுநாள் முகாமில் என்ன விசேஷம் அல்லது நன்மையை தேசத்துக்கு சுவாமிகள் செய்யக்கூடுமென்பதை கவனிக்கும் பொருட்டே நானும் பின்தொடர்ந்து கவனித்து வந்ததில் தெரிந்துகொண்டதை மற்ற எனது வாசகர்களும் அறிந்து கொள்ளும்பொருட்டே சிலவற்றை மட்டும் இங்கு எழுதலானேன். எந்த ஊரார்மட்டும் ரூபாய் 476-4-2 ஒரு தினத்திற்கு கட்டுகிறார்களோ அந்த ஊருக்குப் போனதும், அந்த ஊரில் அன்றையதினம் விருந்து செய்கிறார்கள். அந்த விருந்து சாப்பாடு பிராமணர்களுக்கு மட்டுந்தான். "சூத்திரர்கள்" கிட்டவும் போகக்கூடாது, சூத்திரர்களுக்கு சாப்பாடு போட்டால் மகா பாவம் வந்து அமருமாம். பிராமணர்களுக்கு அந்தந்த ஊரில் "சூத்திரர்களிடமிருந்து பணம் வசூலித்து அந்தப்பணத்தைக்கொண்டு நடத்தப்படும் விருந்தில சூத்திரன் போகக்கூடாது. பிராமண ஆண் பெண் பிள்ளைகள் விசேஷமாக மொட்டைப் பாப்பாத்திகள் விலாப்புடைக்க விருந்துண்டதையும், சாப்பாடு கிடைக்குமென்று எதிர்நோக்கி வந்திருந்த குருவிகாரர்கள், இருளர்கள், தெருவு பெருக்கிகள் ஏமாந்து நின்றதையும் வியப்புடன் கண்டோம்.

பிராமணர்கள் எந்த ஊரில் இருக்கிறார்களோ அவ்வூரிலுள்ள "சூத்திரர்" களிடமே தலைக்கு இவ்வளவென்று மொத்தமாக ரூ. 476-4-2 வசூலித்து சுவாமிகளின் மனேஜரிடம் கட்டிவிடுகிறார்கள். அந்த ஊருக்கு சுவாமிகளின் புறப்பாடு ஆனவுடன் விருந்துக்கு பிராமணர்களே குமிழ்ந்திருக்கிறார்கள் சங்கராச்சாரியார் சுவாமிகள் பகலிலே யாரிடமும் பேசுகிறதில்லையாம், இரவு 10 மணிக்கு மேல் காலை 4 மணி யுட்பட பேசுவாராம் பாத பூஜைக்காக 100 ரூபா கொடுக்கிறவர்கள் பாதத்தைதொட்டு நமஸ்கரிப்பவர்களுக்கு, விபூதி வாழைப்பழம் 1 தேங்காய் 1 கொடுப்பதுடன் சிலேட்டுப் பலகையில் சிலதை எழுதி தமது அந்தரங்க காரியதரிசிகளிடம் கொடுக்க அது வியாக்கியானம் செய்யப்படுகிறது: "சூத்திரர்கள்" கிட்டப் போனால் தீட்டுவரும் என்பதாக பிராமணர்கள் "சூத்திரர்களை" தூரத்திலே தடுத்துவைக்கிறார்கள் சுவாமிகளின் தரிசனத்துக்கு ஆவல் கொள்ளும் "சூத்திர"க்கும்புகள் மேல் வஸ்திரம் இல்லாமல் காத்திருக்கிறார்கள் இவர்கள் காத்திருப்பதை சுவாமிகள் அறிந்து கொண்ட பின்னர் வீட்டின் மச்சு அல்லது உயரமான ஓர் இடத்தில் நின்று தம்மை ஜனக்கும்புக்கு காட்டுகிறார். அப்போது பகுத்தறிவில்லாத வாசிப்பில்லாத ஜனங்கள் கீழே விழுந்து நமஸ்கரிக்கிறார்கள் சுவாமிகளோ வாய் திறப்பதில்லை ரூபாய்கள் கொடுக்கும் ஊர்களுக்கும் தெருக்களுக்கும் சுவாமிகள் பல்லக்கில் எழுந்தருளி போகும் போது தீபாராதனை காட்டி தேங்காய் உடைக்கிறார்கள். சுவாமிகளோ பல்லக்கினுள்மௌனம் சாதித்து தமது ஆசீர்வாதங்களை தமது தரகர்கள் மூலமாய் நடத்திக் கொண்டு போகிறார்.

சுவாமிகள் சில அற்புதங்கள் செய்வதாக இப்பக்கங்களில் தமது சகாக்களினால் வெளியிடப்பட்டன, அவை யாவன:—தங்கள் பரிவாரங்களான மிருகங்களுக்கு ஒரு நாளைக்கு வைக்கோல் போர் ஒன்று செலவாகிறது குடியானவர்களிடம் போய் வைக்கோல் போர் ஒன்று சுவாமிகளுக்கு தரும்படியாக கேட்கிறார்கள். கொடுக்க மறுத்து விட்டாலோ அடேதெரியாதா சமாச்சாரம் அந்த ஊரிலே வைக்கோல் தரமாட்டேன் என்று ஒரு மிராசுதாரன் சொன்னான் அவனும் அவனைச் சேர்ந்தவர்களும்வைக்கோலையே பிடுங்கி பிடுங்கி தின்று கொண்டேயிருக்கிறார்கள் நீ வைக்கோல் இல்லையென்று சொன்னது சுவாமிகளுக்கு ஞான திருஷ்டியினால் தெரிந்து விட்டால் உனக்கும் அனர்த்தம் வந்து விடும், அவர் லோகத்துக்கு ஜெகத்குரு, அவரிடத்தில் அநேக மகத்துவங்கள் உண்டு, கெட்டுப் போகாதே என்பதாக பயமுறுத்தி வைக்கோல் போரை கொண்டு வந்து மாடுகளுக்கும் யானைக்கும் போடுகிறார்கள். இரண்டாம் அற்புதம் போருநல்லூர் பிராமணனால் சொல்லப்பட்டதென்ன வென்றால், சுவாமிகளிடம் நாகசுரம் ஊதுகிறவன் ஒருவன் அவனுக்குச் சம்பளம் போதவில்லை. தான் போய் விடவேண்டுமென்று கேட்டானும்நீ போகலாமென்றுசுவாமிகள் உத்தரவிட அவன்வெளிசென்று பிழைக்கும் தொழிலாகிய நாகசுரதை எடுத்து ஊதப் போகும் சமயம், நாகசுரத்தை ஊதமுடியாமல் வாய்க்கு மாருட்டம் வந்து விட்டதாம். ஆனதால் சுவாமிகளுக்கு பயந்து நடவுங்கள் என்று எச்சரிக்கை இவ்வூரில் செய்யப்பட்டது.

சுவாமிகளின் சைன்னியங்களுடன் காராம் பசுவொன்று பின்தொடருகிறது, அது தானாகவே ஒருவரும் கரவாமலே பாலை சுவாமிகளுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறதாம். இவ்விதமான அநேக கட்டுக் கதைகளை ஜனங்களுக்குள் பரப்பிவிட்டிருக்கிறார்கள், சுவாமிகளுக்கு போளூர் தையற்கடையில் பிரத்தியேகமாக பட்டுத் துணிகளால், தலையணைகள். மெத்தைகள், சிங்காரமாக தைக்கப்பட்டன சுவாமிகள், சுவாமியைப் போலவே அவரது சிஷ்யர்களால் போஷிக்கமபட்டும், பாதுகாக்கப்பட்டும், பட்டுப் பஞ்சணை மெத்தையில் கிடத்தப்பட்டும். தூக்கப்பட்டும். நடத்தப்பட்டுமாக இருந்து வருகிறது வெகு வியப்பாகவே யிருக்கிறது. எவ்விதமாக ஒரு விக்கிரகத்தை ஜனங்கள் சப்பிரத்தில் தூக்கி வைப்பதும், சேவிப்பதுமாக யிருக்கிறார்களோ அதே விதமான சேவையும் நடவடிக்கைகளும் குணலாபங்களும் சுவாமிகளால் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதை விவேகிகள் பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடும். சங்கராச்சாரியார் சுவாமிகளால் தேசத்துக்கு ஒரு நன்மையுமே இல்லை. இனியும் உண்டாகப் போவதில்லை. ஜனங்கள் ஈடேறும்படியான ஆன்மீக உபதேசம் செய்வதும் கிடையாது, ரூபாய்கள் கொடுக்குமிடம் எழுந்தருளி அவ்விடம் சென்றவுடன் மௌன விரதம் பூண்டு, பாத காணிக்கைக்குப் பிரத்தியேகமான பணம்கொடுப்பவர்களுக்கு விபூதியைக்கொடுப்பதுமாயிருந்தால்என்ன ஈடேற்றம் ஜனங்களுக்குக்கிடைக்குமென்பதுதோன்றவில்லை. மகாத்மாகாந்திஇந்தியாவிற்குசுயராஜ்யம்வேண்டுமென்று உபதேசங்களும் கிளர்ச்சிகளும் செய்துகொண்டு வருகிறார். சங்கை பொருந்திய ராமசாமிப் பெரியார் சுயமரியாதை நமது சனங்களுக்கு உண்டாகுமாறும் மூட பழக்க வழக்கங்களை கர்ணாடகமாகச் செய்யாமல், பகுத்தறிவைக் கிளப்புமாறும் தேசத்தில் பூரண அன்பைக்கொண்டு எல்லா சமூகத்தினரையும் சமரசப்படுத்தி ஏக தெய்வ வழிப்பாட்டுக்குச் செலுத்தி ஒற்றுமையுண்டானால் சுயராஜ்யத்தை கைப்பற்ற அருகராவோம். என்கிற விஷயத்தில் தேசத்தை நடத்துகிறார்.

ஸ்ரீ கைவல்ய சுவாமிகள் தமது ஆழ்ந்த ஆராய்ச்சியால் புராண இதிகாசங்களை துவேஷமற்ற மனதுடன் வியாக்கியானம் செய்து விளக்கிக் காட்டி பகுத்தறிவை தூண்டி வருகிறார் லோக குருவென்னும் சங்கராச்சாரியார் சுவாமிகளோ ரூ. 476—4—2 கொடுக்கும் ஊர்களுக்கு மட்டும் தமது பரிவாரங்களுடன் போய் மௌன விரதம் பூண்டு விபூதியை அள்ளிக் கொடுத்தபின் பட்டுப் பஞ்சணை மெத்தையில் கிடத்தப்பட்டு தபசு செய்து கொண்டிருக்கிறார். மேற் கண்டவர்களில்யார்தேசத்துக்கு நன்மையும் ஆசீர்வாதங்களும், தேசமுன்னேற்றமும், ஈடேற்றமும் கிடைக்கும்படியான துறைகளில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்என்பதை வாசகர்களேஉங்கள்பகுத்தறிவைக்கொண்டுகிரகித்துசுயமரியாதைநமது தேசத்தில் உண்டாகுமாறு ஒற்றுமைத்து நமதுத சங்கத்லைவரை ஆதரித்து ஆசீர்வதியுங்கள்.

இப்படிக்கு;
"குடி அரசு" நண்பன்
**J. S. B.**

---

## தேவை

நமது "குடிஅரசு" பதிப்பகத்துக்கு அனுபவமுள்ள இங்கிலீஷ் கம்பாசிட்டர் ஒருவரும் தமிழ்க்கம்பாசிட்டர் ஒருவரும் உடனே தேவை விபரத்துக்குநேரிலாவது விண்ணப்ப மூலமாகவாவதுதெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

---

## சுயமரியாதை திருமணம்

திருத்துரைப் பூண்டி தாலூக்கா விளக்குடி கிராமத்திலிருக்கும் திருவாளர் சிவசாமிநாடார் செல்வன் பாரிஜாதத்திற்கும் நன்னிலம் தாலூக்கா ராதாம்பூரிலிருக்கும் திருவாளர் ஆ. குமாரசாமி நாடார் அவர்கள் புத்திரி சௌ: பங்காரம்மாளுக்கும் 20-3.30 வியாழக்கிழமைபுரோகிதம் ஆபாசமான சடங்குகளைஒழித்து சுயமரியாதையியக்கத்தின்படி திருமணம் நடந்தேறியதுபிறகு சுயமரியாதையியக்கத்தைப் பற்றியும் மூடபழக்கவழக்க சடங்குகளைப்பற்றியும் பல அன்பர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள் பின்பு இத்திருமணம் நடந்தேறியதற்காக குடியரசுக்கும் திராவிடனுக்கும் 1-ரூ. வீதம் நன்கொடை அனுப்பப் பட்டு விவாகம் இனிது நடந்தேறியது என ஒரு நிருபர்எழுதுகிறார்.

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"


# குடி அரசு

ஈரோடு 1930 மார்ச்சு ௴ 30-௳


## ஈரோட்டில் மகாநாடுகள்.

இரண்டாவது சுயமரியாதை மகாநாடு ஈரோட்டில் மே மாத முதல் வாரத்தில் கூட்டப்படுவதற்கு வேண்டிய முயர்ச்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதே சமயத்தில் மற்றும் பல மகாநாடுகள் அதாவது பெண்கள் மகாநாடு மது விலக்கு மகாநாடு, சங்கீதமகாநாடு, முதலிய மகாநாடுகளும், விவசாயம் கைத்தொழில் முதலிய பொருள் காட்சிகளும் நடத்தப்படவேண்டும் என்று பல நண்பர்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதற்கு இணங்க அவைகளையும் நடத்த வேண்டும் என்னும் உத்தேசத்துடன் வேலைகள் நடந்து வருகின்றன.

மகாநாட்டிற்கு இதுவரை சுமார் 5000 ஐயாயிரரூபாய்களே வாக்களிக்கப் பட்டிருக்கின்றது என்றாலும் ஒட்டுமொத்தம் சுமார் 10000 ரூ பதினாயிர ரூபாவரையில் வசூலில் எதிர்பார்க்கலாம் என்றே கருதி இருக்கின்றோம். மகாநாடுகள் அதிகமாயிருப்பதாலும் குறைந்தது 4, 5 நாள்களுக்காவது நடத்த மேண்டுமென்று கருதியிருப்பதாலும் மேல்கண்ட பதினாயிரம் ரூ. போருமென்று சொல்வதற்கு இடமில்லை. ஆகவே வரவேற்பு கமிட்டி போஷர்களுக்கு 25 ரூ. என்றும் வரவேற்பு கமிட்டி அங்கத்தினர்களுக்கு 5 ரூ. என்றும் பிரதிநிதிகளுக்கும் மூன்று ரூபா என்றும் மேல்கண்ட மூன்று வகைக்கும் சாப்பாட்டு கட்டண மில்லாமல் போடுவதென்றும் விசிட்டர்களுக்கு கட்டணம் ஒரு ரூபாய் என்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது நிற்க, திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் வரவேற்புக் கமிட்டித்தலைவராகவும் திருவாளர் கோவை சேர்மென் அன்டு ஜிலாபோர்டு பிரசிடெண்டு, ராவ் பகதூர்சி: எஸ். இரத்தினசபாபதி முதலியார், ஈரோடுசேர்மன் K.A. ஷேக்தாவுத்து ராயபுரம்ராமநாதன் ஆகிய கனவான்கள் பொதுகாரியதரிசிகளாவும் இருந்துமகாநாட்டை சிறப்புடன் நடத்திகொடுக்க தயவுடன் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள், மற்றும் மகாநாட்டுக்கு வாலண்டியர்களாக இருந்து மனப்பூர்வமாய் தொண்டு செய்வதற்கும் அநேக தொண்டர்கள் முன் வந்து தாங்களாகவேதினம் பல கடிதங்கள் எழுதியும் நேரில் வந்தும் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டும் மிருக்கின்றார்கள் மற்றும் பொது ஜனங்கள் அன்பாகவும் ஆவலாகவும் மகாநாட்டு விஷயத்தில் பல யோசனைகளையும் ஊக்கங்களையும் அளித்துக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே மகாநாடுகள் ஒரு விதத்தில் திருப்திகரமாயும் வெற்றிகரமாயும் நடைபெறுமென்றேமுழு நம்பிக்கையுடனேயே இருக்கின்றோம் என்றாலும் மகாநாட்டுக்கும் அதன் கொள்கைகளுக்கும் எதிர்ப்புக் கூட்டம் சில இருந்து கொண்டு அவை தடங்கலான விஷமங்களை செய்து கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் மறைக்க முயலவில்லை.

உதாரணமாக இவ்வார சட்டசபையில் சைவ சித்தாந்த ஆசிரியர் திரு பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் கேட்ட கேள்விகளில் இருந்தே ஒருவாறு அறியலாம். அதாவது சுயமரியாதைஇயக்கத்தார்களை மத சம்மந்தமான உத்தியோகத்தில் நியமிக்கலாமா என்றும் சுயமரியாதைக்காரர்கள் விக்கிரக ஆராதனைக்கு விரோதிகள் அல்லவா என்றும் மற்றும் பல கேழ்விகள் கேள்க்கபபட்டதிலிருந்து இந்து மதமும் இந்து பரிபாலன போர்டுகளும் ஸ்தாபனங்களும் விக்கிரக ஆராதனைக்காரர்களான கூட்டத்தார்களுக்கே சொந்தமான தென்றும் கருதிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதும் அவர்களால் கூடிய இடையூறுகளை யெல்லாம் செய்யத்தயாராயிருக்கின்றார்கள் என்பதும் நன்றாய் விளங்குகின்றது. மற்றொருபுரம் ஒரு கூட்டம் சுயமரியாதை இயக்கம் சர்க்காருக்கு அடிமைப்பட்ட கூட்டமென்றும் உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்ட கூட்ட மென்றும் சொல்லிப் பிரசாரம் செய்வதும், மற்றொரு புரம் சுயமரியாதை இயக்கம் மந்திரிகளை ஆதரிக்கின்ற இயக்கம் என்றும் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதும் மறைக்கக்கூடியதல்ல இவைகள் ஒரு புரம் இப்படியிருக்கஇது சமயம திரு. காந்தி அவர்களால் துவக்கப்பட்டிருக்கும் உப்புக்காச்சும் சத்தியாக்கிரகத்தின் கிளர்ச்சியினால் தென்னாட்டில் ஒரு கூட்டம் "உலகமே திரண்டு திரு. காந்தியாரைப் பின்பற்றி இந்த சர்க்காரை ஒழிக்கப்போகும் சமயத்தில் சுயமரியாதை இயக்கத்தார் சர்க்காரை ஆதரித்து விடுதலைக்கும் பூரண சுயேச்சைக்கும் எதிரியாய் இருக்கின்றார்கள்" என்று பாமர மக்களை விஷமத்தனமாய் கிளப்பி விட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். இவை இப்படியிருக்க,

மற்றொருபுரம் ஆதாரமில்லாமல் சிலர் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் திடீர் திடீர் என்று தங்களுக்கு தோன்றிய காரியங்களைச்செய்வதும், தோன்றிய அபிப்பிராயங்களை வெளியிடுவதுமான காரியங்களால் பொது ஜனங்களின் மனதை குழப்பத்திற்குள்ளாக்குவதுமாகச் செய்து வருவதும் யாரும் அறியாததல்ல. ஆகவே இபபடியாக பலவித எதிர்ப்புகளும் சங்கங்களும் இருந்து வருகின்றது.

எதுஎப்படி இருந்தபோதிலும் நமது கொள்கைகளை யோகர்ம உலகவிடுதலைக்கும் சிரப்பாக நமது நாட்டுக்குப குறிப்பாக பார்ப்பனரல்லாத கூட்டத்தாருக்கும் பூரண ஆதாரமாக்க் கருதி இருப்பதால் அதன் பலாபலனை தனித்து நின்றாவது அனுபவித்துத் தீரவேண்டிய உறுதி கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோமாதலால் பின்வாங்க முடியாத நிலையில் எதற்கும் இருக்கின்றோம.

என்பதை பொது ஜனங்களுக்கு வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நிற்க இவ்வியக்கம் ஏற்பட்ட பிறகு தமிழ் நாட்டில் அடிக்கடி சுயமரியாதை மகாநாடுகள் கூடுவதும் இது சமமந்தமாக பல ஆண்டு விழாக்கள் கொண்டாட்டங்கள் முதலியவைகள் நடப்பதுமாயிருப்பதின் மூலம் அன்பர்களுக்கு அடிக்கடி செலவுகள் ஏற்பட்டு வருவதும் நமக்கு நன்றாய் தெரியுமானாலும் பலவித எதிர்ப்புகளுக்கும் பார்ப்பனர்களின் சூட்சிக்கும் இம்மாதிரி அடிக்கடி மக்கள் கூடி இக்கொள்கைகளை ஒப்புக் கொண்டு அமுலில் நடத்த முயற்சிகள் செய்வது தான் தகுந்த பதிலே ஒழிய வேறு இல்லை. ஆதலால இம்மாதிரியான காரியங்களை பிரசாரத்தை முன்னிட்டு செய்து தீரவேண்டியதாயிருக்கின்றது. அன்றியும் அரசியல் விஷயங்களுக்காக இதுவரை மக்கள் அடைந்த நஷ்டத்திற்கும் பட்ட கஷ்டத்திற்கும் அதனால நாட்டிற்கு ஏற்பட்ட பல பல கெடுதிகளுக்கும் கணக்கு போட்டுபார்த்தால் இந்த சமூகஇயக்கத்திற்கு செலவாகும் நஷ்டமும் கஷ்டமும் பதினாயிரத்தில் ஒரு பங்கு கூட இருக்காதென்றே சொல்லுவோம். ஆதலால் தமிழ் நாட்டு இளைஞர்கள் கவனித்து தமிழ் மக்களுக்கு இன்றியமையாத இந்த இயக்கத்திற்காக நடைபெறும் மகாநாட்டை சிறப்புறநடத்திபலன் பெறஉதவிசெய்யவேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

### சாரதா சட்டம்

திரு. எம். கே. ஆச்சாரி போன்றவாகள் கூக்குரலாலும் சில பார்ப்பனர்களுடையவும் இரண்டொரு வைதீக முஸ்லீம்களுடையவும் மிரட்டல்களாலும் உப்புக்காய்ச்சிகளின் நாடகத்தாலும் சர்க்காரால் சாரதா சட்டத்திற்கு ஏதாவது பாதகம் ஏற்படுமோ என்பதாக பலர் கவலைப்பட்டு நமக்கு எழுதியதை உத்தேசித்து டெல்லிக்குத் தந்தி அடித்துக் கேட்டதில் "அதைப்பற்றி யாரும் கவலைப் படவேண்டியதில்லை யென்றும் அச்சட்டத்திற்கு ஒன்றும் விபரீதம் ஏற்பட்டுவிடாது"தென்றும் உயர் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் நமக்குபபதில் தந்திகொடுத்திருக்கிறாகள்.

### திரு பன்னீர் செல்வம்

தஞ்சை ஜில்லா போர்டுக்கு தரு. ஏ. டி. பன்னீர் செல்வம் பார்-அட்லா அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை சர்க்கார் அங்கீகாரம் பெற்று அரசாங்க கெஜட்டிலும் பிரசுரமாகியிருக்கும் சங்கதியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

### ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு சிவகாசி

நாளது சுக்கில ஆண்டு பங்குனித் திங்கள் 23, 24ம் நாள் சனி ஞாயற்றுக் கிழமைகளில் [ 5, 6-4-30] சிவகாசி பெண் பாடசாலை மைதானத்தில் அமைத்திருக்கும் சௌந்தர மகாலில் கோவை நாட்டாண்மை கழகத் தலைவர் திரு. ராவ் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும், உயர் திரு. ஈ. வெ. ராமசாமி பெரியார் அவர்கள கொடியேற்றுவிழா ஆற்றுவார்கள். திருவாளர் ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி அவர்கள் மகாட்டைத் திறந்து வைப்பார்கள். மாகாண மற்றும் பிரபலதலைவர்களெல்லகம் விஜயம் செய்வார்கள்.

டெலிகேட்டுகளுக்கு சாப்பாட்டு வசதியும் தங்குவதற்கு சௌகரியமான இடமும் தயார் செய்திருக்கிறோம்

டிக்கட்:— ரூ. 10. 5. 1.

எம். எஸ். கே. எஸ். கருப்பைய நாடார் பொது காரியதரிசி.

ஜே என்.பி., சிவகாமிநாதபிள் உபசரனைக்கமிட்டித்தலைவர்,

# 2-வது சுயமரியாதை மகாநாடு

## வரவேற்புக் கழகக் கூட்டம்

மகாநாடு மே-மீ 10, 11 தேதிகளில் ஈரோட்டில் நடைபெறும்.

29—3—30 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு ஈரோடு திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாளிகையில் மாகாண 2-வது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கழக பூர்வாங்கமான கூட்டம் நடைபெற்றது உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். கோவை ஜில்லா போர்டு தலைவர், ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி, அவர்கள் காலையிலேயே விஜயம செய்து திரு. ஈ. வெ. இராமசாமி எஸ். இராமநாதன். திரு. கைவல்லியம, ஈ. வெ. கிருஷ்ணசாமி, முதலியவர்களுடன் மகாநாடு சம்பந்தமாய் சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டு அவசர ஜெலியாக கோயமுத்தூர் சென்று விட்டார்கள்.

மாலை 6-30மணிக்குவரவேற்புக் கழகக் கூட்டத்திற்கு தங்களின் அபிப்பிராயங்களை அறிவித்தவெளியூர்கனவான்களின் கடிதங்கள்காரியதரிசியால் படித்துக்காட்டப்பட்டது. திரு. எஸ். ராமநாதன் அவர்களால் கொங்கருபாளையம் கே. என். நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகிக்கவேண்டுமென பிரேரபனை செய்யப் பெற்று திருச்சி விசுவநாதம் அவர்களால் ஆமோதிக்கப் பெற்று ஏக மனதாய் ஆதரிக்கப்பட்டு திரு. கே. என். நஞ்சப்பகவுண்டர் அவர்கள் அக்கிராசனத்திலமர்ந்தார்.

கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்

திருவாளர்களான:—

ஈ. வெ. ராமசாமி, எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல்., எஸ். இராமசாமி, கைவல்யம், கி. ஆ. பெ. விஸ்வநாதம்திருச்சி, ஆர். சிவானந்தம் கோவை, டி. குப்புசாமி காஞ்சீவரம், எஸ். சி. ஆர் பிள்ளை சேலம் சுப்பண்ணாச்சாரி கோபி, ஈ. பி. வெங்கடாசலம், கு. முனுசாமி தாதாபுரம், என். நஞ்சப்ப கவுண்டர், எம். அட்டியண்ண கவுண்டர், கே. என். பொன்னம்பலம், டி. ஏ. மாஸ்திய கவுண்டர், எம். வி. கருப்பண்ண செட்டியார், திருப்பூர் ஈ. வெ. கிருஷணசாமி, கே. ஷேக்தாவுது சாகேப் ஈரோடு (முனிசிபல் சபை தலைவர்,] எ. ரெங்கசாமி கே. வி. கேசவலால் மண்டி, ஈஸ்வரன்' ஈ. வி. நஞ்சப்பசெட்டியார், (முனிசிபல் வைஸ்சேர்மென்) எம். எஸ். சுப்பண்ண செட்டியார். அன்வராஜ் ஷேட், குழந்தைவேலு, எஸ். வி. லிங்கம் மாயவரம்.

அடியிற்கண்டவர்கள் வரவேற்புக் கழக அங்கத்தினர்களாக தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

திருவாளர்கள்.

ஆர். கே. ஷண்முகம் பி. ஏ, பி. எல். எம. எல். ஏ., சி. எஸ். ரெத்தினசபாபதியார்எம். எல். சி., ஈ. வெ. ராமசாமியார், சேர்மென்கே. ஏ. ஷேக்தாவுத் சாகேப், எஸ். ராமநாதன், எ. ஜி. ராமசாமி, கைவல்யம், எம். சிக்கைய நாயக்கர் கவுன்சிலர், எம். எஸ். முத்துகருப்பஞ் செட்டியார் வியாபாரம், ஈ: வெ. கிருஷ்ணசாமி, சி. முத்துசாமி கவுன்சிலர்இ, பி. வெங்கடாசலம், கே. என். நஞ்சயப்பகவுண்டர், கொங்கார்பாளையம். வி. வெரிவாடாசெட்டியார், பேங்கர், கோவை. வி அருணாசலம்: கோவை. (முனிசிபல் வைஸ்சேர்மென். )எஸ். என், பொன்னைய கவுண்டர், [டிஸ்டிரிக்ட் போர்டு வைஸ் பிரசிடெண்ட்.] வி. பழனிசாமி நாயுடு, ஜி: துரைசாமி நாயுடு, பி. ரெத்தினசாமிக் கவுண்டர், ஜில்லா போர்டு மெம்பர், ஊத்துக்குளி. இளைய ஜமீன்தார். [தாலூகா போர்டு தலைவர். ] எஸ். பீமைய செட்டியார், வி. எஸ். செங்கோட்டையா, கவுன்சிலர். ராவ்பகதூர் டி: எ. ராமலிங்கம் செட்டியார், எம். எல், சி. வி. வி. சுப்பையா செட்டியார், கவுன்சிலர். ஈங்கூர் கந்தசாமிக் கவுண்டர், சென்னிமலை எஸ். கே. ராமசாமி, லெக்ஷ்மணன் பெருந்துரை. ஏம். வி. கருப்பண்ணர், திருப்பூர். கே வி. வெங்கடாசலம், திருப்பூர், எம். அட்டியண்ண கவுண்டா. தூக்கநாயக்கன்பாளையம். வி. தாசப்ப கவுண்டர், பங்களாபுதூர். ச. இ. சி, மூகம்மது இப்ராகிம், (எக்ஸ் சேர்மென்.) ஆர். வீரையன் வின்சன்ட் (வெரைட்டிஹால) கோயமுத்தூர் டி. ஆர். சுந்திரம் வக்கீல் திருப்பூர், ஏ. வெங்கடாசலம் பிள்ளை கருங்கல்பாளையம் கே. மெ. சீனிவாசம் பிள்ளை, ஸ்ரீமதி ஈ. வெ. ரா. நாகம்மாள். ஸ்ரீமதி ராஜநாயகம் ஆனரரி மாஜிஸ்திரேட், ஸ்ரீமதி கிருஷ்ணசாமி எல். எம். பி. சித்தோடு, ஸ்ரீமதி எஸ். ஆர். கண்ணம்மாள், எம். எஸ். ஏ. மொய்தீன் சாகிப், ஸி. ஏ. அய்யாமுத்து புஞ்சை புளியம் பட்டி, பீ. சா. முகம்மது பாட்சா சாகெப், கே. ஆர். ஈஸ்வா மூர்த்திக் கவுண்டர் முசிபல் கவுன்சிலர், திரு. ஜே. எஸ். கண்ணப்பர், எ. ஆர். சிவானந்தம் கோவை, கே, முருகநாத செட்டியார், எம். கே. குமாரசாமி செட்டியார், கே. எஸ். கிருஷ்ணசாமி சேலம், சி. பி. சுப்பையா, எம், என். சிக்கண்ண செட்டியார் திருப்பூர், தெய்வசிகாமணி வக்கீல் ஈரோடு, அப்பைய கவுண்டர் ஈரோடு, டி. பச்சமுத்து செட்டியார், வெங்கடாசல கவுண்டர் தாலூகா போர்டு தலைவர் கோபி, இ. ஆர். ராமசாமி கவுண்டர் சேர்மென் திருப்பூர் சிதப்ப முதலியார் பெருந்துரை எஸ். வி. லிங்கம் மாயவரம் முதலியவர்கள். இன்னும் போதுமான அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ள கமிட்டிக்கு அதிகாரமளிக்கின்றது.

அடியிற்கண்ட தீர்மானங்கள் காரியதரிசி திரு. எஸ். ராமநாதன் அவர்களால் பிரரேபனை செய்யப்பட்டு ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

தீர்மானங்கள்.

1. கோயமுத்தூர் திரு. ஆர். கே ஷண்முகம் பி. ஏ. பி. எல் எம். எல். ஏ. அவர்களை மஹாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவராக இக்கமிட்டி அங்கீகரிக்கிறது

2. வரவேற்புக் கழகத்திற்கு திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களை உபதலைவராகவும் ராவ்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி எம். எல். சி. திரு. எஸ். ராமநாதன் எம. ஏ. பி. எல். ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுது சாஹெப் (நகரமுனிசிபல் தலைவர்) இவர்களைக்காரியதரிசிகளாகவும், அ கோ. ராமசாமி பொக்கிஷதாரராகவும், சி. அ. பெ. விஸ்வநாதம் கணக்காளராகவும்இக்கமிட்டி நியமிக்கிறது.

3. இப்பொழுது நியமிக்கப்பட்டதுபோக இன்னும் போதுமான வரவேற்புக் கழக அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ள நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கிறது.

4. சுயமரியாதை மகாநாட்டுடன் மற்றும் பல மகாநாடுகள் நடைபெற வேண்டியதற்கு அவைகளின் தனித் தனிக் காரியதரிசிகளைத் தெரிந்தெடுக்க நிர்வாகக் கமிட்டிக் காரியதரிசிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது,

5. மகாநாட்டுக் காரியங்களைத் தனித் தனி இலாக்காக்களாகப் பிரித்து அவைகளுக்கு முறையேதனித்தனிகாரியதரிசிகளை நியமித்து மேற்படி பொருப்பை ஒப்புவிக்க காரியதரிசிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.

6. சுயமரியாதை மகாநாடு, பெண்கள் மகாநாடு, சங்கீத மகாநாடு, இளைஞர் மகாநாடு, மதுவிலக்கு மகாநாடு ஆகிய ஐந்து மகாநாடுகள் நடத்துவதென தீர்மானிக்கிறது.

7. மகாநாட்டில் விவசாய பொருள் கண்காட்சிசாலை யேற்படுத்துவதென்றும் கண்காட்சியில் கூடுமான அளவு நவீன முறைகளை விவசாயத்தில் கையாளும் வகைகளை காண்பிப்பதென்றும் தீர்மானிக்கிறது.

8. மகாநாட்டின் வரவேற்பு போஷகர் கட்டணம் ரூ. 25. வரவேற்பு அங்கத்தினர் கட்டணம் ரூ. 5. என்றும், பிரதிநிதிகள் கட்டணம் ரூ. 3. விசிட்டர்கள் கட்டணம் ரூ. 1 என்றும், இக்கமிட்டி தீர்மானிக்கிறது (மேல்கண்ட முதல் மூன்று வகுப்பாருக்கும் சாப்பாட்டுக்கு தனி கட்டணமில்லை.)

9. மகாநாட்டின் தொண்டர் இலாகா காரியதரிசியாக எம். எஸ். சுப்பண்ணன் செட்டியார் அவர்களையும், தொண்டர்படை தலைவர்களாக எப். ஏ. வரதப்பன் இ. எஸ். ஆறுமுகம் அவர்களையும் நியமிக்கிறது.

10. மகாநாடுகளின் தலைவர் முதலானவர்களை தெரிந்தெடுக்க காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது பின் மகாநாட்டு காரியங்களை நிர்வகிக்க கீழ்கண்டவர்களை அந்தந்த இலாக்கா உத்தியோகஸ்தர்களாக நியமிக்கிறது.

11. திரு. ஜே. எஸ். கண்ணப்பரவர்களை மகாநாட்டு விஷயாலோசனை கமிட்டி அதிகாரியாக நியமிக்கப்பட்டு மகாநாடு சம்பந்தமாய் அனுப்பப்படும் தீர்மானங்களை ஈரோடு ஜே. எஸ். கண்ணப்பர் பெயருக்கு அனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

12. நாடகங்களின் அதிகாரியாக திருச்சி கி, ஆ, பெ, விஸ்வநாதம் அவர்களை நியமித்திருக்கிறது. நாடகம் நடிக்க விரும்புகிறவர்கள் அது சம்பந்தமான எல்லா விபரத்துக்கும் திருச்சி திரு. விஸ்வநாதம் அவர்களுக்கே கடிதப்போக்கு வரத்தும் வைத்துக் கொள்ள வேண்டும்.

நிர்வாகக் கமிட்டியின் உள் இலாக்கா காரியதரிசிகள்.

பந்தல்—திரு. இ. ஒ. கி. முத்துசாமிக் கவுண்டர்
அலங்காரம்:— திரு. கேசவலால்காளிதாஸ்,
திரு கி. நடராஜன் மாயவரம்.
விடுதிகள்— திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி,
நாகை, திரு. காளியப்பன்.
தண்ணீர்— திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியார்
சாப்பாடு—திரு எம் எஸ் முத்துக்கருப்பன் செட்டியார், திரு மாசிலாமணி
வெளிச்சம்—திரு. சுப்பண்ணன், திரு. என் ராமசாமி
உபசரிப்பு—திரு சாமி சிதம்பரனார், திரு ஈஸ்வரன்.
காரியாலயம்:— திரு. இ. பி. வெங்கடாசலம்
சுகாதாரம்:— திரு. கே. எம். சீனிவாசம் பிள்ளை.
வண்டி வசதி:— [illegible]. கோவிந்தசாமி நாயக்கர்.
அநுமதி சீட்டுகள்:— திரு ஈ. வி. ஜெயராம்.
திரு. ராவணதாஸ் திருச்சி.
தொண்டர்:— திரு. எம். எஸ் சுப்பண்ண செட்டியார்.
பொருட்காட்சி:— திரு. எம். சிக்கைய நாயக்கர், முனிசிபல் கவுன்சிலர்.
சங்கீதம்:— திரு. கே. என். நஞ்சப்ப கவுண்டர்.
திரு. எ. ஆர். சிவானந்த முதலியார்.
நிகழ்ச்சி முறை:— திரு. எஸ். குருசாமி, திருச்சி.
விளம்பரம்:— திரு. கே. வி. அழகர்சாமி பட்டுக்கோட்டை. திரு. எஸ். வி. லிங்கம் மாயவரம்.

மற்றும் மகாநாடு சம்பந்தமாய் முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு இரவு 8-30 மணிக்கு அக்கிராசனரின் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

திருவாளர்கள் கொங்காருபாளையம் கே. என். என். பொன்னம்பலம், டி. எ. மாஸ்தி கவுண்டர் எம். வி. கருப்பண்ண செட்டியார், திருப்பூர். கோவை எ. ஆர். சிவானந்த முதலியார், காஞ்சி டி. குப்புசாமி எஸ். ஐ. ஆர். பிள்ளை, திருச்செங்கோடு. மற்ற சில கனவான்களும் மகாநாட்டுக்கு 15 நாளைக்கு முன்பே வந்திருந்து வேண்டிய காரியங்களை பார்ப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மகாநாட்டு வேலைகள் தீவிரமாய் நடந்து வருகிறது.

## நீதி வாக்கியங்கள்

1. அறிவைக் கெடுப்பது ஆத்திக மதமே.
ஆலயம் தன்னை அப்புறப்படுத்து
இந்து மதத்தால் இடுக்கண் விளையும்.
ஈசன் என்பது மோசம் செய்வது
உண்மைத் தெய்வம் உலகுயிராகும்.
ஊக்கம் என்பது உயிரினும் பெரிது.
என்றும் மக்களை ஒன்றுயக்கருது.
ஏழை மக்களை ஏறிட்டு நோக்கு.
ஐயம் தெளிந்து செய்வன செய்க.
ஒற்றுமை இருப்பின் உலகு செழிக்கும்.
ஓதியுணர்ந்து நீதியைக்கைக்கொள்.
ஔவை வாக்கிலும் ஆராய்ந்து செய்க.

2. கல்லுத் தெய்வம் பொய்யென்று செய்யும்
[illegible] விறுப்பக் கரியாக்காதே.
[illegible] பஞ்சாங்கம் ஒழிந்தால் நன்று
[illegible] வாழ்வு [illegible] கற்று.
சூத்திரம் கூறுவர் சூழ்ச்சியுணர்ந்தவர்கள்.
கூற்றுவர் நமக்கு கொடும் பார்ப்பனரே.
கெதியிழந்தாலும் மதியிழக்காதே.
கேள்வி ஞானம் வாழ்வில் நல்லது.
கைம்பெண் துயரம் கடிதிலகற்று.
கொள்வன கொண்டு தள்வன தள்ளு.
கோவில் நாட்டைக் கேவலமாக்கும்.

3. சமத்துவம் நிறைந்தால் சமூக முன்னேறும்
சிக்கன வாழ்வைக் கைக்கொள்வாயே.
சீற்ற மொழிந்தால் ஏற்றமுறலாம்.
சுயமரியாதையே சுதந்திர வாழ்வு.
சூது நிறைந்தது வேதமென்றறிந்து கொள்.
செத்தவருக்குத் திதி கொடுக்காதே.
சேக்ஷேத்திரமென்று செலவு செய்யாதே.
சொர்க்கமென்பது துடடுப்பறிப்பதே.
சோதிட மகற்றின் நீதிடம் பெறலாம்

4. தண்ணீர் யார்க்கும் தரணியில் சொந்தம்.
தாழ்ந்தவரென்று ஜாதியி வில்லை.
திருவிழா மனிதரைத் தெருவில் விடுவதே.
தீர்த்தமென்று நீ திரிந்தலையாதே.
தூக்க மென்பதை இக்கண மகற்று
தூய மனத்தால் தீயவை அகற்று.
தெய்வத்தை நினைத்து உய்வது கெடுதி. (பாலசாமி)

## கோவை தண்ணீர் குழாயிலும் ஜாதி வித்தியாசம்

கோயமுத்தூரில் தாழ்த்தப்பட்டவர்களாகிய அருந்ததியர் வீதியில் சுமார் 500 வீடுகள் இருக்கிறது இந்த வீதியில் முனிசிபாலிட்டியார் ஒரே தண்ணீர் குழாய் வைத்திருக்கிறார்கள். மற்றொரு குழாய் போடும்படி விண்ணப்பம் செய்து நாளது வரை யாதொரு பதிலும் தெரியவில்லை. இந்த ஒரு குழாயில் ஜலம் பிடிப்பதற்கு அதிக கஷ்டம். அடிக்கடி பெண்கள் சண்டை செய்து கொள்ளுகிறார்கள் சென்ற வாரம் பெண்கள் சண்டை செய்து ஒரு பெண் மற்றொரு பெண்ணை குடத்தினால் தலையிலடித்து காயமாகிவிட்டது. இந்த கஷ்டம் சகிக்காமல் கடந்த 10—3—30 ஒத்தச் செக்கார் வீதிக்கு எதிரிலிருக்கும் தண்ணீர் குழாயில் ஜலம் பிடிக்க இந்த ஏழை அருந்ததியப் பெண்கள் போனார்கள் அங்கே ஜலம்பிடித்துக் கொண்டிருந்த சில உயர்ந்த ஜாதி பெண்கள் நீங்கள் இங்கே ஜலம் பிடிக்கக்கூடாது என்று சொல்லவும், தண்ணீர் குழாயில் பிடித்தால் என்ன என்று கேட்கவும், சமீபத்தில் இருந்த ஒத்தச் செக்கார் ஒருவர் வந்து சக்கிலியரும் நாங்களும் சம்மாக ஜலம் பிடிப்பதா பிடித்தால் குடங்களை உடைத்துவிடுவேன் போ என்று துரத்தினார். இந்த ஏழைப்பெண்கள் ஜலம் பிடிக்காமல் போய் விட்டார்கள் என்ன பரிதாபம்!

தண்ணீர் குழாயில் இவ்வளவு வித்தியாசம் காட்டுகிறவர்கள் சுயராஜியத்திற்கு எவ்வளவு காட்டமாட்டார்கள்? அருந்ததியர் தண்ணீர் வரி கொடுப்பதில்லை என்று நினைத்தாரா? கருணை பொருந்திய முனிசிபாலிட்டியார் உடனே இதற்கு தக்க பரிகாரம் செய்து மற்றொரு குழாய் போடுவதுடன் தண்டோரா மூலியமாகஜலம் பிடிப்பவர்களை தடங்கல் செய்யாமல் எச்சரிக்கை செய்தால் மிகவும் உபகாரமாக இருக்குமென்று கோவை ஆர். நஞ்சைய்யா எழுதுகிறார்.

## பினாங்கிலும் ஆஸ்திக வெறி ஆதிதிராவிட பஞ்சாயத்தார்களை பாதிக்கிறது.

9-3-30 காலை 8-30 மணிக்கு மேல் 11 மணிக்குள்ள திரு கிருஷ்ணசாமி அவர்கட்கும் திருமதி சிகாமணி அம்மாளுக்கும் சுயமரியாதை முறையில் திருமணம் நடத்தப்போவதாக பினாங்கு ஆதிதிராவிடர்களின் பஞ்சாயத்தார்கட்கு திருமணபத்திரிகையளித்திருந்தும் அவ்வாஸ்த்திக வெறி ஆதிதிராவிட பஞ்சாயத்தார்களை பதிக்கிறதோடல்லாது அத்திருமணத்திற்கு சில இன்னல்களையும் உண்டாக்குவதற்கு முற்பட்டார்களெனினும் இவ்வெதிர்ப்புக் கிடையே பல அறிஞர்கள் உதவியால் திருமணம் செவ்வனே நடந்தேறியது என்பதுடன் நம் சுயமரியாதை சகோதரர்கள் இத்தகைய ஆஸ்தீக வெறியர்களுன் எதிர்ப்புக்கு பின் வாங்காது தங்கள் தங்களது கோரிக்கையை செவ்வனே வமைத்துக் கொள்ள முற்படுவார்களென நம்புகிறேன். என்பதுடன் நில்லாது இன்னும் சில தினங்களில் அத்தகைய போலியெதிர்ப்புகளிடையே இப்பினாங்கில் இன்னும் சில திருமணங்கள் சுயமரியாதை கொள்கையின்படி நடைபெறுமென தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பினாங்கு ஆதிதிராவிட வாலிபன்

Best copy available

# பொட்டுக்கட்டு நிறுத்தும் சட்டம்

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மசோதா
## திரு. ஈ. வெ. ராமசாமியார் அபிப்பிராயம்

டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியின் பொட்டறுப்பு மசோதா விஷயமாக அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுமென்று சென்னை சர்க்கார் கேட்டுக் கொண்டதற் கிணங்க திரு. ஈ. வெ. ராமசாமியார் சென்னை சட்ட சபை காரியதரிசிக்கு அனுப்பியிருக்கும் ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

1, ஹிந்துப்பெண்களை ஹிந்து ஆலயங்களில் பொட்டுக் கட்டுவதினால் அவர்கள் வியபிசாரம் செய்யும்படி தூண்டப்படுகிறார்கள்.

2. பண ஆசையினால் தேவ தாசிகள் வியபிசாரம் செய்வதினால் அவர்களது வாழ்க்கை இயற்கைக்கு விரோதமாகவும் ஆபாசமாகவும் இருக்கிறது. இந்த வியபிசாரிகளால் மேகவியாதிகள் பரப்பப் படுவதினால் அந்நோய் அந்நியர்களுக்குப் பரவாமல் தடுக்கவேண்டியதும் முக்கியமானதாகும்.

3. டாக்டர் முத்துலட்சுமி மசோதாவின் நோக்கம் வியபிசாரத்தைஅடியோடு ஒழிப்பதல்லவானாலும் வியபிசாரம்விருத்தியாவதற்குள்ள ஒருமுக்கியமான வழியை அடைப்பதுதான் அதன் நோக்கம், வியபிசாரத்தை அடியோடு ஒழிக்கத் தக்கவாறு இந்திய சமூகம் இன்னும் முன்னேற்றமடையவில்லை. வெளிநாட்டு நிலைமையும் இவ்வாறே இருந்து வருகிறது. பணத்துக்காகப் பெண்கள் வியபிசாரம் செய்வதைத் தடுக்க சட்டமியற்றும் காலம் இன்னும் வரவில்லை. ஆனால் சமயத்தின் பேரால் மதக் கடமையாக பெண்கள் வியபிசாரம் செய்வதைத் தடுக்க நாம் முன்னாடியே சட்டமியற்றி இருக்க வேண்டும். தற்கால சட்டப்படி 18 வயதிற்குப் பிறகு பொட்டுக் கட்டப்படும் பெண்களுக்குங்கூட இளவயதுமுதலே பெற்றோராலும் வளர்ப்போராலும் வியபிசாரம் செய்ய தூண்டப்பட்டும் தயார் செய்யப்பட்டும் வருகிறார்கள். பொட்டுக் கட்டி வியபிசாரம் செய்வது மோட்ச சாதனமான தென்றும், பணம் சம்பாதிக்க நல்ல வழி யென்றும், சிறு வயது முதலே அப் பெண்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறது. பெண்களை வியபிசாரத்தில் ஈடுபடுத்தாமல் சட்ட மேற்படுமானால் பெற்றோரும் வளர்ப்போரும் அவர்களை வியபிசாரம் செய்யப் பழக்கி பணம் சம்பாதிக்கத்தான் செய்வார்கள்.

4. மைனர் பெண்களுக்குப் பொட்டுக்கட்டக்கூடாதென்று ஏற்கனவே சட்ட மேற்படுத்திமதவிதிகள் அப்போதே மீறப்பட்டுவிட்டது. எனவே இம்மசோதா விஷயத்தில் மதத்துக்கு ஆபத்து என்னும் வாதத்தைக் கிளப்ப இடமே இல்லை. பருவமடைந்த பெண்களுக்குப் பொட்டுக்கட்ட சாஸ்திரங்களில் அனுமதியில்லை ஆதலால் சாஸ்திரங்களுக்குப் பயந்து பருவமடைந்த பெண்கள் பொட்டுக் கட்டைத் தடுக்க சட்டமியற்ற சர்க்கார் பயப்படத் தேவையில்லை. டாக்டர் முத்து லட்சுமி மசோதா விரும்பும் சீர்திருத்தம் இந்து சமூக சுயமரியாதையை உத்தேசித்து எவ்வளவோ காலத்துக்கு முன்னாடியே அமுலில் வந்திருக்க வேண்டும். எனவே அம் மசோதாவை நான் பூரணமாக ஆதரிக்கிறேன்.

---

# சென்னை சட்ட சபையில் சுயமரியாதையும் இந்துமத தர்ம பரிபாலன போர்டும்.

இம் மாதம் இருபத்தாறாம் தேதி கூடிய சட்ட சபைக் கூட்டத்தில் வழக்கம்போல் பல கேள்விகளுக்கு அரசாங்கத் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:—

திரு. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் அடியில் கண்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி ஸதல ஸ்தாபன மந்திரியைக் கேட்டுக் கேட்டுக் கொண்டார்.

கே:-சமீபத்தில் காலியாகும் இந்துமத தர்ம பரிபாலன போர்டு கமிஷனர் வேலைக்கு சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மனுக்கள் ஏதாவது கிடைத்திருக்கின்றனவா?

விடை:—சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யார் யார் என்பதைப்பற்றி சர்க்காரிடம் ஜாப்தாகிடையாது,

கே: சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வுத்தியோகத்துக்கு யோக்கியதை யுள்ளவர்களா?

மந்திரி பதில்:— அவர்கள் அருகதையற்றவர்களென நான் நினைக்கவில்லை.

கேள்வி:—சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் விக்கிரக ஆராதனையைஆட்சேபிப்பவர்களல்லவா?

மந்திரி;—அது எனக்குத் தெரியாது. அப்படியானால் அது மிகவும் நல்ல காரியமாகும்.

மற்றொருவர் கேள்வி:— விக்ரக ஆராதனையில் நம்பிக்கை யில்லாத மந்திரி இந்துமத பரிபாலன போர்டுக்கு அதிகாரியாக இருப்பது பொருந்துமா?

மந்திரி விடை:—அத்தகைய கேள்விக்கு இப்போது அவசியமில்லை.

---

# சுயமரியாதைத் தொண்டர் பயிற்சி

## சுயமரியாதைக் காரர்களுக்கு ஓர் அறிக்கையும் விண்ணப்பமும்

அன்புமிக்குள்ள சுயமரியாதை நண்பர்களே! சுயமரியாதைக்கொள்கையையுங் கைக்கொண்டு சுயமரியாதையின் வளர்ச்சியின் பொருட்டு ராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர் தாலூகாவில் காரைக்குடிக்கும் திருப்புத்தூருக்கும் நடுமத்தியிலுள்ள காச்சியார் புரத்தில் "உண்மை விளக்க நிலையம்" என்னும் ஸ்தாபன மொன்று நிறுவப்பெற்று நடந்து வருகிறது. இதைச் சேர்ந்த அங்கத்தினர்கள் யாரும் தங்கள் ஆயுள்முழுவதும் சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சிக்கும், பெருக்கத்திற்கும் யாதொரு பிரதி பிரயோஜனமின்றி உழைத்து வரும் விரதத்தை ஆழ்ந்து யோசித்த பின் கைக்கொண்டு அதைச் செயலிலும் காட்டிவருகிறார்கள். மேலும் சுயமரியாதைத்தொண்டு புரிபவர்களைப்பயில்விக்கும் பொருட்டு குருகுலம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். இதில் தற்பொழுது 11 சிறுவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இன்னும் இந்த முதல் வட்டத்தில் 29 பிள்ளைகளை விரைவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இந்த நிலையத்தில் சிறுவர்களைச் சேர்ப்பதில் இரு வித முறையைக் கையாளப் பெறும். படிப்பிற்கும் அன்ன வஸ்திரத்திற்கும் ஏற்படும் செலவு முழுவதையும் சில கனவான்களின் உதவியைக்கொண்டு உண்மை விளக்க நிலையக் கழகத்தாரை யேற்றுக்கொள்வது ஒருமுறை. குறித்த செலவுகளை பெற்றோர்களாவது சுற்றத்தார்களாவது பொறுத்துக்கொள்வது மற்றொரு முறை. முதற் பிரிவில் பெரும்பாலும் தாய் தந்தையில்லாத அநாதைப் பிள்ளைகளும் சிறுபான்மையாக தாய் தந்தையுள்ள ஏழைப் பிள்ளைகளுஞ் சேர்த்துக் கொள்ளப்பெறுவார்கள். படிப்பும் பயிற்சியும் வேண்டிய அளவு பெற்றபிறகு சுயமரியாதை வளர்ச்சிக்காக உண்மை விளக்க நிலையத்திற்குக் கட்டுப்பட்டு கிராமங்களில் முக்கியமாக ஒடுக்கப்பட்டவர்களுக்கிடையில்,அன்னவஸ்திரம் நீங்கலாகவேறு யாதொரு பிரதிப் பிரயோஜனமின்றி, குறைந்தது 5 வருஷங்களுக்குப் பிரசாரர்களாகவோ, வாத்தியார்களாகவோ, கைத்தொழில் விவசாய முதலியன கற்றுக்கொடுத்து மேற் பார்ப்பவர்களாகவோ இன்னும் வேறு விதமான உழைப்பாளர்களாகவோ, உழைத்து வரமுதற் பிரிவிலுள்ளவர்கள் கடமைப் பாடுடையவர்களாவார்கள். இரண்டாம் பிரிவிலுள்ள பிள்ளைகளுக்கு இந்த நிபந்தனை கிடையாது சுயமரியாதைக்காக உழைப்பது அவர்களது பிரியம். ஆகையால் பெற்றோர்கள் பிள்ளைகள் படிக்கும்பொழுது மாதம் 10 ரூபாய் வீதம் கொடுத்து வரவேண்டும்.

இரண்டு பிரிவிலும், பிரிவிற்கு 20 பிள்ளைகள் வீதம், மொத்தம் 40 பிள்ளைகளே இந்த முதல் வட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பெறுவார்கள் மாணவர்களுக்குக் குறைந்தது 5 வருஷ பயிற்சி கொடுக்கப் பெறும் செவ்வையாகத் தமிழும் வேண்டிய அளவு ஆங்கிலமும் சிறிது சமஸ்கிருதமும் இந்தியும் கற்றுக் கொடுக்கப்பெறும் தேகாப்பியாசமும் சமையலும் கட்டாயம் பயில்விக்கப்பெறும் மாணவர்களின் விருப்பத்திற்கும் இயல்பிற்கும் ஒத்தபடி நூதன முறையையனுசரித்து தேசிய வைத்தியமும் வாத்தியார் தொழிலும், கிராமாந்தரத்திற்கு வேண்டிய ஏதாவதொரு கைத்தொழில் முதலியனவும் சொல்லிக் கொடுக்கப்பெறும் அனுப்பப் பெறுங் குழந்தைகளின் வயது 6 வயதிற்குக் கீழ்ப்படாமலும் 10 வயதிற்கு மேற்போகாமலுமிருக்கவேண்டும் மேலும் அவர்கள் புத்தி கூர்மையுள்ளவர்களாகவும் வசீகரத் தோற்றம் படைத்தவர்களாகவுமிருப்பது நலம். சேர்த்துக்கொள்ளுவதில் ஒடுக்கப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கே சிறப்புரிமை அளிக்கப் பெறும். தற்பொழுது நிலையத்தில் சைவப்பிள்ளை வேளாளப் பிள்ளை வல்லமப் பிள்ளை ஒடுக்கப்பட்டவர்களின் பிள்ளை முதலிய பல வகுப்புப் பிள்ளைகளிருக்கிறார்கள். வித்தியாச மென்பது இங்கே கனவிலுங் கிடையாது.

ஆகையால் சுயமரியாதைக் கொள்கையை உயிர் போன்று நேசித்து வரும் சுயமரியாதை ஆண்மையாளர்களை இந்த குருகுலத்திற்கு தங்களது பிள்ளைகளையும் தங்களுக்குத் தென்படும் ஏனைய பிள்ளைகளையும் அனுப்பி வைப்பதில் ஊக்கமும் உற்சாகமும் காட்டி எங்களுக்குத்துணைபுரியுமாறு அன்புடனும் வணக்கத்துடனும் வேண்டிக்கொள்கிறேன்.

பு. ஆத்மாராம்.

---

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்,தஞ்சை

## லாட்டரி போடும் நாள்.

1930 ஏப்ரல் 20 ஆம் நாள் மாலை 2-மணிக்கு கரந்தைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் லாட்டரி குலுக்கத் தொடங்குவார்கள். சீட்டுவாங்கியவர்கள் அனைவரும் அது காலை வந்திருக்கலாம். சங்கக் கணக்கில் பதிவுக்கு வந்திருக்கும். நம்பர் விவரத்தை விரைவில் விளம்பரஞ் செய்யப்பெறும். பதிவுக்கு வராத நம்பர்கள் இருப்பின், அவற்றிற்குரியவர்கள் 1930 ஏப்ரல் 6 தேதிக்கு முன்னரே ஆதாரவுகளைக் காட்டி மெய்ப்பித்து சங்கக் கணக்கில் பதிவு செய்து கொள்ளவேண்டியது.

சீட்டுகள் விற்பனை செய்தவர்கள் வசம் ஏதேனும் விற்பனையான சீட்டுகள், விற்பனைத்தொகைகள் பாக்கியிருந்தால் இது முதல் ஒரு வாரத்துக்குள் அவற்றை கணக்குடன் அனுப்பவேண்டியது.

கரந்தை } நா கந்தசாமி பிள்ளை,
23-3-30 } சீட்டின் தலைவர்

## திருவிதாங் கோட்டுத் தமிழர் சங்கம்.

1930-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந்தேதி மாலை 5—30 மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதினத்தில் சங்க கௌரவ பிரசிடெண்டு டி. லட்சுமணபிள்ளை பி. ஏ. அவர்களுடைய எமர்சன் வில்லாவில் சங்கத்தின் பெயரால் கூட்டம்ஒரு கூடிற்று பிரஜா சபையின் பிரதிநிதிகளாகிய தமிழர் மெம்பர்களும் வெளியூர்களிலுமுள்ள தமிழர் கனவான்களும் வந்து குழுமினார்கள் சிற்றுண்டி உபசாரம் செய்யப்பட்டது, திரு. லட்சுமணபிள்ளையவர்கள் தமிழருடைய ஐதிகங்களிலாவது சமய நூல்களிலாவது ஜாதி வேற்றுமைகள் இருந்ததாக காட்டுவதற்கு ஒரு சாட்சியமுமில்லை மென்றும் சாற்றினார்கள். பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னப்பட்ட பாகுபாடு தமிழருக்கு ஒருவாற்றாலும் பொருந்தாதென்றும் சொன்னார்கள். சூத்திரரென்ற இழிவான பெயர் எந்த தமிழ் வகுப்பாளர்க்கும் ஒரு போதும் சாத்தக் கூடியதல்ல சென்஬ஸ் கமிஷணர்கள் தமிழர் என்று ஒரே பெயரில் கணிக்கத் தவிறியதால் தமிழர் சமுதாயம் பெரும் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள் நாயர்கள் கிருஸ்தவர்கள் போன்ற மற்றைப்பெரும்பகுதிச் சமுதாயங்களோ தமிழருடைய நிலைமைக்கு ஒத்திருந்தும் பெரும் பகுதி சமுதாயங்களாக கணிக்கப்படுவதால் விசேஷமான உரிமைகளையும் நயங்களையும் அடைந்து வருகிறார்கள்.

திருவனந்தபுரத்தில் சென்ற செப்டம்பர் மாதம் நிகழ்ந்த ஏழாவது தமிழர் சங்க மகாநாட்டில் தலைமை வகித்த மிஸ்டர் இராமசாமிமுதலி முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் வற்புறுத்திக் கூறிய பின் வரும் காரியத்தையும் குறிப்பிட்டார்கள். அது வருமாறு:—தமிழர் எல்லோரையும் சகோதரமாக கணிக்கக் கூடிய ஒரு பகுதியினரென்று நீங்கள் உணர்வீர்களாகில் அவர்கள் தம்முள் என்ன சமய வேற்றுமைகளோ என்னஜாதிக் கட்டுப்பாடுகளோ இருந்த போதிலும் தமிழனுக்கும் தமிழனுக்குமிடையில் ஒரு வேற்றுமையும் இல்லையென்று அறிவீர்களாகில் நீங்கள் உண்மையில் ஒரு தன்மைத்தான ஒத்தொருமித்த ஆற்றல்வாய்ந்த ஆக்ஞைக்குட்பட்ட கூட்டத்தார் என்பதை மனதில் கொள்வீராகில் அந்த ஆற்றலினுடையவும் ஆக்ஞை உணர்ச்சியினுடையவும் பயன்பாடே சில கால் மெல்லமெல்லவாகிலும் தன் வலிமையிற் குறையாமல் உங்கள் குறைபாடுகளைத்தீர்த்துக் கொள்வதிலும் உங்கள் நோக்கங்களை முறைப்படி பாராட்டப்படுவதிலும் அழுத்தத்தை உண்டாக்குமெனபதிலும் நான்முற்றிலும் உறுதிப்பாடுடையவனு யிருக்கிறேன்" என்று கூறினார்கள்.

பின்னர் ஆலப்புழை மிஸ்டர் எம். எல். ஜனார்த்தனம்பிள்ளை செடுமங்காட்டு மிஸ்டர் எம். சுப்பிரமணியபிள்ளை ஆகியவர்கள் பிரஜா சபையின் பிரதிநிதிகளாக அவர் சிற்றுண்டி உபசாரத்திற்காக தமிழர் சங்கத்திற்கு நன்றி செலுத்தியதுடன் தமிழர்களுடைய உரிமைகளை மீண்டும் வற்புறுத்திக் கூறினார்கள். மற்ற சமுதாயங்களைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் சொந்த சமுதாயத்தவரை அன்போடும் உதாரத்தோடும் ஆதரித்து வருகையில் கவர்மெண்டில் பெருந்துறைகளில் தலைமை வகிக்கின்ற சில தமிழர் உத்தியோகஸ்தர்கள் மட்டும் தமிழருக்கு கேவலம் நியாயம் செய்வதற்குக்கூட உறமும் வீரமும் இல்லாமலிருப்பதைப் பற்றி வருத்தமுற்றார்கள்.

மிஸ்டர் பி. எஸ். நடராஜபிள்ளை பின் எழுந்து தமிழர் சங்கத்தோடு எல்லாரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

சங்கக் காரியதரிசி மிஸ்டர் பி. டி. சுப்பிரமணியபிள்ளை வந்தனமளித்து மாலை 8 மணிக்கு கூட்டம் பிரிந்தது.

ஒரு நிருபர்.

## திருச்சி கம்ம மாணவர் கழக ஆண்டு விழா

15—3—30-உ திருச்சி நகர சபைக் கொட்டகையில் திரு ஜே. எஸ். ராமாநுஜம் பி. ஏ. பி; எல். அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டு திருவாளர்கள் டி. வி. சோமசுந்தரம் கே. ஏ. பி. விஸ்வநாதம், அர்புதசாமி உடையார், எம். எஸ். சி. ஏ. சிவ பிரகாசனார், ஒரு தெலுங்கு மாணவர் ஆகியவர்கள் முறையே சீர்திருத்தம். முன்னேற்றம், எதிர்கால ஒழுக்கை, மாணவர்களின் தாய் மொழிப்பற்று என்பவைகளைப் பற்றி மிக்க தெளிவாகவும் அருமையாகவும் பேசினார்கள். திருவாளர்கள் சோமசுந்தரம், விஸ்வநாதம் ஆகியவர்கள் பேசியவைகளை ஒவ்வொருஉபன்யாசகர்களும் புகழ்ந்து பேசினார்கள்.

பிறகு தலைவர் முடிவுரை கூறியதும் அமைச்சர் நன்றி கூற இரவு 9-மணிக்கு ஆண்டு விழா இனிது நிறைவேறிற்று.

## நமது அநுதாபம்.

சென்னை லயோலாகலாசாலை தமிழாசிரியர் உயர் திருவாளர் டி. பக்தவத்சலம்பிள்ளை அவர்கள் காலமானதைக் கேட்டு வருந்துகிறோம். திரு. பிள்ளையவர்கள் தமிழில் அதிக பாண்டித்யம் வாய்ந்தவர் சிறந்த போதகாசிரியர் அநேக புத்தகங்கள் தமிழில் இயற்றியுள்ளார் சில காலம் திராவிடன் ஆசிரியராயுமிருந்தார் இவரது மரணத்தால் பிராமணரல்லாத சமூகம்ஒரு சிறந்த தமிழறிஞராயும் அபிமானியையும்இழந்தது அவரது குடும்பத்தினருக்கு நமது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.


# குமரன் பிரைஸ் சீட்டு.

## குமரன் சந்தாதாருக்கு 500 ரூபாய் இனாம்

—0—

நாளிது தை 10 உ முதல் பங்குனி 30 உ வரை சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருக்குக் குறையாமல் சேரக்கூடுமென் றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐநூறு சந்தாதாரிடம் வருவாரும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | பிரைஸ் | ரூ. | 100 |
| இரண்டாவது | ,, | ,, | 50 |
| மூன்றாவது | ,, | ,, | 25 |
| நான்காவது | ,, | ,, | 15 |
| ஐந்தாவது | ,, | ,, | 10 |
| 6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60. | | ,, | 300 |

நிபந்தனைகள்.

1. சுக்ல-ஞு பங்குனி-மீ 30-உக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.

2. சுக்ல-ஞு தை-மீ 10-உ யிலிருந்து மேற்படி ஞு பங்குனி 30-உ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தாதார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினல் சேர்த்துக் கொள்ளப் பெறமாட்டார்.

3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.

4. பிரமோதூத-ஞு சித்திரை-மீ 1-உ குமரனுபீசில் ஐந்து பிரமுகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.

5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷன் களித்தும் பாக்கி நேரே அனுப்பிவிடப்படும்.

6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.

8. புதிதாகச் சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணவு அதிகப்படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணவு குறைக்கப்படும். எப்படியானாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.

8. பிரைஸ் பெற்றவர் விவரம் சித்திரை மாத முதல் வாரக் குமரனில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.

## குமரன் வாரப் பதிப்பு சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு | ரூ. | 5—0—0 |
| வெளி நாட்டுக்கு | ,, | 6—0—0 |
| ஜீவிய சந்தா | ,, | 100—0—0 |

# குமரன் டைரி.

## (பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமனாதபுரம் ஜில்லா)

# நீரழிவுக்கு கைகண்ட மருந்து.

# பழனி ஆர். எம். கே. அப்ரேக் செந்தூரம்

இதோ! ஒரு மருந்துக்கும் வசப்படாத வியாதி இந்த மருந்தில் தீருவது வெகுஆச்சரியமாயிருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை. எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். நீரழிவினால ஜாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நாட்பட்ட அஸ்திவெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல், ஈ, எறும்பு மொய்த்தல் நாவரட்சி, மபலந்தம், உடம் பெரிவு, வெள்ளை, கடுப்பு, எரிச்சல் முதலிய சகலவித கர்ம வியாதிகளையும் கண்டிப்பாய் நிவர்த்தியாக்கும். நீரிலுள்ள சர்க்கரையைக் குறைத்து சரீர வெளுப்பை மாற்றி தேஜஸ் பலம் கொடுக்கும். நீரிழிவால் வரும் பிளவை ரணங்களை ஆற்றும். பசி தீபனத்தை உண்டாக்கும் ஜிவாதார நாம்புகளை முறுக்கேற்றி, தாது புஷ்டியைக்கொடுக்கும். 40 நாள் மருந்து ரூபா 40. அனுபானம் ரூ. 10. ஆக ரூ. 50. 20 நாளைக்கு ரூபா 25, ஏழைகளுக்கு பாதி விலை.

## நற்சாக்ஷி

நான் நீரழிவினால் அதிக உபத்திரவப் பட்டுக்கொண்டிருந்தேன். ஒருவேளைக்கு அரைக்கால்படி வீதம் நாள் ஒன்றுக்கு 30 அல்லது 35 தரம் நீர் போய்க் கொண்டிருந்தது. அதிகப் பசியும் தாகமும் ஏராளமாயிருந்தது. தங்களுடைய அப்ரேக் செந்தூரத்தை வெண்ணெயில் 15 நாள் சாப்பிட்டேன். என் வியாதி பூராவும் சொஸ்தமாகிவிட்டது. நீர் சாதாரணமாய் போகிறது, பசி, தாகம் இயற்கை நிலைக்கு வந்துவிட்டது. சரீரத்திலுள்ள இயக்கமெல்லாம் நீங்கி நல்ல ரத்தம் உண்டாகி சரீரம் நவ தேஜஸ் அடைந்துவிட்டது. சித்த ஆயுள்வேத வைத்திய விஷயமாய் தாங்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையானது மென்மேலும் விருத்தியாகி பொது ஜனங்களுக்கு பேருதவி ஆகிர்களென்று சதா ஈஸ்வரனை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

ராமசாமி அய்யர், முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ் பண்டிட் பழனி.

## நீரழிவில் கிருமி யுண்டான நிலைமையிலும் கூட நமது அப்ரேக் செந்தூரம் சொஸ்தம் செய்திருப்பதை கவனியுங்கள்

தங்களுடைய அப்ரேக் செந்தூரம் சாப்பிட்டதில் தடவை 1க்கு சின்ன படியால் ஒருபடி வீதம் பகலில் 10 தடவையும் இரவில் 6 தடவையும் நீர்போனது இப்பொழுது நின்றுவிட்டது. ஒரேயிடத்தில் 4 தடவை ஒண்ணுக்குஇருந்தால் அந்த இடத்தில் மஞ்சள் நிறமாகவும், தோசைமாவு மாதிரி உப்பிப் பொத பொதவென்று இருந்தது இப்பொழுது கிடையாது. அதை குச்சியால் கிளரினால் அதில் மஞ்சள் நிறமான புழுக்கள் இருந்தது. அதுவும் இப்பொழுது கிடையாது. எனக்கிருந்த தாகமோ சொல்லமுடியாது, நாள் ஒன்றுக்கு 30 சேருக்குக் குறையாமல் தாகத்துக்கு சாப்பிட்டேன், இப்பொழுது தாகம் பூராவும் நின்றுவிட்டது. ஆகையால் தாங்கள் எனக்கு அனுப்பிய அப்ரேக் செந்தூரத்தை 60 நாள் சாப்பிட்டு எனக்கிருந்த நீரழிவு ரோகம் பூராவும் சொஸ்தமாகி விட்டது. ஆகையால் ஆயுசுள்ள அளவும் தங்களை மறக்கமாட்டேன். என்றும் நீடித்த நாள் ஆயுளோடு பூமியிலிருந்து என்னைப் போலுள்ள ஏழைகளுக்கு உபகாரம் செய்து கொண்டிருக்கும்படியாக கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

(Sd) வை. ரேத்தினம் பிள்ளை, நெல் வியாபாரம், வெட்டுக்காரத் தெருவு, தஞ்சாவூர். 5-12-27

# வெள்ளி பஸ்பம் பிரமேக லேகியம்

பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல் குத்தலை உடனே நிறுத்தும். அநேக மருந்துகள் சாப்பிட்டும் தீராத எவ்வளவு நாட்பட்ட வெள்ளை, வெட்டையானாலும் சரி லட்சியமில்லை. பிரமேகம், ரத்தம் விழுதல் தந்திமேகம், மஞ்ச வெள்ளை, எலும்புருகி, அஸ்திமேகம், அஸ்தி சுரம், சதா காய்ச்சல், ரத்த மிருமை, தூக்க மின்மை, கபாலக்கொதிப்பு, மூளை வரட்சி, சோம்பல், கை கால் அசதி, தாது பலகீனம், இந்திரியப்பை ரணம், சொற்பன ஸ்கலிதம், தாது அற்றுப்போதல், இந்திரிய ஒழுக்கு முதலிய வியாதிகளை கண்டிப்பாய் தீர்க்கும், தவராது. தாதுவைக்கட்டி, சரீரதிடத்தைக் கொடுக்கும். ஆண்மை, வீரியம், அடங்காது. மகா அருமையான மருந்து.

குறிப்பு:—சதை பிடிக்காமல் கணச்சூடு, அஸ்தி சூட்டினால் எலும்புருக்கி ரோகமுள்ள குழந்தைகளும் ஆரம்ப வெள்ளை, வெட்டை ரோகமுள்ளவர்களும் ரூ 5க்கு 20 நாள் தனி பிரமேக லேகியம் சாப்பிட்டாலே போதும்.

20 நாள் வெள்ளி பஸ்பம் ரூ 20. 20 நாள் பிரமேக லேகியம் ரூ. 10 ஏழைகளுக்கு பாதி விலை.

## வைத்திய ஆசிரியர்:

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

தந்தி விலாசம் 'வேலுசாமி பழனி — சித்த வைத்தியசாலை, பழனி S I Ry

4-ம் பக்கத் தொடர்ச்சி

குறைந்து போகுமென்றா? இராமனுடைய அம்புக்குப் பயந்து தானா வருணன் ஓடிவரவேண்டும்? வருணனுடைய பெருமையும் அறிவும் இருந்தவாறு அழகிதே? தெய்வங்களின் அறிவுண்மையே இப்படியானால் அவைகளை வணங்குவோரின் அறிவைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எல்லாம் ஆரியர் தம் புரளியே !!

வருணன் தன்னைப் பணிந்து உதவிசெய்வதாக வாக்களித்த உடனே இராமனுக்கு அவன்மேல் இருந்த சினம் தணிந்தது. ஆனால் அவன் தான் விட்ட அம்புக்குப் போக்குக் காட்டச் சொன்னான். வருணன், "வடக்கே ஓர் தீவில் என் பகைவராகிய ஆபிர [மகாசூத்திர] சாதியினரான திருடர்கள் உளர். அவர்கள் என் தண்ணீரைத் தொட்டுக் குடிப்பது எனக்கும் பொறுக்க முடியவில்லை, அவர்கள் மேல் அதை விடு என்று சொல்ல இராமன் அந்த அம்பை அவர்கள் மேல் ஏவி அவர்களை அழித்தான், என்னே அநியாயம்!! இராம இராஜ்யம் இராம இராஜ்யம் என்று பலர் ஏமாற்றுவதும் அறியா மக்களும் அதை ஆமோதித்து மதியீனராக நடப்பதும் என்னே. விந்தை! வருணன் சொன்னபடி கேளாமையால் அவனைத் தண்டிப்பதற்கு இராமன் அம்பை அனுப்பினான். வருணன் வந்து பணிந்ததும் அதே அம்பை வருணன் மேல் விடாமல் அவன் சொன்னபடி அவனுடைய பகைவர் மேல் ஏவிக் கொல்வதா? இதுதானா இராமனுடைய நீதி? வெகு அழகு! இராமன் நீதிமானாயின் அந்த அம்பை ஏவி வருணனுடைய உருப்பிலேயே ஒன்றை கெடுத்திருக்கவேண்டும், அன்றி அதற்கு நீதியற்றவனாகிய தன்னுடைய கண்களையோ அல்லது நெஞ்சையோ இலக்காக்கி இருக்கவேண்டும். இரண்டும் செய்யாமல் எங்கோ முன்னைப் பின்னை தெரியாதவர்கள் மேலே அதிலும் தான் எவன் மேல் ஏவினானோ அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு அம்பை ஏவி அவர்களை எதிர்பாரா வண்ணம் கொல்வது எந்த நீதியில் கண்டதோ? மேலும் தனது பகைவர் மேலேயும் வருணன் என்ன குறை சொன்னான்? என்றால் அவர்கள் தன்னுடைய தண்ணீரைத் தொட்டுக் குடித்தார்களாம்! அது அவனுக்குப் பொறுக்க முடியவில்லையாம். நீர்த் தலைவனாகிய வருணக் கடவுளின் அருளை என்னென்பது? இராமனும் வருணனுந் தவித்த தண்ணீர் கொடுக்காத பாவிகள். மற்றும் தன்னுடைய பகைவர் மகா சூத்திரர் என்று சொல்கிறான் வருணன். பண்டித நடேச சாஸ்திரியார் அவ் வகுப்பினரை ,பெரிய சூத்திரர்கள் என்று மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். சூத்திரர்களிலே பெரிய சூத்திரர் வேறு சின்னச் சூத்திரர் வேறா? சூத்திரர்கள் என்ற வகுப்பினர் தண்ணீரைத் தொட்டு எடுத்துக் குடித்த குற்றத்திற்காக வருணனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு இராமன் அவர்களைக் கொன்றான் என்றால் இராமனைப் போலும் பாதகர்களும் உளராவரோ? தண்ணீர் தொடாமல் எடுப்பதெப்படி? சூத்திரர்கள் என்று தாழ்த்தப்படும் மக்கள் தண்ணீர் குடிக்காமல் இருப்பார்களா? இந்தப் பாவிகளுக்காக இக்காலத்திலும் ஆரியர் தம் வீட்டில் ஒரு துளி தண்ணீர்கூட கொடுக்கமாட்டேனென்றும், கொடுத்தால் சேஷம் என்றும் சொல்லுகிறார்களல்லவா!! சேஷம் என்ற வடசொல்லை என்னவோ என்று மயங்க வேண்டாம். சேஷம் என்றால் மிச்சம். பிறர் குடித்து மிஞ்சிய தண்ணீரைஇவர்கள் குடித்தால் அது இவர் தங்களுடைய தொண்டையில் இறங்காமல் போகும் போலும்!! இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

சுகன் வரலாற்றைக் கம்பர் கூறாது மறைத்ததை முன்னரே கூறினோம். இராமன் வருணனை நோக்கி மூன்று நாள் தவம் செய்தான் என்று வால்மீகி கூற கம்பரோ அவன் எழு நாள் தவம் செய்தனன் [பாடல் 6] என்று கூறுகிறார். இராமன் வருணனை நோக்கித் தாமதத்தின் காரணம் என்ன என்று வினவினதாகவும் வருணன் அதற்கு மறுமொழியாக தான் ஏழாவது கடலின் கோடியில் மீன்களுக்குள்ளே வந்த சண்டையை விலக்குவதற்காகப் போனதாகக் கூறினான். [வருணனை வழி வேண்டு படலம் பாடல் 76] என்று கம்பர் புதுக் கதை கட்டி யிருக்கிறார். 'தீர்த்த'; நின் ஆணை ஏழாம் செறிதிரைக் கடலில் மீனின போர்த் தொழில் விலக்கப்போனேன் அறிந்திலேன் புகுந்தது என்றான்.

மீன்களுக்குச் சண்டை நடந்ததாகவும் அதை வருணன் விலக்குவதற்காகப் போனான் என்றும் அதனாலே இராமன் தவம் செய்ததை அவன் அறியாமல் போனதாகவும் கம்பர் கூறுவது வேடிக்கையாகவே இருக்கிறது, வருணனுடைய பெருமை மிக நன்றே! அவனுக்கு இதுதான் வேலை போலும்! கம்பர் இதை எழுதினது வருணனை இகழ்வதற்காகவோ, அன்றி வேறு எதனை கருதியோ? மகா சூத்திரர் என்று வால்மீகி கூறுவோரை கம்பர் அரக்கர் என்று மயங்கக்கூறினார்.

வருணன் நளனைப்பற்றி இராமனிடம் கூறி அவனைக் கொண்டு அணை கட்டச் சொன்னான். என்பதைக் கம்பர் கூறாமல் இராமனே தானே நளனை அழைத்தான் என்று கூறுகிறார். இனிமேற் செல்லுதும்.


# அசல் தாம்பர பஸ்பம்.

## மூன்றே வேளையில் குணம் தெரியும் குணமில்லாவிடில் பணம் வாபீஸ்

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள் சாப்பிட்டால் போதுமானது மற்ற மருந்துகளைப் போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து ,தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து.

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகபபற்றுகருங் குஷ்டம், வெண்குஷ்டம், அரிப்பு நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், குழிப்புண்புரை, கண்டாமாலை,பவுத்திரம் கன்னப்புத்து, யோனிபபுத்து குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், திராதென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

**உங்கள் கவலை தீர்ந்துவிட்டது**

உங்களைப்போலிருந்து கவலை ஒழிந்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்

**நற்சாக்ஷி:** கோலாலம்பூர் கண்டங்கர்பு ரோட்டு பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எஸ். குழந்தைசாமி பிள்ளை 31—10—1928 ல் எழுதினதை பாருங்கள்... ......ஐயா தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வீங்கிருந்த வீக்கங்கள் நீங்கிவிட்டன. நெருப்புப் பட்டபோதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் [illegible] உண்டாகி விட்டது.

12-நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0

# நீரழிவுக்கு

120 புடம் போட்ட கண் அடைக்கும் அப்ரேக் சிந்தூரம்

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8. துவாரங்கள் போட்டு அது நிறைய தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் சொந்தூரம் கொஞ்சம் போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்தி விடும் இதைப்போலவே நீரழிவினால் ஜாஸ்திபோகும் நீரை நிறுத்தியும் நீரில் சர்க்கரையிருந்தால் மாற்றியும் நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்தி மேகம், நீடித்த வெள்ளை இந்திரியம் நீருடன் போவது, பவுத்திரம் முதலிய வியாதிகளை அதி சீக்கிரம் குணப்படுத்துவதில் அனுபவமுள்ளது. பரிட்சித்துபார்க்க வேண்டுமானால் 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

24 நாள் சாப்பிட்டால் போதுமானது 24 நாள் மருந்து ரூ. 20—0—0 12 நாள் மருந்து ரூ. 10—0—0

**அரண்மனை வைத்தியர் S T மாணிக்கம் பிள்ளை,**

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு: நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

# இருமல் இளைப்பு தீர்ந்துவிட்டது

## பழனி ஆர். எம். கே. தாளக பற்பம் சாப்பிடுங்கள்

# இருமலுக்கு கைகண்ட மருந்து

### எவ்வளவு நாட்பட்ட காசம், க்ஷயம், ஈளை, இருமல் இளைப்பு கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இருந்தாலும் சரி இதில் அவசியம் தீரும்

பித்த நீர் சிரசுக்கேறி கபாலம் கொதித்தே 8 வித பீனிசரோகம் வருகிறது பீனிசரோகம் முற்றிப்போனால், 8 ம் க்ஷயம் 8 ம் இருமல் 16 ம் இளைப்பும் வருகிறது.

நீங்கள் இருமலினால் என்ன கஷ்டப்பட்டாலுஞ்சரி எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டு இருமல் தீராதிருந்தாலுஞ்சரி உங்கள் இருமலை 6-நாளில் கண்கூடாய் நிறுத்திவிடும்; அது எத்தனை வருஷத்திய ரோகமாயிருந்தாலுஞ்சரி பறந்துவிடும்; சீதள மழை பனிகாலங்களில் வரும் ஈளை, இருமல், இரைப்பு, மந்தாரகாசம், ரத்தகாசம், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, அஜீரணம் மார்புவலி, விலாவலி, முதுகுத்தண்டுவலி, சிறுப்பீனிசம், மூக்கில் ஜலம் ஒழுகுதல், தும்மல், வயறு உப்பிசம் தலைவலி, காதுகுடைதல், ஜலதோஷம் ருசியின்மை, நெஞ்சில் தொண்டையில் கர்முர் என்ற சப்தம், ஊசியால் கத்துதல் கூவுதல் நுரையீரல், தாபனம் முதலியவை இதில் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்ட மகா அருமையான மருந்து.

20 நாள் தாளக பற்பம் அனுபானம் தாளிசபத்திரி சூரணத்துடன் விலை ரூ. 25.

வியாதிகளுக்கு ரூ. 12—8—0

# சர்டிபிகேட்

### நான் பட்ட கஷ்டத்திற்கு அளவே இல்லை

அன்புமறவாத அய்யா ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, டாக்டர் அவர்களுக்கு சிங்கப்பூர் ஹாஜிலேயின் 48. நெ. தொப்பிக்கடை செ. அப்துல் ஹமீது எழுதுவது:—

26—1—27-ல் தாங்கள் அனுப்பிய தாளக பஸ்பம் 6 நாள் சாப்பிட்டு 7 வது நாள் தலைமுழுக இருமலும், கஷ்ட சுவாசமும் நிவர்த்தியாய் விட்டது. இரண்டு வருஷம் நான்பட்ட கஷ்டத்துக்கு அளவே இல்லை. தங்களுடைய தாளக பஸ்பத்தால் என் வியாதி சொஸ்தமானபடியால் என் மனம் ஆனந்தமடைகிறது. இந்த தாக்கல் எழுத வெகுநாள் சென்றுவிட்டதைபற்றி மனவருத்தப்படவேண்டாம். என் சினேகிதர் ஒருவருக்கு இரண்டு வருஷமாய் இருமலும் கஷ்ட சுவாசமும் இருப்பதால் 20 நாள் சாப்பிடக்கூடிய தாளக பஸ்பம் வி. பி. யில் அனுப்பக்கோருகிறேன்.

(Sd.) செ. அப்துல் ஹமீது, சிங்கப்பூர். 6—12—28.

### 20-வருஷத்திய இருமல் இளைப்பு சுகம்.

எனது தகப்பனாருக்கு இருமல், இளைப்பு 20 வருஷமாயிருந்தது. தங்கள் தாம்பர பஸ்பமும்; தாளக பஸ்பமும் சாப்பிட்டு பூரா சொஸ்தமடைந்துவிட்டது. எங்களூரில் அழுகிக்கிடந்த குஷ்டரோகியும், தங்கள் தாம்பர பஸ்பம் சாப்பிட்டு பூரா சொஸ்தமடைந்ததையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஆகையால் என் வியாதிக்கும் மருந்து வாங்கிச் சாப்பிட நேரில் வந்தேன்.

22—12—28 ந. நா. இ. முகம்மது காசிம், புதூர், இளையாங்குடி. P. O.

# வைத்திய ஆசிரியர்:

# ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

"தந்தி விலாசம்: வேலுசாமி" பழனி சித்த வைத்தியசாலை, பழனி, S I Ry

3-ம் பக்கத்து தொடர்ச்சி

யவைகளை வைத்துக் கொண்டிருந்த சாஸ்திரிகள் பண்டிதர்கள் ஆகிய இவர்கள் பலநியாயங்களைக் கொண்டு சமாதானமும் சொல்லிவந்தார்கள் என்றாலும் அவர்களைப்போன்ற சந்நியாசியென்று ஆச்சாரி சுவாமிகளை நினைக்கும்படியாய் தங்களுக்குநான் இக்கடிதம் எழுதவில்லை. சுவாமிகள் செய்யும் அன்னப் பிச்சை சனாதன தருமத்தின் விதிகளுக்கு அடங்கியிருக்கிறதா? சுவாமிகள் அக்கிராரத்தில் செய்யப்படும் அன்னப்பிச்சையை அனுபவிக்கும் பார்ப்பனர்கள் சனாதன தருமசாஸ்திரத்தின் விதிவிலக்குகளை அனுஷ்டித்து வருகிறவர்கள் தானா? சனாதன தருமத்திலுள்ள அன்னப்பிச்சையின் அவசியம் - அதை ஒழுங்குபடுத்தின முறையின் உண்மைகள் இப்பொழுது சுவாமிகளால் நடத்தப்படும் அன்னப்பிச்சையிலிருக்கிறதா? தரும சாஸ்திர விதிக்குவிரோதமான அன்னப்பிச்சையால் சனாதன தருமத்திற்கு சத்திய நெறியில் எதாவது நன்மையுண்டாகுமா? சனாதன தருமத்தின் தருமசாஸ்திர நெறியில் நிற்காதவர்களுக்குக் கொடுக்கும் தானமும் பலனில்லாமல் கொடுப்பவனின் உயர்வுங் கெட்டு வாங்குகிறவனும் கொடுப்பவனும் கீழ் நிலையையடைந்து நரகம் அடைகிறார்கள் என்னும் சனாதன தருமத்தின் சாஸ்திரமும் கலியுகத்திற்கு பிரமாண மென்று சொல்லப்படுவதுமான பராசரஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்பதைத் தள்ளிவிடலாமா? தானபாத்திரம் சொல்ல வந்த தர்ம சாஸ்திரம் வேத முணர்ந்தவனைச்சிறிது தக்கோனெனவும் தவமுடையோனும் சிறிது தக்கோனென்றும் யார்வாயில் சூத்திரனின் அன்னம் விழுகிறதில்லையோ அவன் தக்கோருளெல்லாஞ் சிறந்த தக்கோனும் என்று பராசர்ஸ்மிருதியில் வசிஷ்டஸ்மிருதியின் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறதை எங்கே தள்ளுவது? நாட்டுக்கோட்டை நகரத்து சிவ கைங்கர்யம் செய்யும் பிரபுக்களும், ராஜாக்களும், சோழதேசத்து மிராஸ் பண்ணையர்களும், தென்தேசத்து ஜெமீன்தார்களும், கொங்குநாட்டு மிட்டாதார்கள், பட்டேக்காரர்களும் இன்னும் அவ்விடங்களிலெல்லா முள்ளபணக்காரர்களும் வியாபாரிகளும் சூத்திரர்களென்றே பாப்பார சபைகளிலெல்லாம் தீர்மானமாகிறது. பணம் வாங்கிக் கொள்ளுவதொன்றைத்தவிர்த்து மற்ற நடவடிக்கைகளிலெல்லாம் அவ்வாறான அனுபோகத்தையே காட்டுகிறார்கள். இந்த சூத்திரர்களின் அன்னம் எந்த பிர்மணனின் வாயில் விழாமலிருக்கிறதோ அவனல்லவோ சற்பாத்திரம் அப்படியிருக்க இந்த சூத்திரர்களிடம் பணம் வாங்கி பார்ப்பனர்களையெல்லாம் சற்பாத்திரத்திற்கு அருகதை யில்லாதவர்களாக ஏன் செய்ய வேண்டும்? சந்நியாசிக்கோ ஜாதியில்லை. அதிலும் எல்லாம் பிர்ம சொரூபமென்று நினைக்கும் சங்கரருக்கு ஜாதி பேதமே இருக்கப்படாது தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமாக நடந்து. அன்னிய பாஷைகளைப் படித்து பிரஷ்டனாகவும், சண்டாளனாகவும் சாஸ்திரத்தின் விதியால் தள்ளப்பட்ட பார்ப்பானுடமிருந்து பிச்சை பண்ணும் ஆச்சாரி சுவாமிகளுக்கு ஒத்துக் கொண்ட மனமும் அவர் ஞான விதியும் மேற்ச் சொன்ன பிரபுகள் பிச்சையை உண்ணும் சுவாமிகள் அவர்களையும் உடனிருத்தி பிச்சையுண்டால் சுவாமிகளின் மனம் எதனால் ஒத்துக்கொள்ளாது? அவர்களின் ஞானவிதி எப்படி பாதிக்கப்படும்? என்கிற விஷயங்களையும் சுவாமிகளிடம் தாங்கள் போனால் தெரியப்படுத்துவதற்காகவே இக்கடித மெழுதப்படுகிறது.

சம்சார புத்திராதிகளின் மீது ஆசையுடையவனாய் உலகத்தாருக்குக் காணப்பட்ட போதிலும் அந்தரங்கத்தில் அவர்கள் மீது ஆசையில்லாதவனாய் தேகேந்திரிய வியாபாரங்களுக்குத்தான் சாட்சியென்று எண்ணிக்கொண்டு கோரிக்கை யில்லாமலே சௌசஸ்நானபோஜனாதி சகல காரியங்களையும் செய்துகொண்டு உலக உபகாரப் பதகிரம்சுவாமிகளிடமிருக்கப்பட்ட சர்வாதிகாரியங்களைப் பற்றி தாங்கள் சுவாமிகளிடம் கேட்டுவந்து சொல்லவேண்டியதில்லை. இதற்கு முன்னிருந்த சங்கராச்சாரிகளிட சர்வாதிகாரியாகவிருந்து தொடர்ந்து வந்திருக்கும் சர்வாதிகாரியங்களைப் பறறினயோக்கியதை நாடெங்கும்தெரிந்ததுபோலவே பார்ப்பார சமூகத்திற்கும் தெரியும்.

பிர்மமே ஆத்மாவென்றும் ஆத்மாவே பிர்ம்மவென்றும தத்துவ விசாரணையினால் தெரிந்து சமரச ஐக்கிய பாவத்தை யடைந்து சகல சங்கல்பங்களும் நசித்து சகலமும் மறந்து தானே தானுங் கேவல சாட்சி மாத்திரனாயிருக்கும் விருத்தியை பிரஞ்ஞையை அஸ்திவாரமாகக் கொண்டதே சங்கரர் மதம். அதை அடைவதற்கே சனாதன தருமம் சொல்லுகிறது. அந்த சனாதனதருமத்தைக் காக்கவே பிராமணன் பிறந்தான். அந்த சனாதனதருமத்தின் பிரஞ்ஞையை அடைவதற்கு முயற்சி செய்வதே பிராமணன் தொழில். அதை அடைந்தவனே பிராமணன். அந்த மகான் மாவாகிய பிராமணன் அன்னப் பிசசைக்கு வந்தால் இல்லறததான் தன் குடும்பத்தை யேனும் வருத்தி அவனுக்கு அன்னதானம் செய்யவேண்டுமென்றே தரும சாஸ்திரங்களெல்லாம் சொல்லுகின்றன. சுவாமிகளும் இதை மருக்கமாட்டார். அவ்விதமான பிராமணர்கள் சுவாமிகளுடன் கூடியோ போகப்பட்ட ஊர்களிலிருந்தோ சாமிகளின் பிச்சையை உண்கிறவர்கள் எத்தினை பேர்களிருக்கிறார்கள் என்பதையும்;

நானா விசித்திர நாமரூபங்களுடன் காணப்படும் பிரபஞ்சம் மாயா கற்பனையென்றும் அது அசத்தியமென்றும் தெரிந்து பிரபஞ்சத்தின் ஆசையை விட்டு சதா ஆத்மத்தியானம் செய்து கொண்டிருக்கும் பிராமணர்கள் சுவாமிகளோடும் போகும் ஊர்களிலும் எத்தினைபேர் பிச்சை உண்கிறார்கள் என்பதையும்.

சகல எண்ணங்களையும் சகல சந்தேகங்களையும் சர்வ பிரபஞ்சங்களையும் சர்வ சாஸ்திர சித்தாந்தங்களையும் விட்டு விட்டு லோகவாசனை, சாஸ்திர வாசனை, தேக வாசனை யென்னும் வாசனைத் திரவிய மில்லாதவனாய் சதா ஆத் மாநு சந்தானம் செய்து கொண்டிருக்கும் பிராமணன் ஸ்ரீ சங்கரர் கூடவும் அவர்கள் போகும் ஊர்களிலும் எத்தினை பேர்கள் இருந்து அந்தப் பிச்சையை உண்கிறார்கள் என்பதையும்.

சம்சாரத்திலிருந்தும் சம்சார பந்தங்களில்லாதவனாயும் வித்வாம்சனாயிருந்தும் வித்வாம் சனென்னும் கர்வமில்லாதவனாயும் பரிசுத்த சித்தனாயிருந்து சம் சிருஷ்டி யுடையவனாய் எந்த எண்ணங்களுமில்லாமலிருக்கும் எத்தினை பிராமணன் சுவாமிகளுடனும் போகுமூர்களிலும் சுவாமிகளின் பிச்சையை உண்கிறார்கள், என்பதையும்.

தேகேந்திரியங்களே நானென்னும் அகங்காரத்தைவிட்டு தேகத்திற்குள் ளேருயுருக்கும் ஆத்மாவே நானென்று நினைக்கப்பட்ட அப்பியாச விசாரணையிடம் சென்று அகங்கார ரூபமாகிய மலின வாசனையைவிட்டு தேவதா உபாசனைகளை நிவர்த்திசெய்து சதா ஆத்ம நிஷ்டைக்கு ஆசைப்பட்ட எத்தினை பிராமணன்சுவாமிகளிடமும் அவர் செய்யும் சமாராதனையிலும் இருந்தார்கள் என்பதையும்

சரீர சம்பந்தமான மூப்பு, மரணம் ஆபத்து, சம்பத்து, தாரித்திரியம் முதலானவைகள் சம்பவித்தபோதிலும் அவைகள் தேகத்திற்கே யன்றி ஆத்மாவிற்கில்லை யென்று நிர்ப்பயமாய் பிர்ம்மானந்த சொரூப நிச்சியாத்திற்கு சென்று கொண்டிருக்கும் பிராமணர்கள் எத்தினை பேர்கள் சுவாமிகளின் பிச்சையைத் தினமும் உண்ணுகிறார்கள் என்பதையும்

கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, சகப்பு, துவர்ப்பு இனிப்பு ஆகிய ஆறுவித ருசி பேதங்களும் ருசி யில்லாத அன்னமும் தெய்வாதீனமாய் எவ்வாறு பிராப்தித்தபோதிலும் அதில் ருசி அருசி விசாரிக்காமல் சம பாவத்துடன் புசித்து மைசூர் கொட்ரசமும் மலையாளத்து மொளகுரசமும், சோழ தேசத்துத் தெளிவு ரசமும், கொங்கு நாட்டுப் பருப்பு ரசமும், நாட்டுக் கொட்டை நகரத்து காய்கறிகளின் சூப்பு ரசமும், பலவகைப் பார்ப்பார்களின் பெருங்காய ரசமும் முதலியவைகளை பற்றி மனம் வாடாமலிருக்கும் பிராமணர்கள் எத்தினை பேர்கள் சுவாமிகளின் பிச்சையில் கலந்து உண்கிறார்கள் என்பதையும் ஆச்சாரி சுவாமிகளிடம் தெரிந்து வாருங்கள்.

அறம், பொருள், இன்பம், நாணம், பயிர்ப்பு, அச்சம், இவ்வாறையும் தானத்திற்கு ஆதாரமென்று கூறுவார்கள். அதை அற நிலைத்தானம், பொருள் நிலைத்தானம், இன்ப நிலைத்தானம், நாண நிலைத்தானம். பயிர்ப்பு நிலைத்தானம், அச்ச நிலைத்தானம் என்று சொல்லப்படும். கோபத்திற்கு அஞ்சியாயினும் இம்சைக் குத்தப் புலதற்காயினும் தீங்கு செய்வார்களென நினைத்தாயினும் கொடுக்கப்படுவதற்கு அச்சநிலைத் தானமென்று பெயர். ஆதலால் இப்போது அதுபோலவே தான் வக்கீல் தயவிற்கும் உத்தியோகஸ்தர்கள் பயத்திற்கும், மற்ற பார்ப்பனர்களால் உபத்திரவ மில்லா திருப்பதற்குமே பல ஊர்களில் சங்கராச்சாரிக்குக்கொடுக்கும் தானமாகவிருக்கிறது. அற நிலைத் தானத்தைப் பெறக்கூடிய சங்கராச்சாரி சுவாமிகள் இந்த மாதிரியான அச்ச நிலைத்தானத்தைப் பெருவதற்குப் பிறயத்தினம் செய்து அதைப்பெற்று தங்கள் வகுப்பு சமூகங்களை இரட்சிப்பது சனாதன தருமத்தை நிலைநிருத்தக்கூடிய உயர்ந்த மார்க்கம் ஆகுமா? இதைவிட சனாதன தருமத்தை நிலை நிருத்த வேறு வழியே இல்லையா? என்பதையும் கேட்டுவாருங்கள்.

சனாதன தருமத்தின் குருவான ஆச்சாரி சுவாமிகள் ஊர் ஊராய்ப்போவதும் தவசிலிருந்தும் பூசைசெய்தும் உதகத்தைக் காப்பாற்றுவதாகப் பணத்தை வாங்குவதும் பார்ப்பானுக்கே சோறு போடுவதும் மிச்சப்பணத்தை சர்வாதிகாரிகள் கைப்பற்றிக்கொள்ளவும் அதனால் மடத்தில் சண்டையுண்டாகவும் சுவாமிகளின் தபசும் பூசையும் பாளடையவும் பின் பார்ப்பாரவைதீக வக்கில்கள் போய் சமாதானம் பண்ணவும் இவ்வித காரியங்களில் தானா சனாதன தருமத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்க வேண்டும்? இத்த மாதிரியான சனாதன தருமம் இருந்தால் தான் என்னலாபம் அழிந்தால் தான் என்ன நஷ்டம் என்பதையும் தெரிந்து வாருங்கள். அடுத்த கடிதத்தில் இன்னும் சிலதை தெரியப்படுத்துகிறேன்.

---

## பொன்மலை.

---

### இராமாயண காலட்சேபம்

திருச்சி பொன்மலையில் இராமாயண காலட்சேபம் மிகுதியாய் நடைபெற்று வருகிறதென்றும் சகோதர தொழிலாளர் பகலெல்லாம் ஓயாத வேலை செய்து விட்டு இரவில்2 மணி வரைக்கும் பழைய குப்பையாகிய ராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டு வீணே தங்கள் காலத்தையும் பொருளையும் செலவழிப்பதை இனியாவது முணர்ந்து பழைய குப்பைக்கும் பார்ப்பான் வார்த்தைக்கும் செவி கொடுத்து தங்கள் சுய அறிவைக் கெடுத்துக் கொள்ளாம லிருக்கும்படி பொன்மலைச் சகோதரர்களை வேண்டிக் கொள்வதாய் எஸ். ராயப்பன் எழுதுகிறார்.

---

வேதமென்பது
சூது நிறைந்தது.

நீங்கள் என்றும் அழியாத இளமை பருவத்தை அடையவேண்டுமானல்
பழனி, சி எம். சாமி, மகா வீரிய

# தங்க பஸ்பம்

சாப்பிடுங்கள், தாது புஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர் பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம் பச்சிலை மூலிகையினாலே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை அபார தாதுபுஷ்டியும், பலமும் பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும், இல்வாழ்வில் அதி யற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர கடுப்பு நீரிழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும்
24 நாளைக்கு விலை ரூ. பத்து அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி நித்தியானந்த வைத்திய சாலை பழனி S. I.

# ஞானசூரியன்.

மக்கள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபடவேண்டுமானல், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானல், இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள—கடவுளாலும், கடவுளைக் கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்பால் அடிமை, கடவுள் பெயரைச்சொல்லிப் பணம்பறிக்க ஏற்பட்ட பார்ப்பனக் கொட்டைகளாகிய கோயில்கள், பார்ப்பன ஆதிக்கமும் செல்வாக்கும் குறையாதிருக்க ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள், இருப்பார்க்கு புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதாயும், இறந்தார்க்கு மோட்சத்திற்கு நேர்வழி காட்டுவதாயும் ஏய்த்து, வயிர் வளர்க்க கையாளப்பெறும் புரோகிதம், முதலியவைகளின் ஆபாசங்களை மக்கள் உணரவேண்டும். உணர்வார்களானல் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு, மூடநம்பிக்கையிலிருந்தும், மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் தாங்களாகவே கரையேறுவார்கள்.

இவ்வுணர்ச்சியை மக்கட்கு உண்டாக்கும் பொருட்டே மூடிமூடி வைக்கப்பட்ட கடவுள் வரமெனப்படும் நூற்களின் ஆபாசங்களை நன்கு ஆராய்ந்த நுண்ணறிவாளர்களது துணைகொண்டு பல அறிவு விளக்க நூற்களாக மிகக் குறைந்த விலைக்கு வெளியிடக் கருதி—"குடி அரசு பதிப்பகம்" என்னும் பெயரால் ஒரு வெளியீட்டுக்கழகம் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக "ஞான சூரியன்" என்னும் அரும்பெரும் நூலை 2000 காபிகள் அச்சிட்டு, அதன் முன் விலையின் பாதி விலையாகிய 0—8—0க்குக் கொடுத்தோம் சென்ற ஏழெட்டு மாதங்களுக்குள் அவ்வளவு பிரதிகளும் செலவாய் விட்டமையால் தமிழ்நாட்டில் அப்புத்தகத்திற்குள்ள மதிப்பை உணர்ந்து பொருள் நிலை இடந்தராத ஏழைகளும் வாங்கிப்படித்து பயனடையுமாறு 4000 பிரதிகள் அச்சிட்டு 0—4—0 விலைக்குத்தர முன்வந்துள்ளோம்.

செல்வம் படைத்த சீமான்களும் நமது இயக்கத்தில் நோக்க முள்ள அன்பர்களும் நூற்றுக்கணக்காக இப்புத்தகத்தை வாங்கி ஏழைகளுக்கும் மாணவர்களுக்கும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

பிரதி 1-க்கு விலை 0—4—0

தபால் செலவு வேறு.

## இராமாயணத்தின் ஆபாசம் 0—4—0.

முன்பணத்துடன் வரும் 10 புஸ்தக ஆர்டர்க்கு ஒரு புஸ்தகம்இனும்.

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாடு சொற்பொழிவு 0—2—0

## இங்கிலீஷ் ஸ்வபோதினி.

நூதன மாதப் பத்திரிகை—ஆங்கிலத்தை எளிய நடையில் போதிப்பது. தமிழில் உச்சரிப்பும் அர்த்தமுங்கொண்டது. தேசச் செய்திகள், கதைகள், சம்பாஷணைகள் இலக்கணப் பகுதிகள், வியாபாரப் பகுதிகள், கோர்ட்டு செய்திகள், யாவும் அடங்கியவை. ஆங்கிலத்தை அறிந்து கொள்ள இம்மாத சஞ்சிகை இன்றியமையாதது.

ஆறுமாத சந்தா உள்நாடு ரூ. 1-0-0
" வெளி நாடு " 1-4-0

சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பி பத்திரிகையைப் பெறலாம்.

வி. என். ரங்கசாமி அய்யங்கார்
திருநாவுக்கரசு பிரஸ்,
ஆரணி, வட அற்காடு

## முன்னேற்றம்.

இஃது
சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி இதன் வருடசந்தா ரூ. 5-0-0 அல்லது மலாய் நாட்டிற்கு டாலர் 3.

விலாசம்:— மானேஜர்,
"முன்னேற்றம்"
192, [illegible]

## மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. எ. அய்யாமுத்து.
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

## ரூ. 500 இனும் எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.
மானேஜர், தாபற்பெட்டி 92
சென்னை.

## மதன லீலா படங்கள்.

64 வகை சிற்றின்ப ரகசிய உருவ ஒரிஜினல்போட்டோகிலேஸ் படங்கள் சதிபதிகளும் தனி மாதர்களும் கூடியது. அழகிய ஆல்பம் உள்படவிலை. 5—0—0

சே. ஜி. ஸ்டோர்,
வேப்பேரி, மதராஸ்.

## குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | 0—4—0 |
| ஞானசூரியன் ... | 0—4—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| மனு நீதி மருமம் ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. ... | 0—2—0 |
| திருக்குறள் ... | 0—8—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு ... | 0—2—0 |


8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

ஈரோடு

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்

விலை ரூபா 1--8--0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு

முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இருபது மாதத்தில மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தேன் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

(11) மைலாப்பூர், சென்னை

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0 6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.

F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.

இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

**சர்: டோராப் ஜே டாட்டா. Kt.**

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ...ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ...ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜுன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

## தமிழரசு.

### ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.

உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,

31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


**அடுத்த ஜென்மம் என்பது முடிச்சுமாறிகள் பேச்சு.**

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.